# கன்னியாகுமரிக்

# கல்வெட்டுகள்


பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன்

கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை

1972

முதற் பதிப்பு. 1972.

த. நா. அ. தொ. ஆ. துறை எண் 22

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் - முதற் தொகுதி

நடன. காசிநாதன்

விலை : ரூ.

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்

அச்சிடப்பெற்றது.

# முன்னுரை

தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் படியெடுத்து அச்சிட வேண்டும் என்ற தமிழக அரசின் ஆணைக்கிணங்க முதலில் சென்னையில் உள்ள கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு, அச்சிடப்பட்டன. அதன் பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்வெட்டுகள் சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்னர் திருவிதாங்கூர் கல்வெட்டுப் பிரிவினரால் படியெடுக்கப்பட்டு, ஒரு பகுதி அச்சிடப்பட்டு வெளியாகின. எஞ்சியவை அச்சிடப்படவில்லை. அவைகளை அவர்களிடமிருந்து பெற்று அச்சிடலாம் என்று இத்துறை விரும்பியபோது அவைகள் அழிந்த நிலையில் இருக்கின்றன என்ற செய்தி கிடைத்தது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்வெட்டுகளைத் திரும்பவும் படியெடுக்க வேண்டியது அவசியமாயிற்று. அதன்படி படியெடுத்ததில், அகத்தீஸ்வரம் வட்டத்தில் மட்டும் முன்பு திருவிதாங்கூர் கல்வெட்டுப் பிரிவினர் படியெடுத்ததைக் காட்டிலும் மேலும் சுமார் 200 புதிய கல்வெட்டுகள் இத்துறையால் படியெடுக்க முடிந்தது.

அகத்தீஸ்வரம் வட்டத்திலிருந்து படியெடுக்கப் பெற்ற கல்வெட்டுகள் அனைத்தும் அச்சிடப்பட்டு இரு தொகுப்புகளாக இப்பொழுது வெளியிடப்படுகின்றன. முதல் தொகுதி அகத்தீஸ்வரம், ஆச்சிராமம், இடலாய்க்குடி, ஈத்தாமொழி, கரியமாணிக்கபுரம், கருப்புக் கோட்டை, கன்னியாகுமரி, கிருஷ்ணன் கோயில், கொச்சைபிடராம், கொட்டாரம், கோட்டாறு, சாமித்தோப்பு, சுசீந்திரம் ஆகிய ஊர்களிலிருந்து படியெடுக்கப் பெற்ற கல்வெட்டுகளையும், இரண்டாம் தொகுதி சோழபுரம், தேவகுளம், தேரூர், நல்லூர், நாகர்கோயில், பறக்கை, புதுக்கிராமம், புரவசேரி, வடசேரி, வடிவீசுவரம் ஆகிய ஊர்களிலிருந்து படியெடுக்கப் பெற்ற கல்வெட்டுகளையும் கொண்டதாக அமைந்துள்ளன.

சோழ மன்னர்கள் முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் இராஜாதிராஜன், முதலாம் குலோத்துங்கன்; பாண்டிய மன்னர்கள் சுந்தரபாண்டிய தேவர், மாறவர்மன் ஸ்ரீ வல்லபன், பராக்கிரம

பாண்டிய தேவர்; கேரள மன்னன் ஸ்ரீ வீரரவிவர்மர் என்கிற திருப்பாப்பூர் மூத்த திருவடி ஆகியோரது காலத்திய கல்வெட்டுகள் இவ்விரு தொகுதி களிலும் அடங்கும்.

இத்தொகுதிகளில் உள்ள கல்வெட்டுகள் முன்னரே வெளியிடப் பட்டிருந்தால் அவற்றுக்கு முன் பதிப்புக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. முன் வெளியிட்டவர்களது படிப்புக்கும் எங்களது படிப்புக்கும் உள்ள மாறு பாடுகள் அடிக்குறிப்புகளில் தரப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் காணப் படும் ஒரு சில குறியீடுகளுக்கு ஆங்காங்கே விளக்கம் தரப்பட்டுள்ளன. சிலவற்றுக்கு அப்படியே அந்தக் குறியீடுகள் அச்சிடப்பட்டுள்ளன. அகத்தீஸ்வர வட்டத்திலுள்ள ஊர்கள் அகர வரிசையில் பிரிக்கப்பட்டு அதற்கேற்ப அச்சிடப்பட்டுள்ளன. பொதுவான தொடர் எண்ணும், ஒவ் வொரு ஊரிலும் எத்தனைக் கல்வெட்டுகள் இருக்கின்றன என்று அறிய ஊர்க் கல்வெட்டு எண்ணும் தரப்பட்டுள்ளன. குறிப்புரையில் கல்வெட் டில் காணப்படும் கருத்து சுருக்கி எழுதப் பெற்றுள்ளது.

அன்று இத்துறையில் கல்வெட்டாய்வாளராகப் பணிபுரிந்த திரு. சி. ஜே. அமலநாதன் அவர்களும், யானும் இம்மாவட்டத்துக் கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளோம். திரு. சி. ஜே. அமலநாதன் அவர் களுக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். என்னை இம் மாவட்டத்துக் கல்வெட்டுகளைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடுத்தி ஐயம் ஏற்பட்டபொழுதெல்லாம் அதை நீக்கி, ஊக்கம் அளித்திட்ட இத்துறையின் இயக்குநர் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டவன். இக்கல்வெட்டு களைப் படித்து, அச்சிடும் பொழுது பிழைகள் திருத்தி உதவிய இத்துறையின் கல்வெட்டாய்வாளர்களான திரு. கு. தாமோதரன், திரு. அ. அப்துல் மஜீத், திரு. ச. ஹரிஹரன், திரு. மா. சந்திரமூர்த்தி ஆகியவர்களுக்கும் எனது நன்றி. இத்துறையின் அச்சுக்கோப்பாளர் திரு. சீ. மதனகோபால், ஊக்கத்தோடு பணிபுரிந்து இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுதவியுள்ளார். அவருக்கும் எனது நன்றி.

இந்நூல் அச்சிடுகையில் தேவைப்பட்ட சில குறிப்பு நூல்களை அளித்து உதவி புரிந்த சென்னை கன்னிமாரா பொது நூல் நிலையத்தாருக்கும் சென்னைப் பல்கலைக்கழகப் பொது நூல் நிலையத்தாருக்கும் எம் நன்றி.

**நடன. காசிநாதன்.**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இ. க. ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் தெற்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப்பகுதி மட்டும் உள்ளது.

கல்வெட்டு :

1 . கலம் யாண்டு எட்டாவது முதல் அந்தராயம்
2 . ண்ண மடமும் [ஊட்டுக]வென்றுந் திருவாய் மொழிந்த[து]
3 . . . . . . . . . . . . . . . [1]

1. மற்ற பகுதிகள் சிதைந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 12 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இ. க. ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீவல்லபன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் தெற்குச் சுவரில் உள்ள முதல் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் முதற் பகுதி மட்டும் உள்ளது. அதுவும் சிதைந்து உள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமடந்தையும் ஜயம[ட[1]]ந்தையுந் திருப்புயங்களிலினி திருப்ப இருநில . .

2 [புரந்து] செங்கோலுடன் வளர மன்னிய வீரஸிஂஹாஸனத்து [உ]லகமுழுது . .

3 யிலினுள்ளால் அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிக் கட்டிலி . .

---

1. இவ்வெழுத்து கல்வெட்டில் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீவல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் - உண்ணாழியின் தெற்குச் சுவரிலுள்ள அதிட்டானப் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . [ட]லே யெல்லையாகப் பார் மு[ழு] . .

2 . வல்லப தேவர் மாடக்குள . .

3 . . ன்மிகள் செய்யத் திருவாய் . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | [2 + 1] ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. [1124] |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி.க.தொ. 46/1086 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீ வல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் : அகத்தீச்வரர் கோயில்—உண்ணாழியின் தெற்குச் சுவரில் உள்ள பட்டிகை.

குறிப்புரை : புறத்தாய நாட்டு திருவகத்தீச்வரமுடைய மஹாதேவருக்கு நித்த நிமித்தங்கள் நடத்துவதற்கு நூற்றுக்கு மேற்பட்ட மாடைகள் தானமாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ . . . . . . . . . . . .

2 யிலே வருமுடிசூடித் தென்குமரி முதலாகத் திரைக்கடல் கரையெல்லையாகப் பார்மு . . /[1] . . ருடன் வீற்றிருந்தருளி மாமுதல் . . / . [ே]காலுடன் வளர் வீரஸிம்ஹாஸனத்து உலகமு . . .

3 டைய பாண்டியராஜனில் எழுந்தருளியிரு[ந்]து புறத்தாய நாட்டுக் குமரித்திருவகத்தீஸ்வரமுடைய மஹா . . / . . [இர]ண்டாவதின் எதிராமாண்டு . . / . . டு வேண்டும் நித்தல் நிவந்தங்களுக்கு இறுப்பதாக . . .

4 . . . . றி வைக்க [க]ாட்டிக் கம்பை நாடாழ்வான் நமக்குச் சொன்னமையில் நாட்டாற்றுப் போக்கு வ்யூஹதேயம் . . / . . ல்லிலுஞ் செம்பிலும் செ . . / . . தியில் மாடை நூற்றைம்[பத]ரையுந் தேவதான இறையி . . .

5 தினால் வந்த திருமுகப்படியும் புரவுவரி திணைக்களத்து முகவெட்டி ஆலங்குடையான் எழுத்தி . . / . . களத்து முகவெட்டி யகம் . . / . . ஆயக்குடையான் எழுத்தினாலும் புரவுவ . . . .

1 இக்குறியிட்டுள்ள இடத்தில் ஒவ்வொரு வரியிலும் கல்வெட்டின் சிறு பகுதி காணவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சிஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| மன்னன் : | — | | |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் தெற்குச் சுவரில் உள்ள இரண்டாம் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப்பகுதி மட்டும் உள்ளது. அகத்தீச்வரர் கோயில் மகா தேவர்க்கு நித்த நிவந்தங்கள் செய்வதற்கு இறையிலியாக நிலம் அளித்ததைக் குறிக்கிறது. இவ்வூர் கல்வெட்டு எண் 14-இல் பிரமதேயம் முன்னூற்றுவமங்கலம் குறிப்பிடப்படுவதால் இக்கல்வெட்டும் அதன் தொடர்ச்சியாக இருக்கலாம்.

கல்வெட்டு :

1 . . றயிலி இட்ட நாட்டாற்றுப் போக்கு முன்னூற்றுவமங்கலத்துச் செம்பாதியுங் . .

2 . து முதல் இறையிலி இட்ட இவ்வூர்ச் செம்பாதியுங் கொண்டு திருப்படி மாற்று உள்ளி . .

3 . [ள]கக்கும் அந்தராயம் உட்பட இறையிலியாகப் பெறவேண்டுமென்று இத்தேவர் கெ . .

4 . [ர]முடைய மஹாதேவர்க்குத் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டும் நித்த நிவந்தங் . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 12 ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இ. க. ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீவல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் தெற்குச் சுவரில் உள்ள இரண்டாம் பட்டி.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது. மஹாதேவர் கோயிலையும் நம்பிராட்டியையும் இது குறிக்கிறது. இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் நம்பிராட்டியார் பாண்டியன் ஸ்ரீ வல்லபனின் தேவியாக இருக்கலாம்.

கல்வெட்டு :

1 . எழுத்தினாலும் வரியிலிட்டு வந்த உள்வரியி . .
2 . உடைய மஹாதேவர் கோயிலில் நம்பிராட்டியார் . .
3 . காயிலுடைய சாத்தன் நாராயணனை திருவகத் . .
4 . னாலும் புரவுவரிதிணைக்கள நாயகம் பொன்பற் . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இ. க. ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| மன்னன் : | — | | |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் தெற்குச் சுவரில் இரண்டாம் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப்பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . காச்சடைய பஊரான திருபுவனச்ச . .
2 . ட்டாற்றுப் போக்கு ஸ்ரீஹூதேய . .
3 . வரியிலார் எழுத்தினுல் உள் . .
4 . ம் புரவுவரி தினைக்கள நாய . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீவல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் தெற்குச் சுவரில் இரண்டாம் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது. பாண்டிய மன்னனின் தேவியார் உலகமுழுதுடையாளின் வேண்டுகோளுக்கிணங்க சிவயோகிகள் உண்பதற்கு நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . ப்படிமாற்று உள்ளிட்டு வேண்டும் நித்த நிவந்தங் . .
2 . மிகளும் உண்கைக்கு இத்தேவர் கோ . . . வல்ல . .
3 . ந்தராயத்துக்கு இறுக்கக் கடவதாக திருப்படிமாற்று . .
4 . டக் காட்டி நம் பெண்டுகளில் உலகமுழுதுடையாள் நமக்கு . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 12 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இ. க. ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீவல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் தெற்குச் சுவரில் இரண்டாம் பட்டிகை.

குறிப்புவர : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . மதிக்குலம் விளக்கிய கோமுதல் . .
2 . முதல் தேவதான இறையிலியாகக் . .
3 . படி இ[டு]கைக்கு நம் ஓலேயும் ந[ம்] . .
4 . வற்குடையான் எழுத்திஞலு . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. க. தொ. அகத். 1 (44/1086) |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |
| மன்னன் : | — | | |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் தெற்குச் சுவரில் மூன்றாம் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . னும் புரவுவரி திணைக்களங் கணக்கெழுதுவிக்கக் கூறு வீர .
2 . ங்கக் குளக்கீழ்த் திருப்பூவணத்து விட்டருளின கோயிலினு[ள்]
3 . மாடை இருநூற் றொரு பத்தஞ்சில் இத்தேவர் தேவதானம்
4 . முத்தினால் உள்வரியுங் குடுக்க வென்று திருவாய் மொழிந்தரு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 12-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீ வல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் –உண்ணுழியின் தெற்குச் சுவரில் மூன்றும் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதி மட்டும் உள்ளது. புறத்தாய நாட்டுக் குமரித் திருவகத்தீச்வரமுடையார்க்கு நூற்று ஏழரை மாடை தானமாக அளித்ததை இது குறிக்கிறது. திருப்பூவணத்தில் இருந்த மாளிகையையும், அதிலுள்ள அழகியபாண்டியன் கூடத்தையும், பள்ளிக்கட்டில் பாண்டிய ராஜனையும் குறிக்கிறது. திருமந்திரஓலை தென்னவதரையன் என்பான் குறிக்கப்படுகிறுன். இது இவ்வூர்க் கல்வெட்டெண் 10 இன் தொடர்ச்சியாகும்.

கல்வெட்டு :

1 . . விச்சாதிர மூவேந்தவேளான் [எ]ழுத்திஞலும் புரவுவரி திணைக் களநாயகங் காவனூர்கிழவன் எழுத்திஞ[1]லும் வல்லப உதய . .

2 . . ளால் அழகியபாண்டியன் கூடத்துப் பள்ளிக்கட்டில் பாண்டிய ராஜனில் எழுந்தருளியிருந்து புறத்தாய நாட்டுக் குமரித்திரு வக[த்தீ] . .

3 . . டை நூற்றேழரை நீக்கி நீக்கிநின்ற மாடை நூற்றேழரையும் மடப்புற இறையிலியாகப் பெறவேண்டுமென்று இக்கோயிலி

4 . . [ள] த்திருமந்திரஓலை தென்னவ[தரையன்] எழுத்திஞல் வந்த திருமுகப்படி [யிப்]புரவுவரி திணைக்களத்து முகவெ[ட்]டி ஆலங் குடையான் எ . .

1. இதன் இறுதிப் பகுதி தலைகீழாக வைக்கப் பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீவல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |

இடம் : அகத்தீச்வரர் கோயில்—உண்ணாழியின் தெற்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . . ழுதுங் கயலாணைப் . .
2 . . ா தேவர்க்குத் திருப்படிமா . .
3 . . முன்னூற்றுவமங்கலத் . .
4 . . ஞலும் புரவுவரிதி[ணை] . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 2-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1123 |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இ. க. ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. க. தொ. அகத். 9 (1/1112) |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீவல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் மேற்குப் பக்கச் சுவரில் உள்ள முதல் பட்டிகை.

குறிப்புரை : பாண்டிய மன்னன் சடையவர்மன் ஸ்ரீவல்லபன். . . . . பூவணத்து மாளிகையில் அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிக்கட்டிலில் எழுந்தருளியிருக்கும் போது திருவகத்தீச்சுரமுடையார்க்கு சில மாடைகள் தானமாக வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருமடந்தையும் ஐயமடந்தையும் திருப்புய . . . / . . . இருநிலமும் பெருமையெய்த எண்டிசையுங் குடை நிழற்ற மன்னவரெல்லாம் வந்திறைஞ்ச மர . .

2 சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லபதேவர் யாண்டு இரண்டாவது இரா . . / . . . ப்பூவணத்து விட்டருளின கோயிலினுள்ளால் அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிக்கட்டி . .

3 ம் முன்னூற்றுவமங்கலத்துச் செம்பாதியால் மாடை நூற்றெ . . / . . . ண்டுமென்று இக்கோயிலில் ஸ்ரீகோயிலுடைய சாத்தன் நாராயணனை திருவகத்தீஸ்வர யெ . .

4 வரியுங் குடுக்கவென்று திருவாய்மொழிந்தருளித் திருமந் . . . / . . . மஞ்சி உடையான் அரையன் செந்தாமரைக்கண்ணனை தென்னவதரையன் எழுத் . .

---

1. மாடை : பொன் நாணயம்.

/ இக்குறியிட்டுள்ள இடத்தில் ஒவ்வொரு வரியிலும் கல்வெட்டின் சிறு பகுதி காணவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 4-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1127 |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. க. தொ. அகத். 10 (2/1112) |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீ வல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் மேற்குச் சுவரில் உள்ள மூன்றும் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியான இது மடம் ஒன்றில் ஒவ்வொரு நாளும் கன்யா தீர்த்தமாடி வரும் நித்தபூஜகர், சிவயோகிகள் ஆகிய ஐம்பது பேர் உண்பதற்கு நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . கும் பொன்பற்றி உடையான் எழுத்தினாலும் புரவுவரித் திணைக் களத்து முகவெட்டி வேளூர்கிழவன் எழுத்தினாலும் புரவுவரித் திணைக்கள நாயகம் மாயனூருடையான் எழுத்தி . .

2 . முன்னூற்றுவமங்கலத்து செம்பாதி மாடையால் வந்த புன் செய் புனக்காடும் வரியிலிட . . . / . . . ஸ்ரீ த்ரிபுவனச்[1] சக்கரவர்த்தி கள் ஸ்ரீவல்லப தேவர்க்கு யாண்டு நாலாவது இராசி . .

3 . மடம் உலகமுழுதுடையாளில் கந்யா தீர்த்தமாட்டி வரும் நித்த பூஜ கரும் ஸிவயோகிகளும் நித்தம் ஐம்பது பேர் உண்கைக்கு நாட் டாற்றுப் போக்கு ப்ரஹ்மதேயம்[2] முன்னூற்றுவமங்கலம் . .

4 . ல யாண்டு நாலாவதின் எதிராமாண்டு முதல் இவ்வூர் செம்பா தியும் மடப்புற இறையிலியாக வரியிலிட்டுக் கல்லிலுஞ் செம் பிலும் வெட்டுகைக்கு நம் ஓலையும் நம் வரியிலார் எ . .

1. 'ஸ்ரீ த்ரிபுவன' என்று இருக்க வேண்டும்.
2. ப்ரஹ்மதேயம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீ வல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் வடக்குச் சுவரில் உள்ள முதல் பட்டிகை.

குறிப்புரை : மெய்க்கீர்த்தியின் சிறுபகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . . வரெல்லாம் வந்[தி] . .
2 . . லம் விளக்கிய கே . .
3 . . ராய நாட்டு இக்குமரி க . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆட்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 12-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீவல்லப தேவர் | | |

இடம் : அகத்தீச்வரர் கோயில் வடக்குச் சுவரிலுள்ள முதல் பட்டிகை.

குறிப்புவர : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது. இவ்வூர்க் கல்வெட்டு எண்-6 லும் சாத்தன் நாராயணன் குறிக்கப்பெறுகிறுன். இக்கல்வெட்டு இவ்வூர்க் கல்வெட்டு எண் 14-இன் தொடர்ச்சியாக இருக்கலாம்.

கல்வெட்டு :

1 . . த்தமாட வரும் ஸ்ராஹண .
2 . . நம்மடம் ஊ[ட்டு]கைக்கு . .
3 . . டய சாத்த நாராயணனு[1] . .

1. சாத்தன் நாராயணன்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. க. தொ. அகத். 4 (47/1086) |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் வடக்குச் சுவரில் இரண்டாம் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியான இது அழகிய மணவாளப் பெருமாளுக்கு ஆடித்திருவோணத்தன்று நடக்கும் பூசைக்குக் [களபம்] முதலியவற்றைக் கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . ள்ளி சிவி[ந்திர]வாதி சிவிந்திரவாதி ஆடி[த்]திருவோணந் தன்று . .

2 . . ர்கு தாரைக்கும் பூசைக்கும் [ந களபம்] நயினார் அழகிய மண வாளப் பெரு . .

3 . . லு கலநே தூணிக்கு ஆசந்திரதாரவர் நடக்கும்படி இன் நயிந . .

4 . . ன சிலவு நீக்கி சோறு நூசுஉ[1] கொண்டு எட்டு ஸ்ராஹ்ணர்க்கு நமக்கா . .

1. 54 நாழி

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் வடக்குச் சுவரில் இரண்டாம் பட்டிகை.

குறிப்புரை : கல்வெட்டின் சிறு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . . [ஸை]மக்கு இப்படிக்கு ஹட்டர்கள் ஸநுமூஹிக்க கல்லு
வெ[ட்டி] . .

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : அகத்தீஸ்வரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : பாண்டியர்
மன்னன் : சடையவர்மன் ஸ்ரீ வல்லப தேவர்

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 19

இடம் : அகத்தீச்வரர் கோயில் உண்ணாழியின் வடக்குச் சுவரின் மூன்றும் பட்டை.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப்பகுதி மட்டும் உள்ளது. இதில் குறிக்கப்பெறும் செந்தாமரைக் கண்ணன் இவ்வூர்க் கல்வெட்டு எண் 13-லும் குறிக்கப்பெற்றுள்ளான்.

கல்வெட்டு :

1 . . க்கும் ஶிவயோகிகளுக்கும் உண்கைக்கு இத்தே . .
2 . . [தர]ச் சொன்னோம் இப்படி கல்லிலுஞ் செ . .
3 . . செந்தாமரை கண்ணனை தெ . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடையவர்மன் ஸ்ரீ வல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 20 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உட்புறத் தெற்குச் சுவரின் இரண்டாவது பட்டை.

குறிப்புரை : மெய்க்கீர்த்திப் பகுதி மட்டும் உள்ளது. அதிலும் இடையில் ஒரு பகுதி இல்லை.

**கல்வெட்டு :**

1 . . . . . . . . . . [குடை] . . . . . . . . . . . . . .
2 . . வீற்றிருஞருளி மாமுதல் மதிக் . [ . கோமுதல் கோச்சடைய . .
3 . . னிலெழுந்தருளியிருந்து புறத்தா . [ . திருவகத்திஸ்ரமுடைய . .

[ இக்குறியிட்டுள்ள இடத்தில் ஒவ்வொரு வரியிலும் கல்வெட்டின் சிறு பகுதி காணவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 21 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் உட்புறத் தெற்குத் தூண்.

குறிப்புரை : அகத்தீச்சுரத்து குட்டுவரில் உலகுதொழ நின்றான், காரி ஆகியோர்களால் நிறுவப்பெற்றது எனக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 இதுத் தூண்
2 அகத்தீச்சு
3 ரத்து குட்டு
4 வரில் உலகு
5 தொழ நின்ற
6 ன் காரி உள்ளி
7 ட்டார் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 614<br>கி.பி. 1438 |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. VIII, பக்கம் 5 (7/1103) |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 22 |

இடம் : அகத்தீச்வரர் கோயில் அருகில் உள்ள பாறை.

குறிப்புரை : புறத்தாய நாட்டுத் தென்வாசிவாரண நன்னாட்டு அகத்தீச்சுரமான உதைய மார்த்தாண்டச் சதுர்வேதிமங்கலத்துப் பட்டர்களுக்கு அரசன் தனது பிறந்த நாளான பரணி நாளில் அகரம் ஏற்படுத்தி அவர்கள் ருக், யஜுர், சாம ஆகிய வேதங்களைப் பயிலுவதற்கும், அவர்களின் மருத்துவ வசதிக்கும், மட்பாண்டத் தேவைக்கும் நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ அருளிசைகை புறத்தாநாட்டு தென்வாசிவாரண நன்ன

2 ட்டு அகத்தீச்சுரமான உதையமாத்தா-ண்டச் சதுவே-திமங்கலத்து ஹட்டர்களுக்கு பரணி நம்ம

3 ரட்டைப் பிறந்த நாளிலே இவ்வகரம் வைக்க க[ற்பி]க்கையில் சதுவே-தி ஹட்டர்கள் பேரிருபத்து நாலுக்கு ஸாம[1]மிருபத்துநா

4 லும் ஶிவஸாமம் இரண்டும் விஷ்ணுஸாமம் இரண்டும் வைஷ்ணஸா மம் ஒன்றும் கூட ஸாமமிருபத்தொன்பது

5 க்கு ஸாமம் ஒன்றுக்கு கொர்[2]குளத்தின் கீழ் நிலம் இரண்டு மாக்காணி ஆக நிலம்[3] அறுபத்து அஞ்சு மாக்காணியு

---

1. 'ம' வரிக்குக் கீழ் எழுதப்பட்டுள்ளது.
2. தெர்குளம் என்று தி. தொல். வெ. தொ. யில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.
3. 'லம்' வரிக்குக் கீழ் எழுதப்பட்டுள்ளது.

(திருப்பவும்)

6 ம் இருக்வேதவ்ருத்தி[1] நிலம் ஒரு மாவும் யஜுர்வேதவ்ருத்தி[2] நிலம் ஒரு மாவும் ஸாமவேதவ்ருத்தி[3] நிலம் ஒரு மாவும் சல்லி

7 யவ்ருத்தி[4] நிலம் ஒரு மாவும் குலாலவ்ருத்தி[5] நிலம் முக்காணியும் காருவ்ருத்தி நிலம் முக்காணியும் இவ்வமர்யாதை ரக்ஷிக்குமா

8 று கற்பித்த ஆனந்தவர் பரிஷையில் அன்றன்று சாதுர்ம்மாஸ்யமு[6] [மூத்தவர்கள் கை]யாளுமாறு மடப்பிறமாக விட்ட நி

9 லம் அஞ்சு மாவும் கூட நிலம் எழுபத்தஞ்சு மா முக்காணிக்கு எல்லையாவது நாஞ்சி நாட்டில் தெரான அழகியசோழநல்

10 லூர்ப் பெரிய குளத்தின் கீழ் முட்டைக் குமிழி மடை கீழைக் கால்போக்கில் நிலத்துக்கு எல்லை கீழெல்லை கன்னடியர் குல காலன் ம

11 டை மேலைப் பெருங்காலுக்கு மேர்கு தென்நெல்லை உதிரப் பெட்டியை சுற்றியோடும் கோட்டாற்றுக்கும் வடக்கு மேலெல் கை மேல்படி

12 ஆற்றுக்கும் மேலை வாசல் எல்லை முக்காணிக்கும் தெர்க்குத் திடலுக்கு வடக்கு குழி அஞ்சு நிலம் ஒரு மா வரைக்காணிக் கும் முட்டைக் கு

13 மிழி கீழைக்காலுக்கும்[7] கிழக்கு வடவெல்லை கரைக்கு தெர்க்கு தடி பல்வரிசைப் பற்றுக்கும் கீழ்மேல் தோப்புக் காலுக்கும் கூட்டுப் பறைச்சேரி

14 க்கும் தெர்க்கு ஆக[8] இன்னன்கெல்லைக்குட்பட்ட தடி னூற்று எண்பத்தொன்பதுனல் நிலம் எண்பத்து நாலு மா முக்காணியும் மேல்படி பற்று கந்

15 னடிய குலகாலன்[9] மடை மேலைக் கால் போக்கு நடுவடைய விட்ட நிலத்துக்கு கீழெல்லை நடுவில் கால்போக்கு வேளா விருத் திக்கும் பள்ள நால் கலம் பாட்டு

16 க்கும் பெருங்காலுக்கும் மேற்கு தென்நெல்லை சோழகேரள விண்ணகர் எம்பெருமான் திருவிடையாட்டம் தடி ஒன்று நிலம் அரைக்காணிக்கு வடக்

---

1. இருக்வேதவ்ருத்தி.
2. யஜுர்வேதவ்ருத்தி.
3. சாமவேதவ்ருத்தி.
4. சல்லியவ்ருத்தி : இரணசிகிச்சைக்காக விடப்படும் நிலம்.
5. குலாலவ்ருத்தி : மட்பாண்டம் செய்வதற்காக விடப்படும் நிலம்.
6. சாதுர்ம்மாஸ்யம்.
7. 'முட்டைக்குக் காலுக்கும்' என்று தி. தொல். வெ. தொ. யில் படிக்கப்பட்டுள்ளது.
8. 'செக ஆக' என்று அதே தொகுதியில் படிக்கப்பட்டுள்ளது.
9. '[கந்]காலன்' என்று அதே தொகுதியில் படிக்கப்பட்டுள்ளது.

17 கில் உதிரப்பெட்டிக்கு போகிற கீழ்மேல் நடை வரம்புக்கு வடக்கு மேலெல்கை மேல்படி மடை மேலே பெருங்காலுக்கு கிழக்கு வடவெல்லே கிழக்கடைய சிங்ஙன்

18 [சா]த்தன் நிலமான கெராச்சேய் தடி ஒன்று நிலம் முக்காணிக்குத் தெற்கில் கீழ்மேல் வரம்புக்கும் இதில் நின்றும் கிழக்கு நோக்கிப் போகிற தோப்புக் காலுக்கு தெற்கு

19 ஆக இன்னுன்கெல்லேக்குட்பட்ட தடி இருபத்திரண்டிஞல் நிலம் பன்னிரண்டு மா முக்காணியும் கூட தடி இருனூற்று மூன்றிஞல் நிலம் தொ

20 ண்ணூற்றேழு மா விதில் அறுனூற் றெருபத் தொன்ற மாண்டு பசான வரையும் கய்யாண்டு போரும் தேவதான னில மிரண்டு மாக்காணியும்

21 திருவிடையாட்டம் நிலம் ஒரு மாவரை யரைக் காணியும் தான இறயிலி நிலம் ஒன்பது மாக்காணியும் நாயன் கோதை அகர மிருசாதி நிலமிரண்டு மா

22 வும் பெரும் பற்ருேடு கடமை கொண்டு பொரும் நிலம் ஆறு மாவரைக் காணியும் உட்பட தடி முப்பத்தேழுஞல் நிலம் இரு பத்தொரு மாக்காணியும் நீ

23 க்கி இவ்வகரத்துக்கு பற்ருக விட்ட தடி நூற்று அறுபத்து ஆறு ஞல் நிலம் எழுபத்தஞ்சு மா முக்காணியும் தோட்டமும் தோட் டக் கூறுகளும் மனேயும் மனேக்கூ

24 றும் மற்றும் எற்பேற்பட்டதும் கதிற்களமாக விட்ட களத்துக்கு எல்லேயாவது கருப்புக்கோட்டையில் நயிஞற் சீகைலாசமுடைய நயிஞர் தேவதானத்துக்கும் தெ

25 ன் மேற்கு தடி நாலுக்கும் பொலிந்துநின்றபிரான் திருவிடை யாட்டத்துக்கும் தென்மேர்கு வரிசைப் பற்றுக்கும் வயலுக்கும் தென் மடல் தெருவுக்கும் வள்ளுவ நாட்டாழ்வா

26 ர் வீட்டு வளவில் தெற்கும் தளுக்கும் நடுவில் கிடந்த கதிர்களமும் கூட அறுனூற்று ஒரு பத்து இரண்டாமாண்டு காற்முதலுக்கு தங்களுக்கு உதகபூர்வ-ஸர்வமான்யமாக தன்றேம் தங்களும் இக்

27 காலம் முதல் தானமாக கைய்யாண்டு கொண்டு செல்லுமாறுஞ் செக இது கொல்லம் அறுனூற்று ஒருபத்து நாலாமாண்டு மகர ஞாயறு நாலு சென்ற நாள்

28 சேரவன்மாதேவியில் பதிநேழாம் பண்ணை செய்வான் வீட்டில் நாம் வீடாயிருக்க இம்மாற்கமே கெற்குளத்தின்[1] கீழ் நிலம் எழுபத்தஞ்சு[2] மா முக்காணியு

29 ம் தோட்டமும் தோட்டக் கூறுகளும் மனையும் மனைக் கூறு களும் கருப்புக்கோட்டையில் கதிற்களமும் மற்றும் எற்பேற் பட்ட ஸர்வஸ்வாஸ்திகளும் கூ

30 ட ஸர்வமாந்யமாக உதகபூர்வமாய் ஆசந்த்ராதித்யமாக பாதவிழுக்காட்டிலே கையோலைப்படியே மடப்புறமும் வரத்திகளும் உட்பட நான் கெல்லைக்கும் உண்ணாழி பவித்ர

31 மும் இட்ட கல்லும் நாட்டிக் கொண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொண்டு ஆசந்த்ராதித்யவரை ஸந்ததிப்ரவேசமே கைய் யாண்டு கொண்டு செல்லுமாறும் கற்பிற்றமைக்கு

32 இது தரவாகும் இவை காமன்உதையநன் எழுத்து

1. தெற்குளத்தின் கீழ் என்று தி. தொல். வெ. தொ. யில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.
2. திருவிதாங்கூர்த் தொல்பொருள் வெளியீட்டுத் தொகுதியில் 'எழுபத்திருமா முக்காணி' என்று பதிப்பிக்கப் பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 614<br>கி.பி. 1438 |
| ஊர் : | அகத்தீஸ்வரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி.தொல்.வெ.தொ VIII. பக்கம் 3. |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 23 (6/1103) |

இடம் : அகத்தீச்வரர் கோயில் அருகில் உள்ள எழுத்துப்பாறை.

குறிப்புரை : புறத்தாய நாட்டுத் தென்வாசிவாரண நன்னாட்டு அகத்தீச்சுரமான உதைய மார்த்தாண்டச் சதுர்வேதிமங்கலத்துப் பட்டர்களுக்கு அரசன் தனது பிறந்த நாளான பரணி நாளில் அகரம் ஏற்படுத்தி, அவர்கள் ருக், யஜுர், சாம ஆகிய வேதங்களைப் பயிலுவதற்கும், அவர்களின் மருத்துவ வசதிக்கும், மட்பாண்டத் தேவைக்கும் நிலம் வழங்கப்பெற்றதைக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்தி ஸ்ரீ அருளிச் செய்கை புறத்தாநாட்டுத் தென்வாசிவாரண நன்னாட்டு அகத்தீஸ்வரமான உதையமாத்த

2 ாண்டச் சதுர்வேதிமங்கலத்துப் பட்டகளுக்குப் பரணி நம் ஆட்டைப் பிறந்த நாளிலே இவ்வகரம் வைக்கக் கற்பிக்கையில் ச

3 துவேதி பட்டகள் பேரிருபத்து நாலுக்கு மனை இருபத்துநாலு ஸிவப்ரதிஷ்டெக்கு[மு[1]] விஷ்ணுப்ரதிஷ்டெ[2]க்குமுள்ள தல

4 த்துக்கும் வெத்யபாகம்[3] ஒன்றுக்கு மனை ஒன்றும் ருக்வேதவ்ருத்தி[4] யஜுர்வேதவ்ருத்தி[5] ஸாமவேதவ்ருத்தி[6]

---

1. 'சிவப்ரதிஷ்டைக்கும்' என்று இருக்கவேண்டும்.
2. விஷ்ணுப்ரதிஷ்டை.
3. வைத்யபாகம்
4. ருக்வேதவ்ருத்தி.
5. யஜுர்வேதவ்ருத்தி.
6. சாமவேதவ்ருத்தி.

5 கைய்யாளும் பேர்க்கு மனைகளுக்கும் ஆனந்தவாளர் பரிஷையில் பிழாரகளில் அன்றன்று சாதுர்மாஸ்ய

6 ம்[7] மூத்த அவர்களுக்கு இருக்குமாறு மடங்கெட்ட உள்ள தலத் துக்கும் சல்லிய விருத்தி[8] குலால விருத்

7 தி[9] காருவிருத்தி கைய்பாளும் பேற்குக் குடியிருப்புக்கும் புறக்குடி யாக இருக்கும் பேற்குக் குடியிரு

8 ப்புக்கும் கூட விட்ட நத்தத்துக்கும் இவ்வகைக்கு விடுமாறு கற் பித்த நிலம் நூற்று இருபத்து இரண்டு மா மு

9 க்காணியில் நாஞ்சி நாட்டில் தெரான அழகியசோழ நல்லூர்ப் பெரியகுளத்தின் கீழ் விட்டுத் தர

10 வு எழுதிக் குடுத்த நிலம் எழுபத்து அஞ்சு மா முக்காணியும் கதிர்க் களமும் தோட்டக் கூறுகளும்

11 நீக்கி நிலம் முப்பத்தேழு மாவுக்கு விட்டுக் குடுத்த மங்கலக்குளம் தவைக்குளம் அரையர்

12 புதுக்குளம் தேவிகுளம் நாணம்பிகுளமுட்பட்ட குளங்களுக்கும் புரவுகளுக்கும் எல்லையாவது

13 கீழெல்லை குமரிக்கும் முட்டத்துக்கும் மேர்கிற் விலக்கில் நிற்குந் தோரணத்துக்கு மேற்கும் இதன்

14 நேர்வடக்குந் தென்னெல்லை உழக்குணி குளத்துக்கும் இதன் மேற்கு மங்கலமுடைய சாத்தாவின்

15 கோயிலுக்கும் இதன்மேற்கு முக்கவருக்கும் வடக்கு மேலெல்லை மணக்குடிப் ப[ற்றி]ல் கீழெ

16 ல்லைக்கும் நாறணபாறைக்கும் இதநேர் வடக்கு நங்கை கிணற்றுக் கும் கிழக்கு வடவெ

17 ல்லை சிவிந்திரப் பற்றுக்கும் வாரி ஊருக்குப் போகிற பெருவழிக் கும் தெற்க்கு இன்னன்கு எல்லை

18 க்கு உட்பட்ட நத்தமும் நத்தப்பாலும் தோட்டமும் தோட்டக் கூறுகளும் விளையும் விளை

19 க்காடும் மங்கலக்குளம் கவைக்குளம் அரையர் புதுக்குளம் தேவி குளம் நாணம்பிகுளம் ஆக இக்குள

20 ங்களும் குளத்தின் கீழ் புரவுகளும் மற்றுமிவ்வெல்லைக்குள்ளு உடை குளமடைத்துக் கா

---

7. சாதுர்ம்மாஸ்யம்.

8. சல்லியவிருத்தி ; இரண சிகிச்சைக்காக விடப்படும் நிலம்.

9. குலாலவிருத்தி ; மட்பாண்டம் செய்வதற்காக விடப்படும் நிலம்.

21 டு வெட்டித் திருத்திப் பயிர்ச் செய்யும் நிலங்களும் கீழ் நோக்கின கிணறும் மேல் நோ

22 க்கிந மரமும் • மற்றும் எர்ப்பேர்ப்பட்ட ஸமஹூவ்ப்ராவூிகளும் அகரவூற்ருக கொல்லம் அறுனூ

23 ற்று இருபத்திரண்டாமாண்டு முதலுக்கு தங்களுக்கு உதக பூர்வ்வயஹ ஜாநமாகத் தந்னேம் தங்களும் இக்காலமு

24 தல் ஜாநமாக கையாண்டு கொண்டு செல்லுமாறு செய்க இது அறுநூற்று இருபத்து நாலாமாண்டு மகர ஞா

25 யிறு நாலு சென்ற நாள் சேரவன்மாதேவியில் பதிநேழாம் பண்ணை செய்வான் வீட்டில் நாம் வீடாயிருக்

26 க இம்மாற்கமே புறத்தாநாட்டுத் தென்வாசிவாரண நன்னாட்டு அகத்தீபூரமான உதையமாத்தாண்டச் சதுர்வேதிமங்கல

27 அகரங் கெட்டுகிற தலத்துக்கும் புறக்குடியாக இருக்கும் பேற்குக் குடியிருப்புக்கும் புஞ்சை விளைக்காட்டு

28 க்கும் உட்பட்ட நத்தமும் நத்தப்பாலும் தோட்டமுந் தோட்டக் கூறுகளும் விளையும் விளைக்காடும் . .

29 னக் குளங்களும் குளத்தின் கீழ் புரவுகளும் கீழ் நோக்கின கிணறும் மேல் நோக்கின மரமும் மற்று மெற்பேறபட்ட [ஸ]

30 மஹூவ்ப்ராவூிகளும் கூட ஸவஜாநமாக உதக பூர்வ்வயஹஜாநமாகப் பாத விழுக்காட்டிலே வீடுங்கெட்டி கு

31 டியுமிருந்து கை ஓலைப்படியே மடப்புறமும் வரத்திகளுமுட்பட நான்கெல்லைக்கும் திருவாழி பவித்ரமும் இட்டு கல்லும்

32 நாட்டிக் கொண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொண்டு ஆசந்த்ரதாரவக் ஸந்ததி ப்ரவேசமே அகரப்பற்ரு

33 க கையாண்டு கொண்டு செல்லுமாறு கற்பிற்றமைக்கு இது தரவாகும் இவை சுந்தரன்கோதை எழுத்து

34 . . . . . . . . . ஜேத யாமம் செய்த ஸலம் உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 1039<br>கி. பி. 1863 |
| ஊர் : | அக்கரை | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | | |
| | | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : சேந்தன் செந்திலாதிபதி செக்கடி விநாயகர் சந்நதியின் கிழக்குச் சுவர்.

குறிப்புரை கல்பணி துவக்கிய நகரத்தார், கூட்டி அரத்து சிதம்பரத்தானுக்குக் கொத்தனுர் தங்கும் இடம் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கஅநூயக ஹூ ஆ
2 வணி மீ கல் பணி
3 துவக்கி நகரத்
4 தார் கூட்டி அர
5 த்து சிதம்பர
6 தாணுக் கொத்
7 தனுர் முகாந்த
8 ரமாக கஅ
9 நூயள ஹூ காற்தி
10 கை மீ ௫ ௨ திங்
11 கள் கிழமை ரொ
12 நட்செத்திரம்
13 ஆன பகல் ௫ க்கு
14 மேல் ௭ க்கு அகம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 952<br>கி. பி. 1776 |
| ஊர் : | ஆச்சிராமம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : திருப்பனந்தாள் மடம் — அன்னபாலிப்புக் கூட உத்திரம்.

குறிப்புரை : வைத்தியலிங்க சுவாமி அவர்கள் ஆச்சிராமத்து தர்மபுர மடத்தைத் திருப்பணி செய்வித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொ௲௯௱௫௰௨ ஷ ஆனி மீ ௰௩ ௨ ஆச்சிராம தர்மபுர மடம் திரு
2 ப்பணி செய்விச்ச வயித்தியலிங்க சுவமிக்கு சொக்கலிங்
3 கெ[ர்] துணை மாணிக்கவாசகத்துக்கு சுந்தரமூர்தி துணை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 873<br>கி.பி. 1697 |
| ஊர் : | இடலாய்க்குடி | | |
| மொழி : | தமிழும், மலையாளமும் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : ஷேக் அப்துல்லா காதரின் வீட்டுப் பின்புறத் தோட்டத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் கல்.

குறிப்புரை : நாஞ்சி நாட்டில் நாயக்கருடைய படை வந்து அழிவு ஏற்படுத்தியதில் ஓலைப்பெட்டிகளும் சிட்டி குறிகளும் மறைந்து போயின. அவைகள் யார் ஒருவர் கையில் காணப்பெறினும் கண்ட இடத்திலேயே அவரைத் தண்டிக்கவேண்டும் என்று குறிக்கிறது.

கல்வெட்டு :

1 சிவமயம்
2 கொல்லம் ௮௱௭௰௩ ௵ கார்த்திகை ௴ ௧ ௨
3 நாட்டுத் தங்கடமகீத்து கல்லு வெ
4 ட்டி நாட்டிக் கொடுத்த வகை
5 நாயகரிடெ படை வந்து நாஞ்சி
6 ஞாட்டு ௮௱௬௰௧ ௵ முதல் பல நா
7 ளும் படை வந்து படைக்கெடுவ
8 ருகைக் கொண்டு ௮௱௬௰௧ ௵ ம்
9 முதல் ௮௱௯௰௧ ௵ - ம் வரைக்கு
10 அஞ்சாலியில் அடைச்சு நீக்கி
11 அடைக்க வேண்டும் கார் பூவு ௨ ம்
12 . . ம . பூவல் ௲ ம் ஆக பூவு ௰௫ ம் நா
13 ம் கழிச்சு கொடுக்கையில் அஞ்சா
14 லி குக்கை கோட்டைப் பதிவு காணி

( திருப்பவும் )

15 க்கைய் நீக்கின ஆமணக் கெண்
16 ணெ வகையும் கச்சையாவணையும்
17 பிறந்த நாள் பிரைவகைம் மக்க
18 ட் கொறைச்சும் கொடுத்தா மங்க
19 ல முதல் மண்ருடி வரை ஓலைப் பெ
20 ட்டியளும் சிட்டிகுறியளும் பொய்
21 போகையில் ஷெி ஓலைகள் யாதா
22 மொருத்தர் பறில் காணு நாள் கண்
23 [ட] களத்தில் கீற்றும் கிழியும் பட்டு
24 போமாறும் தன்னிப்பிச்சேழ் முதல்
25 இத்ததும் எடுத்து அடக்கிய கறை
26 பள்ளி காணியாட்சை உள்ப்பட்ட
27 வகை விட்டு கொடுத்தா படை
28 க்கிலாதியிலும் கவர்ச்சையி
29 லும் பொய் முறி வகையாகிலு
30 ம் காண காரியமெங்கிலும்
31 உடையவன் அல்
32 லாதே அன்னிய
33 வராயிட்டும் பெ
34 ரும் பேருயிட்
35 டும் ஓலை கொண்
36 டு வருநாள் அய்
37 யோலை பிறமாண
38 மல்ல பாட்டமும்
39 மேல்வாரமும்
40 கழிசங்கேதம்
41 உள்ப்பட்ட காரி
42 னு அற்பசியும்
43 காத்திகையும் ப
44 சானம் பைங்
45 கூனியும் சித்திரை
46 யும் நெல்லு கொ
47 டுக்கிநந்தல்லா
48 தே விலை தரத்தி
49 னு பணம் கொ
50 டுக்கையும் அ
51 ருது வேண்
52 டிக்கையும்

53 அருது படுக
54 லம் கடன் மு
55 றி உபையம்
56 பலிசை அ .
57 த்து வராதத்
58 தினு படுகல
59 மும் கடனும்
60 பொதி குலைகயும் வேண்டா
61 தனத் தெண்டம் சாவு
62 காணிக்கை வேண்டா
63 எந்நும் சங்கேதப்ப
64 ற்றிலும் பெரும்பற்றிலும்
65 பெரும் பேறு முறி வே
66 ண்டிப் பிடிச்சு உல்
67 ப்பத்தி தடுத்தால் தடை
68 யில்லே எந்நும் சங்கே
69 தக்காறர் கொண்ட கட
70 றினு ௵ ல் வாரமத கைஞ்
71 ஞு வேண்டிச்சு கொ
72 ள்ளுநந்தல்லாதே தேச த
73 டை தடுகருது எந்நும்
74 பேரால் வராதினும் பாட்ட
75 தினும் தன்றெண்டை
76 க்குறியும் தலைக்குறியும்
77 காட்டி ஒப்பிச்சுக் கொ
78 ள்ளுமாறும் நம்மடெ
79 ஆளுகள் பிறயபட்டால்
80 பிரமணர்க்கு செ
81 லவிறு நெல் பன்னிரு நா
82 ழியும் சூத்திரர்க்கு செலவி
83 னு நெல் ஒன்பதி நாழி
84 யும் அல்லாதே கொடு
85 க்கருது எந்நும் ஆக இ
86 வ்வகைக்கு ஆயம் ௵
87 அற்பசி மீ ம் ௳ ௨ ம் ஆ
88 ளமக ௵ வைகாசி மீ ௳ ௨
89 கொடுக்க சொன்
90 ன படிக்கு [விரு]

91 விளைப்பிலும்
92 வடசேரி குதி
93 ரைப்பந்தி வி
94 ளையிலும் பை
95 ய்யாமி விளை
96 யிலும் கல்லு
97 வெட்டி நா[ட்டி]
98 யதின் வண்ண
99 ம் பிரமாணமாக நட
100 ந்நு கொள்ளுமா
101 று செய்க இது
102 வட வகை தெ
103 ன்மிதி நாடமை
104 ந்த பேர்க்கு கல்
105 வெட்டு

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : ஈத்தாமொழி
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் 994
கி. பி. 1818
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : முத்தாரம்மன் கோயிலில் உள்ள தனிக்கல் (நான்கு பக்கமும் கல்வெட்டு உள்ளது).

குறிப்புரை : கருமபுரம் விநயகப் பிள்ளையார்க்கு அதே ஊரைச் சேர்ந்த கம்மாளரில் சிவ ஞானம் ஆமணச்சி என்பாள் தான் பிறந்த நாளான ஆவணித் திருநாள் அவிட்டத்தில் பிள்ளையார்க்கு அபிஷேகம் செய்வதற்கும் ஒரு பரதேசிக்கு உணவு அளிப்பதற்கும், கார்த்திகைத் திருநாளுக்கு பிள்ளையார்க்கு அபிஷேகத்துக்கும் மூன்று பரதேசிகளுக்கு உணவு அளிப்பதற்கும், திருச்செந்தூர் ஏழாம் திருவிழாவில் பரதேசிகளுக்கு உணவு அளிப்பதற்கும் நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொல்லம் ௲
2 ௯௱௪ ஆடு அல்ப்பி
3 சி மீ ௩ உ திங்க
4 ள் கிளமைய்யும் மி
5 றுகசீதள நச்செ
6 த்திரமு அமுறத்தயோக
7 மு பெற்ற சுபதின[த்தில்]
8 கருமபுரம் கண்ணு
9 ளரில் சிவஞானம்
10 ஆமணச்சி எழு
11 தின பட்டையமாவிது

(திருப்பவும்)

12 ஷி யூரில் தற்மம் வி
13 ஞயக பிள்ளையார்
14 சுவாமிக்கு ஆமணச்சி
15 பிறந்த நாள் அவிட்டத்துக்கு
16 அவுசேகமு ஒரு பரதே
17 சிக்கு அமுதும் காற்த்தி
18 கைக்கு அவுசேகமு மூநு
19 பரதேசிக்கு அமுது மா
20 தம் தோறும் நடத்திவர
21 ஷி ஊரில் உபயத்து
22 க் குடுத்த பணம் கூா[ய]
23 திருச்செந்தூர் ஏள
24 ாந் திருவிளாவில் ப
25 ரதேசிகழுக்கு அமுது
26 குடுத்த சம்
27 பங்கரை ப
28 த்தில் எந் வ
29 [தி] பனையடி
30 வயல் தடி
31 உ வயல் ரு மா
32 க்குள்ள ஆதி
33 ராமு பணம் ாய
34 க்கு செக்கு முட்
35 டைக்கல் எ
36 ண்ணை ஒ
37 த்தி ஓலை உ ம்
38 அணைஞ்ச
39 பெருமாள் மனை
40 யில் நட்ட தெ
41 ங்கு உ ல் நட
42 வு கூறும் வி
43 ளக்கு செம்பு
44 ம் [அ]ம்மி உர
45 லும் கிணத்
46 து முனை சிை
47 ம தாங்கி
48 மனை விலை ே
49 வண்டின

50 ஆதாரமு
51 கிணறு சே
52 [ழி] வாங்கவும் ஷூந்
53 தோறும் நயி
54 ஞர் நோன்ம்பு
55 க்கு பதி அம்மனுக்கு
56 நேவித்திய முக்
57 கை வாசிக்கவும் அ
58 ணஞ்சபெருமாள் யி
59 ருளவசம் உபையத்
60 துக்கு குடுத்த பணம் ா ம்
61 ஷெி வகை ஆதாரங்
62 களும் ஷெி யிருளன்
63 வசம் குடுத்து பிடி[பா]
64 ட்டு கய்ச்சீட்டும் கு
65 டுத்தப்படிக்கு யிவகை
66 யில் உபயம் எடுத்து
67 தற்மம் நடத்தி வரவு[ம்]
68 பதி அம்மனுக்கு நித்த பூ
69 சை வகைக்கு பதியி
70 ல் உபயத்துக்கு எளப்
71 பிச்ச பணம் ருாக ஆக
72 யிவகபடி அது அ
73 து தற்மம் நடத்தி வ
74 ரும்படிக்கு பட்டைய
75 ம் எழுதி கருமபுர
76 ம் ஊ
77 ரிலும்
78 பதியிலு
79 ம் யிருள
80 ன் வசத்தி
81 லும் எளப்
82 பிச்ச படிக்கு
83 ஆசெந்திர
84 காலஞ் சந்
85 ததி பிறவே
86 சமே தற்ம
87 ம் நடத்தும் ே

88 பர்க்கு உதவி
89 செய்யும் பேர்
90 களும் வய்
91 குண்ட பத
92 வி சேர்வார்
93 கள் தற்ம்ம
94 த்துக்கு யிடறு
95 செயித பேர்
96 கள் கெங்க
97 யில் காராம்ப
98 சுவை கொந்
99 ன தோசத்தி[ல்]
100 போவார்கள்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 685<br>கி. பி. 1509 |
| ஊர் : | கரியமாணிக்கபுரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி.தொல்.வெ.தொ. VI, பக்கம் 45, (109/1099) |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : கரியமாணிக்காழ்வார் கோயில் பிரகாரத் தெற்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : செம்பி நாட்டுத் தத்தைப் பட்டினத்து அரங்கன் பெருமாள் என்பார் கரிய மாணிக்க விண்ணவர் எம்பெருமானுக்கு நித்த நிமந்தங்கள் நடத்துவதற்குக் கொடை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் ௬௱௮௰௫ ஷ ஆவணி மீ ௰௪ ௨ அபர
பக்கத்து திறையோதெசியும் திங்கள் கிழமையும் பெற்ற பூ
சத்து நாள் செய்த தானப்பிரமாணம் ஆவது இடராய்க்குடி
யான இராசநாராயணச்ச

2 துற்வேதிமங்கலத்து நயினர் கரியமாணிக்கவிண்ணஹர் எம்
பெருமான் சிபண்டாரத்துக்கு செம்பி நாட்டுத் தத்தைப்
பட்டினத்து பட்டாரியரில் அரங்கன் பெருமாளென் தானப்பிற
மாணஞ் செய்து குடுத்த பரி

3 சாவிது இன்நயினர் பூசைக்கு நாள் ஒன்றுக்கு அமுது [படி] இரு
நாழியும் நடத்தித் திருமாலே யீரணையும் கட்டக் கற்பித்து
இக்கோயிலில் சிவையிட்டினவரில் கூமுர் நாராயணன் பற
வைக் காசுக்கு பிறசாதச் செலவி

( திருப்புவர் )

4 ரு நாழியும் கற்பித்து நடந்து போதுகிற வகைக்கு நான் மேற்படி பற்றில் அறிசில் திறியம்பகன் நாராயணன் நம்பியொடு கரமும் காராண்மையும் கூடி விலை கொண்ட நிலமாவது கெங்கை கொண்ட சோழபதிக் குளத்

5 தின் கீழ் காளமூதி மடைய் போக்கில் கீழ் மேல் காலுக்கு வடக்கு அழகராமன் விடுதி தடி[1] கஉ . . . கிழார்மங்கலத்து மங்கலச் சேரி தாமோதரன் மதிசூதனநம்பியொடு இரு வொற்றி கொண்ட பூலாவடி தடி கஉ . . . இரு ஒற்

6 றி ஓலைப்படி பணம் ா௰௫இ செவிடு கூஇ ம் ஆக இவ்வகை[ப்படி] நிலமும் கைய்யாண்டுகொண்டு அமுதுபடி உ வ [2]ம் திருமாலை யீரணையும் நடத்திப் போதும்படி கற்பித்து இதுவும் திருக்காத்தி கைக்கு இவர் வசம் குடுத்த பணம் ௫௰ க்கும் ஆண்டு ஒ

7 ன்றுக்கு பலிசை கூடின பணம் சஇ கொண்டு பூசைக்கு அமுதுபடி குறுணி திருப்பணியாரம் நாழி தெங்காய்க் கதலிப் பழம் உ . . . சாண் தீபத்துக்கு நெய் நாலுழக்கும் நடத்தி நமற்காரம் பேர் இரண்டுக்கு பிறசாதம் நாழி நீக்கி பிறசாதம் க வ

8 ம் பறவைக் காசு பற்றிக் கொண்டு இவ்வகைப்படி நடத்திப் போதும்படி கற்பித்து ஆசந்திரதாரவற் சந்ததிப் பிரவேசமே [நடத்தக்] கற்பித்து கல்லும் வெட்டி குடுத்தேன் இப்படிக்கு அரங்கன் பெருமாள் எழுத்து

9 இதுவும் இவர் வசம் குடுத்த பணம் உ௰௫ இப்பணம் உ௰௫ க்கு ாக்கு ச ப்பலிசை கொண்டு நடத்தக் கற்பித்த வைகாசி மீ

10 தொறும் திருவிசாகம் நடந்து போதுகிற வகைக்கு ஆண்டு ஒன்றுக்கு பணம் க இதுக்குச் செலவு பால் மாங்காய் ா க்கு

11 க் காசு உ தெங்காய் ஒன்றுக்குக் காசு க சுக்குச் சீரகம் மிளகுக்குக் காசு உ சற்கரை பலம் சா க்குக் காசு ௫ அமுது

12 படி இரு நாழிக்குக் காசு உ எரிகரும்புக்குக் காசு க இதுவும் சீசெயந்தி அஷ்டமிக்கு பணம் க இதுக்குச் செலவு அமுதுபடி

13 நானாழிக்குக் காசு ச நெய் உழக்குக்குக் காசு உ சற்க்கரை பலம் ஆறுக்குக் காசு அஞ்சு பழம் இரண்டுக்கும் சுக்கு சீரகம் தெங்

14 காய்க்கு காசு இரண்டு எரி கரும்புக்கு காசு ஒன்று இதுவும் ஆட் டை . . . . . . . . பலம் ஆறுக்குக் காசு அஞ்சு பழம் . . . [3]

---

1 இச்சொல் குறி ஒன்றினல் காட்டப்பெற்றுள்ளது.

2 நாழி.

3 கல்வெட்டு முற்றுப் பெருமலேயே உள்ளது.

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : கரியமாணிக்கபுரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் 73[4] கி.பி. 1558
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : தி. தொல். வெ. தொ. VI, பக்கம் 47 (107/1099)
ஊர்க் கல்வெட்டு எண் : 2

இடம் : கரியமாணிக்காழ்வார் கோயில் முகமண்டபத்தின் கிழக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : இடலாய்க்குடி நாயனர் கரியமாணிக்கவிண்ணகர் எம்பெருமான் கோயிலில் ஆண்டுதோறும் அம்பலத்தில் கீற்றுப் பந்தல் போடுவதற்கும் மாதத்தில் ஒவ்வொரு பதினன்காம் நாளிலும் கஞ்சி வார்ப்பதற்கும் அகத்தீச்சுரத்தில் ஒவ்வொரு அமாவாசை நாளிலும் பிராமணர்களுக்கு உணவளிப்பதற்கும் மங்கலச்சேரி மதிசூதனன் என்பான் நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் எாஙப[சா] ஷு வைகாசி மாதம் ۱ಕ ௳ பஞ்சமியும் வெள்ளியாழ்சையும் பெற்ற

2 மகயீரத்திந்நாள் எழுதிக்குடுத்த இடலாய்க்குடி நயினர் கரிய மாணிக்க விண்ணகர் எம்

3 பெருமான் கோவிலில் அம்பலம் ஆண்டுதோறும் கெட்டி மேவிப்பானும் அம்பலத்தில் சறுவாணிக்

4 கும் பதினன்கு தோறும் தன்மக்கஞ்சி வைச்சு வீத்திறவகைக்கும் கூட மங்கலச்சேரி மதிசூதனன் மதிசூதனன்

5 விட்டுக்குடுத்த நிலமாவது அம்பலம் ஆண்டுதோறும் கெட்டி மேவானும் அம்பலத்து ஒரு ஆனி கெடுவருநாள் மரம்வெட்டி

6 க் கெட்டிவைப்பானும் விட்டுக்குடுத்த நிலமாவது கெங்கை கொண்ட சோழபதிக் குளத்தின் கீள் காளமுதி மடைய் போ

(திருப்பவும்)

7 க்கில் நாலாங் கண்[ணா]று விடுதி தடி ஒன்று நிலம் அரைக் காணியின் முக்காலும் கஞ்சி வகைக்கு விட்டுக் குடுத்த நிலமாவ

8 து மேற்படி குளத்தின் கீள் திருவாழுமார்பன் மடைய் போக்கில் முதற்க்கண்ணாறு மூலைவயல் விடுதி தடி இரண்டு நிலம் காணி

9 அரைக்காணியும் மேற்படி அகத்தீச்சுரத்தில் தன்மக்கஞ்சிக்கு கிளக் கடைய குடுத்த நிலம் அரைக்காணி முந்திரிகை கண்ணாறு திருவுடையாட்டம் மு[டொ]க்கு தடி ஒன்று நிலம் காணியரைக் காணியும் மூன்றாங் கண்

10 ணாறு விடுதி தடி ஒன்று நிலம் அரைமாவும் ஆறாங் கண்ணாறு விடுதி தடி ஒன்று நிலம் காணியும் ஆக தடி ஆறினால் நிலம் ஒருமாவரை

11 அரைக்காணியின் முக்காலும் நான் காணியாளரோடு தானம் பெற்று அம்பல மேயின்ற வகைக்கும் சறுவாணிக்கும் தன்மக்க

12 ஞ்சி வித்திற வகைக்கும் கூட ஆசந்திரதாரவற் சந்திராதித்தர் வரைக்கு விட்டுக் குடுத்தேன் மதிசூதனன் மதிசூதனனென் ச

13 றுவாணி பிராமணருக்கும் ஆக இவ்வகைப்படி அம்[ப]லமும் கெட்டி மேஞ்சுகொண்டு தன்மக்கஞ்சியும் நடத்திக் கொண்டு போ

14 ரும் பேர் இந்த நிலம் ஒருமா வரை அரைக்காணியின் முக்காலும் உழுது பாட்டக் கடமை கொண்டு அம்பலம் கெட்டி மேஞ்சு

15 கொண்டு தன்மக்கஞ்சியும் நடத்திக்கொண்டு போதுமாறும் தீத்தமாடிவாற பிராமணற்கு அகத்தீசுரத்தில் அமாவாச தோறும் த

16 ன்மக்கஞ்சி வச்சு வித்திற வகைக்கு விட்டுக் குடுத்த நிலமாவது மூலைவயல் முதல்க்கண்ணாறு தடி இரண்டு நிலம் காணியரைக்

17 கா[ணி]யில் கிளக்கடைய தடி ஒன்று நிலம் அரைக்காணி முந்திரியும் காழமூதி மடைப்போக்கில் நாலாங் கண்ணாறு தடி ஒன்று நில

18 ம் அரைக்காணி முந்திரியின் காலும் ஆகத் தடி இரண்டினால் நிலம் காணி அரைக்காணியின் காலும் இவ்வகைப்படி அகத்தீச்சுரத்

19 தில் தன்மக்கஞ்சியும் கரியமாணிக்காள்வார் கோயிலில் தன்மக் கஞ்சியும் நன்றாய் நடத்திற பேரைக் கொண்டு நடத்திக்

20 கொள்ளவும் ஆக நிலம் ஒருமா முக்காணி அரைக்காணியும் குடுத்த மங்கலச்சேரி மதிசூதனன் மதிசூதனன் எழுத்து.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 734<br>கி.பி. 1558 |
| ஊர் : | கரியமாணிக்கபுரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. VI. பக்கம் 48 (108/1099) |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 2-A |

இடம் : கரியமாணிக்காழ்வார் கோயில் முகமண்டபத்தின் கிழக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : ஆதித்யவர்மன் சிறைவாய் மூத்தவர் என்னும் அரசர் முத்தலைக்குறிச்சியில் சிரி வீரகேரளேசுரத்துப் புதிய இடத்தில் எழுந்தருளியிருந்தபோது சில நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்ததையும் அந்நிலங்களை மங்கலச்சேரி மதிசூதனன் என்பான் இடலாய்க்குடி நாயனார் கரியமாணிக்கவிண்ணகர் எம்பெருமான் கோயிலில் ஆண்டுதோறும் அம்பலத்தில் கீற்றுப் பந்தல் போடுவதற்கும் மாதத்தில் ஒவ்வொரு பதினன்காம் நாளிலும் கஞ்சி வார்ப்பதற்கும் கொடையாக வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 அருழிசெயல் இடலாய்க்குடியில் நயினார் கரியமாணிக்காள்வார் கோயில் அம்பலம் கெட்டி மேயின்ற வகைக்கும் பதினன்கு தோறும் சறுவாணி

2 க்கும் தன்மக்கஞ்சி வீத்தின்ற வகைக்கும் கூட மங்கலச்சேரி மதிசூதனன் மதிசூ[த]னன் கொடுத்த நிலமாவது மேற்படி பற்றில்

3 கெங்கைகொண்ட சோழபதிக் குளத்தின் கீள் திருவாழுமார்பன் மடைப்போக்கில் முதற் கண்ணறு விடுதி தடி ஒன்று

4 நிலம் காணியரைக்காணியும் இதன் வடக்கு மேற்படி நயினார் திருவுடையாட்டம் தடி ஒன்று நிலம் காணியரைக்காணியும் மூன்றா

( திருப்பவும் )

5 ங் கண்ணுறு தடி ஒன்று நிலம் அரைமாவும் காளமூதி மடைப் போக்கில் நாலாங் கண்ணுறு தடி ஒன்று நில[ம்] அரைக்காணி முந்திரியி

6 ன் கீள்க்காலும் ஆருங்கண்ணுறு தடி ஒன்று நிலம் காணியும் கூட [த]டி அஞ்சுனல் கஞ்சி வகைக்கு நிலம் ஒரு மாவரையே அரைக்காணி

7 யின் முந்திரியின் காலும் அம்பலங் கெட்டி மேயின்ற வகைக்கு காளமூதி மடைப்போக்கில் நாலாங் கண்ணுறு தடி ஒன்று நிலம் அ

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திங்களேர் . . . . வளரும் கதிர்க்கடவுள் தொல்குலம் விளங்கத்தோன்றி மல்கிய வடதிசை கங்கை . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கன்னியாகுமரி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பகுதி XIV, பக்கம் 242 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 75 |

இடம் : கோனேரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத்தின் வடக்கு பக்கச் சுவர் (குமுதம்).

குறிப்புரை : முதலாம் இராஜாதிராஜனின் மெய்க்கீர்த்திப் பகுதிக்குப் பிறகு கல்வெட்டு சிதைந்துள்ளது. குமரி இராஜராஜஈச்வரம் உடையார் கோயிலுக்குத் தென் கீழ்மூலையில் உள்ள சாஸ்தா வேதியச்சாத்தன் கோயிலின் தென்பக்கத்தில் உள்ள இராஜராஜன் சாலைக்குச் சாலாபோகமாக பரிசு வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . ம் விளங்கத் தோன்றி மல்கிய வடதிசை கங்கையும் தென் றிசை இலங்கையுங் குடதிசை மஹோதயும் குண . . .

2 முற்றித் திசைதொறுஞ் செங்கோலோச்சி இசைகெழு தென்னவன் மானுபரணன் பொன்முடியானுப் பருமதிப் பசுந்தலை பொருக ளத்தரிஞ . . .

3 த்துதிகெழு ஜயங்கொண்டசோழன் உயர்ந பெரும்புகழ் கோவி ராஜகேசரி பந்மரான உடையார் ஸ்ரீ ராஜாதிராஜ தேவற்கு யா . . . .

4 மரி இராஜராஜன் சாலையின் சாலாபோகம் நாஞ்சி நாட்டு மணற் குடி ஊரோங் கைத்தீட்டு நாற்பத்தெண்ணுயிரம் பதாஹே . . .

5 கொண்ட பரிசாவது குமரி ராஜராஜஈச்வரமுடையார் கோயிலின் தென்கீழ் மூலை இருக்கும் சாஸ்தா வேதியச்சாத்தன் கோயிலின் தென்பக்கத்து . . . . . [1]

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 28-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1042 |
| ஊர் : | கன்னியாகுமரி | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பகுதி XIV, பக்கம் 240 |
| மன்னன் : | முதலாம் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 76 |

இடம் : கோனேரீஸ்வரர் கோயில் மேற்குப் பக்கச் சுவரின் பட்டையும் வடக்குப் பக்கச் சுவரின் பட்டையும்.

குறிப்புரை : இராஜராஜஈச்வரமுடையார்க்கு தேவரடியாள் கண்டன் சோலை என்பாள் திருநுந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு, இருபது ஆடுகள் கொடையாக அளித்ததையும் அதை புதன் கணபதி பெற்றுக்கொண்டு நித்தம் ஆழாக்கு நெய் அளிக்க ஒப்புக்கொண்டதையும் அவனுக்கு ஈடாக வியாழன் சடையன் நின்றதையும் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்தி ஸ்ரீ பூர்வதேசமுங் கெங்கையுங் கடாரமுங் கொண்டருளின கோப்பரகேசரி பன்மர்ராயின உடையார் ஸ்ரீ இராஜேந்திர

2 சோழ தேவற்கு யாண்டு உ௰அ ஆவது இராஜராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டு

3 குமரி ராஜராஜஈச்வரமுடையார்க்கு இத்தேவரடியாள் கண்டன் சோலை வைத்த திருநுந்தா விளக்கு ஒன்று

4 இதனுக்கு வைத்த சாவாமூவாப் பேராடு இருபத்தஞ்சு கொண்டு நித்தம் ஆழாக்கு நெய் சந்திராதித்தவல் முட்டாமல் அடுவ

5 தாகக் கொண்டான் புதன்

6 கணபதி இவனுக்கு பு

7 ணை வியாழன் சடைய

8 ன்

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : கன்னியாகுமரி
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 11-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 77

இடம் : கோனேரீஸ்வரர் கோயில் உண்ணாழியின் வடக்கு பக்கச் சுவரின் அடிப்பாகம்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . . . . . . ஞுடையார் தேவ
2 தானம் நாஞ்சி நாட்டு கோனுடர் குளமா
3 ன ஜயங்கொண்ட சோழநல்லூரி
4 ரும்பொழிக்கு மேற்க்கு தெந்னெ . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 28-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1042 |
| ஊர் : | கன்னியாகுமரி | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பகுதி XIV, பக்கம் 239-249 |
| மன்னன் : | முதலாம் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 78 |

இடம் : கோனேரீஸ்வரர் ஆலயத்தின் அந்தராளத் தெற்குப் பக்கச் சுவரின் குமுதம்.

குறிப்புரை : கோனேரீச்வரமுடையார்க்கு முள்ளி நாட்டு மதிள்க்குறுச்சியைச் சேர்ந்த வெள்ளாளன் அப்பி பொன்னுண்டி, தனது தம்பி அப்பி நாராயணனுக்காக விளக்கு ஒன்று எரிப்பதற்காக இருபத்தைந்து ஆடுகள் பரிசாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ பூர்வ்வதேசமும் மெங்கையுங் கடாரமுங் கொண்டருளின கோப்பரகேசரிபன்பராயி உடை

2 யார் ஸ்ரீ ராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு இருபத்தெட்டா வது ராஜராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டு

3 க் குமரி இராஜராஜஈஸ்வரமுடையார்க்கு முள்ளி நாட்டு மதிள்க் குறுச்சி இருக்கும் வெள்ளாளன் அப்பி பொன்னு

4 [ண்டி]யேன் என் தம்பி யப்பி நாராயணனுக்கு வைச்ச விளக்கு ஒன்று இவ்வி[ள]க்கு[க்கு] வைச்ச சாவாமூவா பேராடு இரு

5 [பத்தைஞ்சு] . . . . . பத்தின் கீள் ஆளாக்கு நெய் நித்தம் அட்டுவதா னேன் கழிக்குடி இருக்கும் வெள்ளா[ள]ன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 21-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 11-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | கன்னியாகுமரி | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பகுதி XIV, பக்கம் 249 |
| மன்னன் : | விக்கிரமசோழ பாண்டிய தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 79 |

இடம் : கோனேரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரின் கீழ்ப் பகுதி.

குறிப்புரை : கங்கைகொண்டசோழபுரத்து வியாபாரி ஆச்சன் மாற்றிலி என்பவர் திருப்பேந்தீச்வரம் உடையார்க்குத் திருவமுது படைக்க இருபது காசுகள் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாறபன்மரான உடையார் ஸ்ரீ விக்கிரமசோழ பாண்டிய தேவற்கு யாண்டு ௨௰௧ இராஜராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டுக் கழிக்குடி இராஜராஜஈஸ்வரத்துப் பெரும . . . . .

2 . யெதியும் செவ்வாய்க் கிழமையும் பெற்ற பூசத்தினாள் இத்தேவர் கோயில் முகமண்டபத்துக் கூட்டங் குறைவறக் கூடியிருந்து செய்த ஸபா காரியமாவது இன்னாட்டுக் குமரியான கங்கைகொண்டசோழபுரத்து வியாபாரி ஆச்சன் மாற்றிலியைத் திருப்பேந்தீஸ்வரம் உடையார் கண் . . . .

3 ருந்தானென்று நாம் ஜெயப[ங் கு]டுத்து இவன் பையிக்ஷம்புக்குத்தேடி இத்தேவற்குத் திருவமுதுக்கு உடலாகத் தந்த காசு இருபது இக்காசு உம் கொண்டு இராஜராஜஈஸ்வர[ம்] உடையார் தேவதானம் நாஞ்சி நாட்டுக் கோனாடர் குளம் ஜயங்கொண்டசோழநல்லூர் பெருவெள்ளத்து உடைச்சு உடைகுளமாய்க் கி . . . . .

4 ழைக்குடிக் காலினின்றும் போந்த நேர்கவார கால் கல்லவும் இக்காசு இருபதுங் கொண்டு செலுத்தி இத்திரப்பியத்துக்குச் செலவாக இக்குளத்தின் கீள் விளைஞ்ச போகத்திலே இப்பேந்

( திருப்பவும் )

தீஸ்வரம் உடையார்க்கு நித்தம் இருநாழி அரிசி திருவமுது இந் நாள் முதல் சந்திராதித்தவல் உடையார்க்குச் செலுந்திருவ . . . .

முது செலுத்துவிதாக அமைஞ்சோம் இராஜராஜஈஶ்வரத்துப் பெரு மக்களோம் ஆச்சன் மாற்றி[லி]யான பேந்திரந்தானுக்கு இப் படியே செலுத்துவிதாநோம் இராஜராஜஈஶ்வரத்துப் பெருமக் களோம் தேவகணக்கந் அரையந் குந்றந் எ[ழுத்து]

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : கன்னியாகுமரி
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : முதலாம் இராஜேந்திரன்

ஆட்சி ஆண்டு : 31-ஆம் ஆண்டு
வரலாற்று ஆண்டு : கி. பி. 1045
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : தி. தொல். வெ. தொ. I, பகுதி XIV, பக்கம் 241
ஊர்க் கல்வெட்டு எண் : 80

இடம் : கோனேரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத்தின் வடக்குப் பக்கச் சுவர் [அடிப் பகுதி].

குறிப்புரை : குமரி இராஜராஜீச்வரம் உடையார்க்கு, வைகைக்கரை தன்மசெட்டி மணற்காடன் என்பவர் திருநுந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காக ஐம்பது ஆடுகள் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்ரீ பூர்வ்வதேசமுங் கங்கையுங் கடாரமுங் கொண்ட[ருளி]ன கோப் பரகேய்சரி வன்மராவின உடையார் ஸ்ரீ இராஜேந்திரசோழ தேவற்கு யாண்டு ௩௰௧ ஆவது

2 [ராஜரா]ஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டு புறத்தாய நாட்டு குமரி இராஜராஜஈஸ்வரம் உடையார்க்கு இராஜராஜப் பாண்டி நாட்டு வைய்கைக் கரை மணலூர் வெள்ள

3 . . . . . கன் மணற்க்காடன் ஆன நடுவுநிலைத் தன்மசெட்டி வைத்த திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு வைச்ச சாவா மூவா பேராடு ஐய்ம்பது இவ்வாடு ஐய்ம்பதுங் கண்டு கொண்டு இத்தேவர் நா

4 . . . . . திரமாணிக்கத்தின் கீழ் உழக்கினால் நிசதி உழக்கு நெய் சந்திராதித்தவல் முட்டாமல் அட்டுவதானேன் ப[டை]த்தலைவன் அரையன் காவி[தி] இவனுக்கு புணை இ

5 . . . . . வட்டிகுடி இடையன் அரங்கன் மணியன் ||

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 29-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1043 |
| ஊர் : | கன்னியாகுமரி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பகுதி XIV, பக்கம் 240 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 81 |

இடம் : கோனேரீஸ்வரர் கோயில் உண்ணாழியின் வடக்கு, மேற்கு பக்கச் சுவர்களின் குமுதம்.

குறிப்புரை : கருங்குள நாட்டைச் சேர்ந்த கலிகாலசோழநல்லூரில் வசிக்கும் வெள்ளாளன் . . . . . . . னை சிவஞானபட்டாரன் குமரி இராஜராஜஈச்வரமுடையார்க்கு திருநுந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காக இருபத்தைந்து ஆடுகளைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ பூர்வதேசமுங் கங்கையுங் கடாரமுங் கொண்டருளின கோப்பரகேசரிவர்மரான உடையார்

2 ஸ்ரீ ராஜேந்த்ரசோழ தேவற்கு யாண்டு இருபத்தொன்பதாவது இராஜராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டு

3 ப் புறத்தாய நாட்டுக் குமரி இராஜராஜஈஸ்வரமுடையார்க்கு [க]ருங் குள நாட்டு கலிகாலசோழநல்லூர் இருக்கும் வெள்ளாளன்

4 . ப்பபேரம் பட்டனை சிவஜ்ஜானபடாரன் வைத்த திருநுந்தா விளக்கு ஒன்றுக்கும் வைத்த சாவா மூவாப் பேராடு இருபத் தஞ்சும் . . . .

5 டி கோனு[ர்] சந்த்ராதித்தவல் முட்டாமல் நித்தம் ஆழாக்கு நெய் அட்டுவதாகக் கொண்டான் நாஞ்சி நாட்டு மணற்குடி இருக்கும் இடை

6 யன் ஈஸ்வரன் இலுப்பை இவனுக்குப் புணை இவ்வூர் இருக்கும் இடையன் அரங்கன் பலதேவன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 30-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1048 |
| ஊர் : | கன்னியாகுமரி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பகுதி VIII, பக்கம் 163 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 82 |

இடம் : கோனேரீஸ்வரர் கோயில் அந்தராளத்தின் வடக்கு பக்கச் சுவரின் குமுதம்.

குறிப்புரை : இராஜராஜப்பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டுக் கழிக்குடியைச் சேர்ந்த ஸ்ரீ வல்லவப் பெருஞ்சாலையான இராஜராஜப் பெருஞ் சாலைக்கு, நாஞ்சி நாட்டு மணற்குடியைச் சேர்ந்த மஹிபாலகுலகாலப் பேரளத்தி லிருந்து அனுப்பப்படும் உப்பு அனுப்பப்படாது முட்டுப்பட்டது. அரசியிடம் பணி புரியும் அரிகுலகேசரியான பவித்திரமாணிக்கத் தொங்கப் பேரரையன் என்பான் அரசனிடம் அதுபற்றி முறையிட்டான். அதனைக் கேள்வியுற்ற முத லாம் இராஜாதிராஜன் உப்பளங்குளைக் கூறுசெய்யும் அதிகாரிகளுக்கும், கண் காணி செய்யும் அதிகாரிகளுக்கும், முன்பிருந்தவாறே இராஜராஜப் பெருஞ் சாலைக்கு, ஒரு கலம் உப்புக்கு ஒரு நாழி உப்பு என உறைபிடித்து அனுப்பவேண் டும் என்று உத்திரவு பிறப்பித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ வீரபாண்டியன் தலையும் சேரலன் சாலையும் இலங்கை யும் தண்டாற்கொண்ட கோவிராஜெகேசரி

2 பந்மரான உடையார் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு முப்ப தாவது ராஜராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டு புறத்

3 தாய நாட்டுக் கழிக்குடி ஸ்ரீ வல்லவப் பெருஞ்சாலைய[ா]ன ராஜ ராஜ பெருஞ்சாலைக்கு நாஞ்சிநாட்டு மணற்குடியான மஹி

4 பாள குலகாலப் பேரழத்து கைய் உறை கொள்ளு முப்பு முட்டி கிடக்கையில் ராஜாதிராஜ தேவர்க்கு உலகுடைய பிராட்டியா

5 ர் திருப்பள்ளித் தொங்கலுடையான் திட்டை யரிகுலகேசரியான பவித்திரமாணிக்கத் தொங்கப் பே[ர]ரையன் விண்ணப்பஞ் செய்து கொடு வந்த திரு

( திருப்பவும் )

6 முகப்படி கோனேர் இன்மை கொண்டான் ராஜராஜப் பாண்டி நாட்டு ராஜராஜத் தென்னுட்டு உப்பளங்க[ழு]க்கு கூறு செய் வார்கழுக்கு கண்காணி செய்வார்கழுக்கும் குமரி ஶ்ரீ

7 வல்லவப் பெருஞ்சாலையான ராஜராஜப் பெருஞ்சாலைக்கு உத்தம சோழ வளநாட்டு நாஞ்சிநுட்டு மணற்குடியான மயில்வாள குலகாலப்[1] பேரளத்து உப்பு மு

8 தலிலும் செலவிலும் கலத்துவாய் நாழி கையுறை கொண்டு இச் சாலைக்கு முன்பு நிவணம் செலுத்தி வஙமையில் லிப்போது உப்பு உறை நெய் பிடித்து

9 கொள்ளு[ங்]கெலீரென்று கேட்டோம் முன்பு இப்பரிசு செய்

10 து வரு[மாகி]ல் உறை உப்பு முதலிலும் செலவிலும் கல

11 த்துவாய் நாழி உறை உப்பு ராஜராஜன் பெருஞ்சாலை ச

12 . வசம் [கூட்டி] குடுக்க என்று திருமந்திர ஓலை செம்பியன் தென்

13 கரை நாட்டுக் கோனுர் எழுத்திநுல் திருமுகம் பிரசாதஞ் செய்து . . . . . . . . .[2]

---

1. மஹிபால குலகால
2. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 548<br>கி. பி. 1372 |
| ஊர் : | கிருஷ்ணன் கோயில் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | தி.தொல்.வெ.தொ. V, பகுதி II, பக்கம் 127 |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : கிருஷ்ணன் கோயில் உள் திருச்சுற்றின் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : கோயில் கன்மிகள் சிலவற்றைத் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் ௫௱௪௰அ ஆ௰ யனு ஞாயற்று உ௰௩ சென்ற நாள் . . . . .
2 ஊச் சதுர்வேதிமங்கலத்து திருக்கடலூர் யஜ்ஞநாராயண ஷட்ட . . .
3 தேவஉத் திருவடி கோயிற் கன்மிகள் தன்மதானமாகக் குடுத்த . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 945<br>கி. பி. 1769 |
| ஊர் : | கிருஷ்ணன் கோயில் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பகுதி II, பக்கம் 129 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : கிருஷ்ணன் கோயிலில் உள்ள கொடிக்கம்பத்தின் பீடத்தில் உள்ளது.

குறிப்புரை : குளத்தூரைச் சேர்ந்த கணபதி என்பவர் கொடிக் கம்பம் பிரதிட்டைச் செய் ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 உ கொல்லம்௯௱௪௰௫ விகிறுதி வருஷம் சித்திரை மாதம் உ௰அ உ திங் கழ்க் கிழமையும் சித்திரை நட்செத்திரமும் பூறு

2 வ பட்சத்துத் த்ருயோதெசியும் சித்திநாமயோகமும் பன்றிக் கர ணமும் இந்த சுப தினத்தில் சுப பிறதிட்டை த[று]மம்

3 குளத்தூரான் கணபதி சதாசேர்வை உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 639<br>கி. பி. 1463 |
| ஊர் : | கிருஷ்ணன் கோயில் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. V, பகுதி II, பக்கம் 125-126 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : கிருஷ்ணன் கோயிலின் வெளிப்பிரகாரத்தில் தெற்குப் பக்கத்தில் நிறுத்தப் பட்டிருக்கும் தனிக்கல்.

குறிப்புரை : அந்தர்வேதி ராஜ்யத்தைச்[1] சேர்ந்த பரதேசிகளில் தீர்க்கபட்டர் என்பார், நாஞ்சி நாட்டு பிரமதேயம், வடசேரியான ஸ்ரீ மதாதித்யவர்மச் சதுர்வேதி மங்கலத்தில் உள்ள உருபநாராயண விண்ணகர் எம்பெருமானுக்கு உச்சி வேளை நைவேத்யத் துக்கும் ஒரு பிராமணருக்கு உணவு அளிப்பதற்குமாக பரிசாகப் பணம் அளித் ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம்
2 ௬௱௩௰௯ ௵ க
3 ற்கடக ஞாயிறு
4 பதினொன்று செ
5 ன்ற பூர்வப
6 க்ஷத்து பஞ்ச
7 மியுந் திங்கள்
8 க் கிழமை[யு]ம்
9 பெற்ற உத்திரத்
10 ன்[னுள்] நாஞ்சி நா
11 ட்டு ப்ரஹ்மதேய
12 ம் வடசேரியா
13 ன ஸ்ரீமஹாதித்ய

1. அந்தர்வேதி ராஜ்யம் என்பது கங்கை, யமுனை ஆகிய ஆறுகளின் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். இது ஆரிய பிராமணர்கள் வாழ்ந்து வந்த புனிதத்தலம் என்று கூறப்படுகிறது.

( திருப்பவும் )

14 வ௲௰சதுர்வே௰

15 ீ மங்கலத்து

16 நயினர் உருப

17 நாராயனை வி

18 ண்ணகர் எம்பெ

19 பருமான் கோ

20 விலில் நயிநா

21 ற்கு சூரியரில்

22 சுஷவே௰ீரா

இரண்டாம் பக்கம்

23 ஜூத்[து]

24 பரஜேபபி

25 களில் [ஸ்ரீ]

26 வ௰ஷ்டி

27 ர் ய௲ ௰௨

28 ாக உச்சி

29 ஸ[ஙி]வ௵

30 ஜையில்

31 கூட ணை

32 ச்சு நிவே

33 ௰ச்சு ஒரு

34 ந௨வ௲ரா

35 மாக ஒரு பி

36 ரா௲ணை

37 ன ஊட்டும்

38 படி கற்பித்த

39 இதுக்கு நாள் க

40 க்கு அமுதுபடி

41 உ ௨ க்கு ஷி

42 ரூஉ எம்மு

43 ரம் உப்பு அமு

44 துக்கு ஷி உரி

45 ஆக ஷி

மூன்றும் பக்கம்

46 ரூஉ உரி[யு]ம்

47 ஆக ம[ா]ஸம் க க்கு ஷி

48 ஒரு கலம் இரு உழக்கு ஐஞ்ஞாழி

49 ஆக
50 ஆண்டு க க்கு மிக்க
51 நாள் சு க்குமாக
52 மீ ய ஙு •
53 க்கு நூற்று
54 க்கு மூன்று
55 கோட்டை நெ
56 ல்லு விழுக்காடு
57 உஷயம் கொ
58 ண்டு நடத்தும்ப
59 டி கற்பித்து இ
60 துக்கு பணம் சாருய
61 ம் சருவத்துக்கு
62 பணம் உயம் ஆக
63 பணம் சாருய ம் மா
64 ாதம் க க்கு இ
65 லையமுது அ
66 டைக்காயமு

நான்காம் பக்கம்

67 துக்கு பணம் வம்
68 சந்தன க
69 ாப்புக்கு பணம் வ
70 ம் நெய்யமு
71 துக்கு பணம் வம் க
72 றியமுதுக்கு
73 பணம் வம் ஆக பணம்
74 க க்கு பலிசை மாஸம்
75 க க்கு பலிசை
76 கொண்டு ந
77 டச்கும் படிக்கு
78 பணம் ருய ம் ஆக
79 பணம் ரூா சூ
80 அநு[த]ாரமுடாம
81 ல் நடக்கும்படி
82 கற்பித்து திரு
83 ப்படியில் உ௨
84 கம் செய்து உ௨[க]
85 பெருவுஉாக இப்

86 பணம் அஞ்ஞூறு
87 ம் உழையம் ெ
88 காண்டோ மிக்ஷே
99 காயில் கதீஃ
90 களும் உள்ளாரி
91 யஞ் செய்வார்களும்
92 பரதேசிகளிம் கூ
93 வஸூத்ாரம் முட்டாம
94 ல் நடக்கும் படிக்கு ஸ்ரீ
95 வஉபட்டனென் ரூ
96 பநாராயண விண்ணகர் எ
97 ம்பெருமானுக்கு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 636<br>கி. பி. 1460 |
| ஊர் : | கிருஷ்ணன் கோயில் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | திருவிதாங்கூர் மன்னன் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |
| மன்னன் : | செண்பக ஆதித்தவன்மர் | | |

இடம் : கிருஷ்ணன் கோயில், முகமண்டபத்தில் உள்ள கிணற்றுக்குப் பக்கத்தில் வடக்குப் பக்கம் நிற்கும் தனிக்கல்.

குறிப்புரை : செண்பக ஆதித்தவன்மரான சிறைவாய்முத்து இக்கோயிலில் எழுந்தருளியபோது கோயில் கிணற்றைத் திருப்பணி செய்வித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 செண்பக ஆதித்
3 தவன்மரான
4 சிறைவாய்முத்[து] இரு
5 ந்தருளி யெடத்தின் தி
6 ருப்பணியாக கொல்
7 லம் ௬௱௩௰௬ ௵ பங்
8 குனி மாதம் ௰௩ உ முதல் வை
9 [காசி க] வரையில் கிண
10 று கற்கெட்டு

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : கொச்சைப்பிடாரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் ஆண்டு 669 கி. பி. 1493
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : தி. தொல். வெ. தொ. VI, பகுதி II, பக்கம் 136-137
ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : பெருமாள் கோயில் திருச்சுற்றின் தெற்குப் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் தனிக்கல்.

குறிப்புரை : நாஞ்சி நாட்டுப் பிரமதேயம், ஸ்ரீ குலசேகரச் சதுர்வேதிமங்கலத்து நயினர் பொலிந்துநின்றருளியபிரான் கோயிலில், ஆரிய தேசத்தைச் சேர்ந்த கங்காதர பிரமசாரியும், தொண்டைமண்டலத்தைச் சேர்ந்த பிராமணன் சிங்கப்பெருமாளும், சோழமண்டலத்து சொக்கியாரும், கொட்டிசு கிருஷ்ணபட்டனும் ஐந்து பிராமணர்களுக்கு நித்தம் உணவு அளிப்பதற்காக மொத்தம் இரண்டாயிரம் பணம் பரிசாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம்
2 ௬௱௬௰௯க ஆவணி
3 மாதம் உ௰ ௨ ம் பூவ-உவக்ஷ
4 த்து ஸவ்தியும் திங்
5 கள் கிழமையும் பெ
6 பற்ற அநிழத்து நா
7 ள் நாஞ்சி நாட்டு ப்ர
8 ஹ்மதேயம் ஸ்ரீ குலசெ
9 கரச் சதுவே-உதிம
10 ங்கலத்து நயிநா
11 ர் பொலிந்து நி
12 ன்றருளியபிரா
13 ன் ஸ்ரீ பண்டார
14 த்தில் நமஸ்காரம்

(திருப்பவும்)

15 கற்பித்தவர்களு
16 க்கு பேர்வழி ஆரி
17 யதேஶத்து மம்மாயா
18 ஸ்ரூஹூவாரி திருப்ப
19 டியில் நமஸ்கார
20 ம் இரண்டுக்கு உ
21 தகம் செதுகுடுத்
22 த பணம் அளம் தொ
23 ண்டமண்டலத்து
24 ஸ்ராஹூணன்
25 சிங்கப்பெருமாள்
26 முர நமஸ்காரம்
27 ஒன்றுக்கு உ-தகஞ்

## இரண்டாம் பக்கம்

28 செது குடுத்த
29 பணம் சாம் சோழ
30 மண்டலத்து
31 சொக்கியார்
32 [ . . . . ] ஒரு நம
33 ஸ்காரம் ஒன்று
34 க்குத் திருப்படியி
35 ல் உதகம் செ
36 துக் குடுத்த பணம்
37 சாம் இவ்வக
38 ரத்து கொட்டி
39 ஸ ஸ்ரீ க்ருஷ்ண
40 ஹட்டன் கற்பி
41 த்த நமஸ்கா
42 ரம் ஒன்றுக்
43 கு நயினர் திரு
44 ப்படியில் உ
45 தகம் செய்து
46 குடுத்த பணம் சா
47 மாக நமக்கா
48 ரம் அஞ்சும்
49 இப்பணங்க
50 ளில் ஜஜி ௧
51 காண்டு ந

52 யிஞர்க்கு
53 நிவெதநம்
54 கறியமுது
55 ம் மோரும் •
56 உப்பு முளகு தேங்
57 காயும் கூட்டி ஞயி
58 ஞர் கோவிலில்
59 இருந்து ஆசந்த்ராதா
60 லம் அஞ்சு ப்ராஹ்ம
61 ணர் பூஜித்துப்
62 போரும்படி கற்பி
63 த்து இது முட்டுவெ
64 ாராமல் இவ்வக
65 ரத்து பட்டர்களு ே
66 மல் பாத்து நடத்
67 திக் கொண்டு
68 போரும்படி ந
69 மஹோரம் கற்
70 பித்த க்ருஷ்ண பட்டன்

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : கொட்டாரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் ஆண்டு 1072
கி. பி. 1896
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : உயர்நிலைப் பள்ளியில் உள்ள தனிக்கல்

குறிப்புரை : கணக்கு ஈசுவரன் கிருஷ்ணன் என்பவர் கருங்கல் தொட்டி அமைத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்ரீ
2 கல்க்குளம்
3 கருங்கல்
4 தொட்டியம்
5 வீட்டில் கணக்கு ஈ
6 சுவரன் கிற்
7 ஷ்ணன் கெட்
8 டிக்கப்பட்
9 டது ௳
10 கநு-எ-க0எஉ

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : கோட்டாறு
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் ஆண்டு 943 கி. பி. 1767
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : மசூதியின் உள் பக்கத்தில் உள்ள தூண்.

குறிப்புரை : அரிப்புக்கிலேக் கச்சேரியைச் சேர்ந்த சேரா முதலியார் மூப்பனின் நன்மைக்காகச் செகுநூர் முதலியார் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 சுாசூயிரு ஞு
2 தைய் மீ யிகூ உ
3 அரிப்பு கிலே க்க[ச்]
4 சேரி சேரா முதலி
5 யர் மூப்பனுக்கு
6 செகுநூற் மு
7 தலியார் தூ
8 ண் உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 943<br>கி. பி. 1767 |
| ஊர் : | கோட்டாறு | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : மசூதியின் உள் பக்கத்தில் உள்ள தூண்.

குறிப்புரை : அள்ளங்கெரசு அகமதுமித்துனுவின் நன்மைக்காக செகுநூர் முதலியார் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கூசமஙு ஹுப
2 தை மீ யஎ வ
3 அள்ளங்கெ
4 ரசு அகமது
5 மித்தினுக்கு
6 செகு நூற் முத
7 லியார் தூண்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 11-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | சாமிதோப்பு | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : தாசநாடார் தோப்பில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : கல்வெட்டில் மெய்க்கீர்த்திப் பகுதியில் சிலவும், இடைப்பகுதியில் சிலவும், கடைப் பகுதியில் சிலவுமே உள்ளன. சாலேக்கு உப்பு கொடையாக அளிப்பதைப் பற்றி குறிக்கிறது.

கல்வெட்டு :

முதல் பக்கம்.

1 [ ரைச் சேணுட் ]
2 டொதுக்கிக் கூப
3 கத்தரைசரைச் சேவ
4 கத்துலேத்து வே
5 லே கெழு காஞளூர்ச்
6 சாலே கலமறுத்த . . . . . .

இரண்டாம் பக்கம்.

7 . . . . . . மாஞப
8 ரன் பவி
9 த்திர மா
10 ணிக்க
11 த்தொ
12 ங்கப்பே
13 பரையன் . . . . . .

( திருப்பவும் )

மூன்றாம் பக்கம்

14 வாய் நாழி[ை]
15 கய்யுறை கொ
16 ண்டு இச்சா
17 லைக்கு மின்
18 பு நிவந்தம் செ . . .

நான்காம் பக்கம்.

19 . . . . . . .
20 ச்சணல்
21 . ணை . ஞ்செ
22 சயதரன் வ
23 ந்த திருமுக
24 ப்படி ஸூ
25 ஸ்தி ஸ்ரீ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 11-12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சாமிதோப்பு | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : வட்டத்திட்டு தோப்பில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : அழகிய சோழ சித்திரவில்லி, உய்யகொண்டசோழ சித்திரவில்லி, கண்டராதித்த சித்திரவில்லி ஆகியோர் இரண்டு திருநுந்தாவிளக்கு அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

## முதல் பக்கம்

1 . . . உரிமை
2 மயிற் சிற[ந்]த மணி
3 முடி சூடி மீனவர் நி
4 லைகெட வில்லவர்
5 குலைதர ஏனை மன்
6 னவர் இ[ரி]யலுற்றுழித
7 ர திக்கனை[த்]துன் சக்கர
8 நடாத்தி வீரசிங்கா
9 ஸநத்து அவநிமு
10 முதுடையாளோடும்
11 . . . . . . . . . . . .

## இரண்டாம் பக்கம்

1 . . . . . . . . . . . .
2 . . க்கு இந்நா
3 ன் குடியான மஹி
4 பாளகுலகாலப்

( திருப்பவும் )

5 . சத்து பெருமாள் திரு
6 மேனியும் நம்பிரா
7 ட்டியார் திருமேனியு
8 ம் பிள்ளைகள் திருமே
9 னியும் கல்லியா
10 ண . திருமேனியாக
11 . . . . . . . . . . . .

## மூன்றாம் பக்கம்

1 . . இவர் பக்கல்
2 . . . . . . . . . . .
3 . . கன்னியா
4 . . தித்தப் பல்லவ . .
5 . . சங்கர . .
6 . . கணக்கு . .
7 குலடையானும் . .
8 . . . . . . . . . . .
9 . வனத்துக்கு அளந்
10 . . பொன் பற்றி உ
11 டையார்க் கண்டன்
12 சேந்தன் ஆன கண்

## நான்காம் பக்கம்

1 . . . . . . . . . . .
2 யும் அழகியசோ
3 ழ சித்திரவில்லி
4 யும் உய்யகொண்
5 டசோழ சித்திரவில்லி
6 யும் கண்டராதித்
7 த சித்திரவில்லியு
8 ம் இத்தேவர்க்கு திருநு
9 ந்தா விளக்கிரண்டுக்கு
10 ம் இவ்வனைத்து நாங்
11 கள் வைத்து குடுத்த ப
12 த்தி நாலும் இந்நா
13 லு பத்தியிலும்
14 விட்டு வட்டியாடின
15 . . . . . . . . . . . [1]

---

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயிலின் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : திருவட்டாறு தேசத்து பாப்பன், இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 திருவாட்டா
2 று தேசத்து
3 பாப்பன் இந்த
4 [தூண்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றில் ஒரு தூண்.

குறிப்புரை : குமாரநல்லூரைச் சார்ந்த மாங்காட்டு வரதசங்கரன் துப்பன் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 குமார நல்லூர்
2 மாங்காட்டு வர
3 தசங்கரன் து
4 ப்பன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றில் ஒரு தூண்.

குறிப்புரை : அய்யப்பன் தாணுபிள்ளை என்பார் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 அய்யப்பன்

2 தாணு பிள்ளை[1]

---

1. இச்சொல் குறி ஒன்றினல் காட்டப்பெற்றுள்ளது.

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 4

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றில் ஒரு தூண்.

குறிப்புரை : கிருட்டிணன் நாரண நம்பி என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 மலே மண்டல
2 த்து அக்கரை தே
3 சிகளில் கிட்டிணன்
4 நாறண நம்பி

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 330<br>கி. பி. 1154 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றின் மேற்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் முதற் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் ௩௱௩௰ ஆவது இடப நாயிறு சென்ற [வியாழக் கிழமையும்] . . . . .

2 நாள் . . . . . . . . . . . [1]

1. பிற பகுதிகள் சிதைக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : திருவாட்டாற்றைச் சேர்ந்த கணக்கர் இராமன் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 திருவாட்டாறு தேச

2 த்து கணக்கு பாப்பான் இரா[மன்]

3 செய்வித்த தூண்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகஸ்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயிலின் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : விலவூரைச் சேர்ந்த ஐயப்பன் பாப்பன் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 அய்யப்பன்
2 பாப்பன்
3 விலவூர்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயிலின் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : தாயாற்றைச் சேர்ந்த ஸ்ரீரங்கநாத சிற்பாச்சாரி என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 தாயாற்று
2 ஸ்ரீ ரஂஙநாய
3 சிற்பா[1] ச்சாரி

1. 'பா' என்பது ஒரு குறியினால் காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயிலின் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. எளைய நயினன் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 காளிபளு எ
2 ளைய நயினன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயிலின் முதற் சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : மாளி . கை மடம் பிச்சனின் தம்பி காத்தன் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 மாளி . கை மடம்
2 பிச்சன் தம்பி
3 காத்தன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : செண்பக மார்த்தாண்டக் குட்டி என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 நல்லாம்பிளை
2 ப் பெற்றார்
3 செண்பக
4 மாத்தாண்ட
5 க் குட்டி

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 12

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : இளைய நயினான் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கன்னி . ௵

2 இளைய நயி[னான்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : புதுவீட்டு சாதவேதன் என்பானின் மனைவி தேவகி அம்மாள் கொடுக்க வேண்டிய பணத்தில் செய்து வைக்கப் பெற்ற தூண் என்பதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 புத்தில்லத்து
2 சாதவேதன்
3 தேவகி அம்ம
4 கணக்கு பா
5 [க்கிக்கு]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17 18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : உமையம்மை மகள் செகாக்குட்டி என்பவள் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 சிறப்பில் டுரு ல்
2 உமையம்மை
3 மகள் செகாக்கு
4 ட்டி

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |
| அரசு : | — | | |
| மன்னன் | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றிலுள்ள ஒரு தூண்.

குறிப்புரை : கிட்டிணன் நாகபட்டன் என்பான் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கிட்டிணன் நா
2 கபட்டன் சதா
3 சேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 320<br>கி. பி. 1144 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றின் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : சுசீந்திரமுடைய மகாதேவர்க்கு, திருவமுதுக்குக் கொடுத்த கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லந்தோன்றி ௩௱௨௰தாவது மீன ஞாயற்று
2 வேணுடு வாண்டருளுன்ற ஸ்ரீ கோதை கொள்பன்மர் நாஞ்சி நாட்டு சுசீந்திர
3 முடைய மஹாதேவர்க்கு திருவமுதுக்கு அரி[சி] நானாழியும் திரு வேங்கட நிலே ஆழ்வார்க்கு திருவமுது
4 க்கு அரி[சி] நானாழியும் ஆக திரமிரண்டுக்கும் அரி[சி] நானாழியும் ஆக அரி[சி] பன்னிரு நாழியும் கறியமுது நெய்
5 யமுது தயிரமுதுக்கும் நித்த நிமந்தஞ் செல்வதாக விட்ட நிலமாவது இத்தேவர் தேவதா
6 னங்களில் நிருபசேகரநல்லூரும் இம்தென் வளநல்லூர் இரு பூவாழும் நிலத்திலே இருப
7 து மா நிலமும் இதினோடு மடைய் ஒரு பூவாழும் நிலத்திலே பத்து மாவும் ஆக
8 நிலம் முப்பது மாவுக்கும் ஸ்வாமிக்கு இறுக்கக்கடவ இறைதேவ ஸ்ரீ பண்டாரத்திலே . . [நி]
9 ல்லனந்தும் நித்தம் மந்திரஞ்சந்திராதித்தியவற் செல்வதாக திருப் படியிலே நீர்வார்த்தருளி
10 கல்வெட்டி கொள்க என்று திருஎழுத்து ரு . . . . திருமுத்தம்பி எழுத்து வெட்டினேன் இவ்வூர் தச்சன் சோழ
11 ன் செல்வனை முன்னூற்றுவ ஆசாரியன் எழுத்து உ.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 325<br>கி. பி. 1149 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் பிரகார, வடபுறச்சுவர்

குறிப்புரை : சுசீந்திரமுடைய மகாதேவர்க்கு நித்திய நிமந்தங்களுக்காக நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொல்லம் ௩௱உ௰௫ ஆவதிநெதிராமாண்டு கன்னியில் வியா

2 ழ நின்ற மிருச்சிகநாயிற்று வேணுடு வாழ்ந்தருளுகின்ற ஸ்ரீ கோதை கொள்பன் [ம]

3 ர் திருவாடிக்கமைந்த அதிகாரர் நாஞ்சிநாட்டு கங்காடான் நிருப சேகர நல்லூர்ப்ப இந்தென் வடந

4 ல்லூர் நிலம் அறுபதும் [நா]லிலும் நாம்தத்நித்தமுடைய மஹா தேவர்க்கு செலவின்னு விட்டு

5 க் குடுத்த நிலம் இந்த நிலம் உ௰ மாவுந் நீக்கி நின்ற நிலம் நாலு மாவுங் கொண்டு நித்தம் செம்பு நாழியால் இரு

6 நாழி அரிசி வடதிருவேங்கடத்தாழ்வார்க்கு இவரும் பலராயின வலிகோயிலிருக்கு இக்கோ

7 இ நிலம் இ . . . மாவும் முதக்கன் தந்து திருவாதி நிலம் . . . மாவும் . . . .

8 நிலமு . . . . . . ணி . . . . . நாள . . ண்டா . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 320<br>கி. பி. 1144 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV, பக்கம் 20 |
| அரசு : | வேணாடு | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |
| மன்னன் : | ஸ்ரீ கோதைகேரளவன்மர் | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், முதல் திருச்சுற்றின் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : சுசீந்திரமுடைய மகாதேவர்க்கு நித்திய நிமந்தங்கள் செய்வதற்கு ஸ்ரீ கோதை கேரளவன்மர் அளித்த கொடையைக் குறிக்கிறது

கல்வெட்டு

1 கொல்லந் தோன்றி ௩௱௨௰ ஆவது [வேணாடு வாழ்ந்தருளுகின்ற] ஸ்ரீ கோதை கேரளவன்மர் நாஞ்சி நாட்டு சுசீந்

2 திரமுடைய மஹாதேவர்க்கு நித்த நிமந்தஞ் செல்வதாக இத்தேவர் தேவதானங்கள் தென்வளநல்லூரில்

3 கற்பித்த பன்னிருநாழி அரிசி செலவில் திருவேங்கடநிலையாழ் வார்க்கு கற்பித்த அரிசி நானாழியிலு

4 ம் இருநாழி அரிசிச் சோறு பள்ளியாண்டிக்கு அட்டிப்பெரு[க] மந்திராதித்வற் தன் அன்னுவயத்

5 தார் கூட்[ட]மும் ஏற்றுக் குத்தி திருவமுதரிசியுங் கொண்டு சென்று திருவமுது வையித்துக்கொண்டு

6 வருமாறு கல்வெட்டிக் கொள்க வென்று திருவெழுத்திட்ட திரு முகப்படி கல்வெட்டினெ

7 ன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 301<br>கி. பி. 1125 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. VIII, பக்கம் 32 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 19 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றின் வடபுற வெளிச்சுவர்.

குறிப்புரை : மாதேவர் கோயிலில் திருவிக்கிரமன் என்பவர் சோமாஸ்கந்த உருவத்தை எழுந்தருளுவித்து அமுது செய்விக்க நிலம் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லந் தோன்றிய ௩௱௧ ஆக மாண்டு இடபத்தில் வியாழந் நின்ற மிதின

2 நா[யி]ற்று நாஞ்சிநாட்டு சிவிந்திரத்து சிவல்லமங்க[ல]த்து அரங்கன் திருவிக்கிரமன் சிவிந்திரமு

3 [ஙை]டய மாதேவர் கோயிலில் எழுந்தருளிவித்த உமாஸஹிதஸயிதத் திருமேனிக்கு அமுது செய்தருள விட்ட பூமி இவ்

4 வூர் வேட்டுகெ குளத்தின் கீள் இந்திரவன் வாய்க்காலுக்கு தெற்கு [௩ க[1]] திருவேங்கட நாராசத்துக்கு மேற்கு திருவேங்கட வா

5 [2]ய்க்கால் ஆரே மா வடுரெக் காணியும் இவ்வாய்க்காலுக்கு தெற்கு அஞ்சாங்கண்ணுற்று இ[ந்]நாராசத்துக்கு கிழக்கு

6 [3]. . . . . . . . . . . . . . .

---

1. மூன்றுங் கண்ணுறு என்று இலக்கத்தால் குறிக்கப்பட்டுள்ளது.
2. திருவாங்கூர் கல்வெட்டுத் தொகுதியில் 5-ம் வரி சரியாக வாசிக்கப்படவில்லை.
3. பிறவரிகள் மிகவும் சிதைந்து விட்டன.

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் ஆண்டு 384 கி. பி. 1208
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : தி. தொ. அ. 84/1096
ஊர்க் கல்வெட்டு எண் : 20

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்றின் வடக்குப் பக்கச் சுவர் (வெளிப் பக்கம்). [ஜயந்தீஸ்வர மகாதேவர் சன்னதிக்குத் தெற்கில்].

குறிப்புரை : ஸ்ரீமத் துவாரகை கோயிலுக்கு நித்திய நிமந்தங்களுக்கும், திருவமுது செய்வதற்கும் வேண்டிய பொருள்களைத் திரட்டித் தருவதற்கு இரண[சி]ங்கநல்லூரைச் சேர்ந்த சங்கரநாராயணன் என்பாரை நியமித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்ல[ம்] ௩௱அ௰ச மாண்டை மீனநாயிற்று சுசீந்திர மான சுந்தரசோ[ழ]

2 ச்சதுர்வேதிமங்கலத்து ஸபையும் பூலோகமும் ஸ்ரீமத் துவாரகை ஆழ்வார் ஸ்ரீ கோயிலி

3 ல் சந்தி தேவைக்கு இரண[சி]ங்கநல்லூர் வாசிய[ா]ன சங்கர நாராயணனுக்கு . . . க்கா

4 . . . . ஆக சந்திராதிதவற் அதிகரிச்சுகொண்டு நித்த நிவந்தம் சுசீந்திரமுடைய மஹாதேவர் ஸ்ரீகோயில் தி

5 ருபோதினு நியதிபடிக்கு நாழி [ப]ச்சை அரி[சி]க்கு அஞ்சிரண்டால் பதினாழி [ப]ச்சை நெல்லு ஏற்றிக் குத்த திருபோதினு நா

6 ழி அரி[சி]யும் குடுத்து தி[ரு]போதும் செய்து பாதிபாடு சோறு கொண்டு திருப்பணியும் வேண்டுமது செய்து முக்கால் வ

7 ட்டத்து வழிபாடு எப்பேபட்டதிலும் ஆ[டி]யதும் குடியதிலும் நம்பிக்கு பாதிபாடு நீக்கி நின்ற கூறுகொள்வானு[க]

8 வும் இப்படி சம் . . தேவர்க்கு திருமாலையும் கட்டி சாத்தி . . . . முக்கால் வட்டத்து . . . . . . . . .

9 கும் இட்டு . . . முக்கால் வட்டங் கழகம் சங்கரநாராயணன் . .

10 மையார்க்கும் வருஷாதிதூவத் அதிகரிச்சுக்கொண்டு . . . .

11 ங்கரநாராயணனுக்கு ஸபையும் மஹாஸபையும் இட்டுக் குடுத்தோம் ஸ்வஸ்தி [நன்றாக] ௳

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 21 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயில் செண்பகராமன் மண்டபத்தின் தெற்குச் சுவர்.

குறிப்புரை : பரிசுக்கு ஒப்பமிட்டவர்களின் பெயர்களைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 சோமாசிமங்கலத்து அகதி சந்திரன் எழுத்து
2 புதுமாடத்து கண்ணன் சிவிந்திரவாதி எழுத்து
3 அறியில் அரங்கன் சிவிந்திரவாதி எழுத்து
4 கூத்தன் பள்ளி ஆதிச்சன் சிவிந்திரவாதி எழுத்து
5 வேலியறை ஆதிச்சன் ஆதிச்சதன் எழுத்து
6 சீவலமங்கலத்து சங்கரன் சிவிந்தரவாதி
7 எழுத்து முல்ல மங்கலத்து சிவிந்தரவாதி
8 தாமோதிரன் எழுத்து சீகாரிய கண
9 க்கு தம்பி மாத்தாண்டன் மாத்தண்டன்
10 எழுத்து சீபண்டார கணக்கு தம்பி ஆதி
11 ச்சன் ஆதிச்சன் எழுத்து தன்ம கணக்
12 கு பெருமாள் நயினன் எழுத்[து]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 22 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயிலில் செண்பகராமன் மண்டபத்தின் தெற்குச் சுவர் (மளிகை அறை).

குறிப்புரை : மயிலேறும் பெருமாள் என்பவரை இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கலியுக ஸம்வக்ஸ[ர]ம் நாலாயிரத்து . .
2 திருத்தம்பியார் இராமவன்மரான சிறைவாயமுத . .
3 செயதுங்கனாட்டு தொரூபம் கிழப்பொத்தொரூபம் இ . .
4 இருந்தருளிய இடத்தார் மாரபண்டாரத்து . .
5 தவிற்த்து கணக்கும் கழித்து தந்தோம் தாங்களும் இத் . .
6 மயிலேறும் பெருமாள் எழுத்து இப்படிக்கு கணக் . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 646<br>கி. பி. 1470 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | திருவிதாங்கூர் மன்னர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV, பக்கம் 94-96 |
| மன்னன் : | ஸ்ரீ வீரராம ஸ்ரீராமவர்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 23 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபத்தின், வடக்குச் சுவர் (வெளிப்பக்கம்).

குறிப்புரை : திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீ வீரராம ஸ்ரீராமவர்மரான திருப்பாப்பூர் மூத்த திருவடி, தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பக இராமன் முகமண்டபத்தில் எழுந்தருளியிருந்தபோது, தென்கோட்டு சுசீந்திரத்தைச் சேர்ந்த கேசவன் என்பானுக்கு ஏழு கலம் விதை விதைக்கக்கூடியதான நிலங்களையும், தோட்டங்களையும் நாநூறு பணத்தையும் கொடையாக அளித்து, அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தைத் தனது பிறந்த நாளான இரேவதி நட்சத்திரத்தில், சுசீந்திரமுடைய நாயனர் கோயில், உமையம்மை நாச்சியார் கோயில், தென்திரு வேங்கடமுடைய நாயனர் கோயில் ஆகிய கோயில்களில் நிகழும் விழாச் செலவிற்கும், மார்கழி மாதத்தில் நிகழக்கூடிய விழாச் செலவிற்கும், இரண்டு பிராமணர்களை உணவு உண்பிப்பதற்கும், தென் திருவேங்கடமுடைய விண்ணவர் எம்பெருமான் கோயிலுக்கு இரண்டு நுந்தாவிளக்கு எரிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கலியுகஸம்வத்ஸரம் ௪௲௫௱௭௰௧ ன் மேற் சென்ற இடபச்சனிக் கன்னி வியாழத்தில் செல்லாநின்ற கொல்லம் அறு நூற்று நாற்பத்து ஆருமாண்டு சித்திரை மாதம் பன்னிரண் டாந் தியதி உடையார் தாணுவாலயப்பெருமாள் கோயிலிற் செண்பக இராமன் மண்டபத்தில் கீழ்ப்பேரூர் ஜயஸிம்ஹநாட்டு இல்லத்தில் ஸ்ரீ வீரராம ஸ்ரீ ராமவர்மரான திருப்பாப்பூர்[மூத்த] திருவடி இருந்தருளிய இடம் அருளிச்செயல் உடையார் சுசிந்திர முடைய நயினர்

2 கோயிலில் பொதுவாள் தென்கோட்டு சிவிந்திரவாதி கேசவனுக்கு இன்னுயினறக்குப் பந்திரடி நவகத்துக்கு முன்பே காலசந்தி

( திருப்பவும் )

யாக நடக்கக் கற்பித்த செண்பகராமன் பூசைக்கு உடையார் சுசீந்திரமுடைய நயினுற்கும் நாச்சியார் உமையம்மை நாச்சியார்க்கும் நயினுர் தென்திருவேங்கட விண்ணவர் எம்பெருமானுக்கும் நமக்காரம் பேர் இரண்டுக்கும் ஆக இவ்வகைக்கு நாளொன்றுக்கு அமுதுபடி இருபத்து நானுழியும் மாத வழி நம் இரேபதிப் பிறந்த நாளுக்குத் தாரை

3 கோரும் வகைக்கு மார்கழி மாதத்தில் திருநாளுக்கு நம் பிறந்தனுள் நயினுர் நாலாந் திருநாட் செலவுக்கும் பிராமணர் ஊட்டுக்கும் ஆக இவ்வகைப்படி நடந்து போதும் வகைக்கு விட்டுத் தந்த சிவிந்திரம் வேட்கைக் குளத்தின் கீழ் முதற்தரத்தில் நிலம் இருபது மாவும் இவ்வகையில் அமுதுபடி இருபது னுழி வகைக்குப் பல வெஞ்சனமாக நாள் ஒன்றுக்கு நெய்யமுது உழக்கு ஆழாக்கும் தேங்காய் ஒன்றும் கதலிப்பழம் பத்தும் கறியமுதுக்கு வாழை

4 க்காய் பதினுறும் மிளகு அமுது செவிடு இரண்டு அரையும் இலையமுது பதினுறும் அடைக்காய் அமுது எட்டும் சாத்துப்படி வகைக்குச் சந்தனம் பலம் காலும் குங்குமம் இடை அரைக்காலும் பச்சைக்கற்பூரம் இரண்டு மஞ்சாடியும் பனிநீற்காப்பு உட்பட்ட வகைக்கும் ஆக இவ்வகைக்குப் பல விலைப்படி நாள் ஒன்றுக்குப் பணம் ஒன்று ஆக ஆண்டு ஒன்றுக்கு அதிகமுட்பட நாள் முந்நாற்று அறுபத்து அஞ்சுக்குப் பணம் முன்னூற்று

5 அறுபத்து அஞ்சும் அறுநாற்று நாற்பத்து நாலாமாண்டு ஆவணி மாதம் முதற்தேதி முதலுக்கு நடந்து போதும் வகைக்கும் அறுநாற்று நாற்பத்து ஆருமாண்டு சித்திரை மாதம் பன்னிரண்டாந் தியதி முதலுக்கு நடந்துபோதும்படி கற்பித்த உடையார் சுசீந்திரமுடைய நயினுற்குத் திருநுந்தா விளக்கு ஒன்றும் நயினுர் தென்திருவேங்கட விண்ணவர் எம்பெருமானுக்குத் திருநந்தா விளக்கு ஒன்றும் ஆகத் திருநந்தாவிளக்கு இரண்டும் நடந்து போதும் வ

6 கைக்குப் பண நானூறும் நிலம் கலமும் ஆக இவ்வகைக்கும் நாளொன்றுக்குப் பணம் ஒன்ருகப் பல வெஞ்சனமும் நடந்து போதும் வகைக்கும் விட்டுத் தந்த தென்னுட்டுக் குறுநாட்டுக் கடிகை பட்டினத்துப் பெரிய குளத்தின்கீழ் ஊடு பள்ளிப்பற்றுடன் கூட்டி நடந்து போதுகிற வகையில் தென்கரைத் தேவதானம் தடி ஒன்று நிலம் கலமும் கோதைப் பள்ளம் தடி ஒன்று நிலம் கலமும் தேவர் குண்டறைத் தடி ஒன்று நிலம் ஏழு குறு

7 ணி நானுழியும் தெங்கடித் தேவதானம் தடி ஒன்று நிலம் கலமும் குசவன் குண்டறை தடி ஒன்று நிலம் கலமும் பூவாகுடிப்பற்றில் இத்திக்கால் வட்டம் தடி ஒன்று நிலம் தூணிப்பதக்கு இரு நாழியும் விளாத்திக்கால் வட்டம் தடி ஒன்று நிலம் ஏழுகுறுணி நானுழியும் மேற்படி தடி ஒன்று நிலம் அயுங்குறுணியில் கிழக்

கடைய நிலம் பதக்கு அறுநாழியும் திருநந்தா விளக்குக்கு விட்ட ஆலறைத் தடி ஒன்று நிலம் கலமும் குளச்சைக் கீழ்கரை

8 ப் பற்றில் ழுருக்கறை விக்கிரமன் சடையன் வகையாய் நாம் கைய்யாண்ட பிலாந்தோட்டத்தில் மூன்றில் ஒன்றும் உத்தம பெருந்தெருவில் நாலில் ஒன்றும் வருக்கைமா நின்ற புரை யிடத்தில் பாதியும் சக்கி குடியிருப்புப் புரையிடமும் ஊராளி குடியிருப்பில் மேற்கூறும் ஆக இவ்வகைப்படி உள்ள நிலம் ஏழு கலமும்(ம்) புரையிடங்ஙளும் திருநந்தா விளக்குக்குக் கைய்யில் தந்த பணம் நானூறும் கைய்யாண்டு கொண்டு

9 நாளொன்றுக்கு நெய்யமுது உழக்கு ஆழாக்கும் தேங்காய் ஒன்றும் பழம் பத்தும் வாழைக்காய் பதினறும் மிளகமுது செவிடு இரண்டு அரையும் இலையமுது பதினறும் அடைக்காயமுது எட்டும் சாத்துப்படிக்குச் சந்தனம் பலம் காலும் குங்குமம் இடை அரைக்காலும் பச்சை கற்பூரம் இடை இரண்டு மஞ்சா டியும் பனிநீர்காப்பு உட்பட்ட வகைக்கும் நாளொன்றுக்குப் பணம் ஒன்[றுக நட]த்திக்கொண்டு போதும்படியும் திருநந்தா விளக்கு இரண்டும் நடத்தி

10 க் கொண்டு போதும்படியும் நாளது கைய்யில் தந்த பணம் நானூறும் ஆக இவ்வகைப்படி நிலம் ஏழு கலமும் புரையிடங் ஙளும் பணம் நானூறும் கைய்யாண்டு கொண்டு பலவெஞ்சன வகைக்கும் நாள் ஒன்றுக்குப் பணம் ஒன்று ஆகவும் திருநந்தா விளக்கு இரண்டும் நடத்திக்கொண்டும் நடத்திக் கொண்டு போதும்ப்டி கொல்லம் அறுநூற்று நாற்பத்து ஆறுமாண்டு சித்திரை மாதம் பன்னிரண்டாந்தியதி சுசிந்திரத்துப் பொது வாள் தென்கோட்டுச் சி

11 த சிவிந்திரவாதி கேசவன் வீட்டில் நாம் வீடாயிருக்க விட்டுத்தந் நேம் இன்னுள் முதல் இந்நிலம் ஏழு கலமும் புரையிடங்களும் பணம் நானூறும் சந்திராதித்தவற் செல்லுவதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கையாண்டு கொண்டு செண்பகராமன் கால சந்தி பூசைக்கு பல வெஞ்சநத்துக்கு நாள் ஒன்றுக்குப் பணம் ஒன்று ஆகவும்(ந்) திருநந்தாவிளக்கு இரண்டும் நடத் திக் கொண்டு போதும்படியும் இப்படிக்கு இது தரவாகவும் இப்படிக்கு இவை கணக்கு இராமன் சேந்தன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | --- |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 724<br>கி. பி. 1548 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 682/1092 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 24 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபத்தின் கிழக்குச் சுவர் (வெளிப்பக்கம்).

குறிப்புரை : சுசீந்திரத்து நாயனர் கோயில் சீகாரியம் செய்பவர்களும், சபையில் கணக்கு எழுதுகின்றவர்களும் கூடி, நாஞ்சி நாட்டு, புதுக்கிராமத்து ஈச்சுரன் நம்பி சாமந்தனனுக்கு ஊர்க் கணக்குப் பிரமாணம் எழுதிக் கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் ௭௱௨௰௪ ௵ மாசி மீ ௰௪ ௨ பூறுவ பக்கி
ஷத்து துவாதெசியு[ம்] சனியாட்சையும் பெற்ற பூ

2 சத்து நாள் செய்த ஆதிசண்டேச்சுரப் பிரமாணமாவிது உடை
யார் சுசீந்திரமுடைய நயினர் கோயிலில் சீகாரியஞ் செ

3 வ்வாரும்[1] தவையிலே[2] வரும் கணக்கு எழுதின்றவரும் கூடி சன்ன
தியில் இருந்து நாஞ்சி நாட்டு புதுக்கிராமத்து ஈச்சுர

4 ன் நம்பி சாமந்தனனுக்கு ஆதிசண்டேச்சுரப் பிரமாணம் எழுதிக்
குடுத்த பரிசாவது நயினர் தேசம் அனுமகேதன நல்லூ

5 ர் உள்ளிட்ட பற்றுக்கு ஊற் கணக்கும் எழுதிக்கொண்டு கணக்கு
இலக்கை பேர்வழிப்படி மாத்தால் கோட்டை

6 மாகாணியாகப் பற்றிக்கொண்டு குறிக்கு எழுத்துமிடுவிதுஞ்
செய்து இம்மாறகமே ஆச்சந்திரதாரவற் சந்ததிப் பிறவேச

7 மே கல்லிலும் செம்பிலும் வெட்டி ஊற்கணக்கும் எழுதிக்
கணெ[க்]கு இலக்கையும் பூத்தோறும் பற்றிக் கொ

8 ள்ளுவானுகவும் மேற்படி பற்றில் ஈச்சுரன் காலகுட்டி பள்ளியில்
நிலத்துக்கு வெட்டி வேகரியும் இஞ்சது பதிஞ்சதும்

1. செய்வாரும்.
2. சபையிலே.

( திருப்பவும் )

9 தவிர்த்துக் குடுத்து ஆதிசண்டேசுரப்பிரமாணம் எழுதிக் குடுத்தோம் ஸ்ரீகாரிய செய்வாரும் தவையிலே[1] வரும்

10 கணக்கு எழுதின்ற வருமோம் ஈச்சுரன் நம்பி சாமந்தனுக்கு இப்படிக்கு ஸ்ரீகாரியம் வெள்ளிக்காட்டு நாராயணன் சங்கரன் எழுத்து

11 இப்படிக்கு புத்தில்லத்து சங்கரன் சங்கரன் எழுத்து மடத்து சாத்தன் தாணுவன் எழுத்து சோம்மாசிமங்கலத்து சந்திரன் அக்கி

12 ன் எழுத்து புதுமாடத்து கண்ணன் சிவிந்திரவாதி எழுத்து அறிசில் அரங்கன் சிவிந்திரவாதி எழுத்து கூத்தன் பள்ளி ஆதிச்சன் குத்த

13 ன் எழுத்து வேலியறை ஆதிச்சன் சிவிந்திரவாதி எழுத்து ஸ்ரீவல மங்கலத்து சிவிந்திரவாதி சங்கரன் எழுத்து முல்லமங்ஙலத்து

14 சிவிந்திரவாதி தாமோதரன் எழுத்து ஸ்ரீகாரியக் கணக்கு அய்யப்பன் மாத்தாண்டன் எழுத்து ஸ்ரீபண்டாரக் கணக்கு

15 திக்கெல்லாம் புகழும் பெருமாள் எழுத்து தவைக்கணக்கு[2] ஈச்சுரன் காலகுட்டி எழுத்து

---

1. சபையிலே.
2. சபை கணக்கு.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 722<br>கி. பி. 1546 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொ. அ. 12/1112 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 25 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில்—செண்பகராமன் மண்டபத்தின் கிழக்குச் சுவர் (வெளிப்பக்கம்).

குறிப்புரை : சுசீந்திரமுடைய நயினர் கோயிலில் செண்பகராமன் சந்தி பூசை நடத்துவதற்கும் திருவமுது அளிப்பதற்கும் நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸூவஸ்தி ஸ்ரீ கொல்லம் ௭௱௨௰௨ ஷ ஆடி மாதம் பதினலாந்தேதி அமரபக்கிளத்து ஏகாதெசியும் புதனட்சை

2 யும் உரோகிணியும் இனுழால் உடையார் சுசீந்திரமுடைய நயினர் கோயிலில் சீகாரியம் செய்யீன்றவ

3 ரும் தவையிலே[1] வரும் கணக்கு எழுதின்றவரும் கூடி நயினர் சன்னதியில் இருந்து ஆதிசண்டேச்சுரப் பிற

4 மாணம் எழுதிக் குடுத்த பரியாவது[2] முறத்தானட்டு குமரியில் நாச்சியர் குமரிப்பகவதி நாச்சியார் கோயிலில்

5 கைகோளரில் நயினன் மாத்தாண்டனுக்கு சண்டேச்சுரப் பிற மாணம் எழுதிக் குடுத்த பரியாவது[2] உடையார் சுசீந்திர

6 முடைய நயினற்கு மணக்குடி தாமரைக்குளம் உள்ளிட்ட பற்று தேசமும் விட்டு தந்து செண்பகராமன்

7 சந்தி உழாபூசை[3] நடக்கும்படி கற்ப்பி . . . . க்கு அமுதுபடி பதக்கும் நாம் உண்ணு கலத்தில் லொதுக்கு

1. சபையிலே.
2. பரிசாவது.
3. விழா பூசை.

( திருப்பவும் )

8 ம் சோற்றில் நாள் ஒன்றுக்கு சோறுந . . . . . . . போதும் வகைக்கு இரண்டு அஞ்சு உள்ப்பட சேரில் வா

9 சலில் படியும் விட்டு அமுதுப்படி பலகையிலி[ருப]து படி நானுழி யும் அழந்து வைப்பிச்சு சோறு நானுழியும் கொ

10 ண்டு போதும்படி கற் . . . . . . வச் சந்ததிப் பிறவேசமே கல்லி லும் செம்பிலு

11 ம் வெட்டி சோறு நானுழி . . . . . . . . டி கற்ப்பித்தோம் சீகா ரியம் செய்யின்றவரும் தவை

12 யிலே[1] வரும் கணக்கு எழுதி . . . . . . . . மாத்தாண்டனுக்கு இப்படிக்கு சீகாரியம் இடையர் வ[ர்]

13 ணத்து நாராயணன் நாராயண . . . . . . மரைச்சேரித் தேவன் கண்டன் . . . . ல . . சங்க

14 ரன் சங்கரன் எழுத்து மடத்தி . . . . து சோமாசிமங்கலத்து சந்திரன் அக்கி எழுத்து புதுமா

15 டத்து பரமேச்சுரன் கண்ண . . . . ர் எழுத் . . . . ச்சன் கூத்த

16 ன் எழுத்து வேலியறை ஆதி . . . . . .

17 ங்கலத்து சிவிந்திரவாதி . . . . . .

---

1. சபையிலே.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 757<br>கி. பி. 1581 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 26 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் செண்பகராமன் மண்டப கிழக்குச் சுவர்.

குறிப்புரை : திருவாட்டாறு தேசத்து யச்சம்மைக்குட்டி அம்மை சுசீந்திரத்து தம்பிரானுர்க்கு பொன் குடமும் தாழியும் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ௨த் கொல்லம் எா௱௫௰எ ஹூ அ
2 ற்பசி மீ ௨௰௮ ௳ சனியாட்சையும் அனு
3 ழமும் பூறுவபக்கிழத்து துதிகையும்
4 இன்னுளால் உடையார் சுசீந்தரமுடை
5 டய நாயினுற்கு திருவாட்டாறு தேசத்து கிழக்
6 குக் கோபுரத்திங் ஙீல் வீட்டில் ய
7 ச்சம்மைக் குட்டி அம்மை கணக்கர்
8 க[ளையும்] கோயிலில் சிபண்டார காரி
9 யஞ் செய்வார்களையுங் [கடவ] .
10 தம்பிரானுர் சுசிந்திரத்தில் பொன்னி
11 னுல் தாழியங் குடமும் வைச்சிது ஸ்ஹழ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 27 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கொன்றையடி சன்னதியின் வலது பக்கத் தூண்.

குறிப்புரை : கொன்றைத் திருக்கோயில் பண்டாரப் பிள்ளை காமன் விக்கிரமன் குடுத்த பணத்தைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொன்றைத் தி
2 ருக்கோவில்
3 பண்டாரப் பிள்
4 ளை காமன் விக்கி
5 ரமன் குடுத்த . .
6 கணக்கு சுந்தரம்
7 . . ல்லகி . .
8 விக்கி . .
9 சதாசேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 28 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கொன்றையடி சன்னதியின் தெற்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : பண்டாரப் பிள்ளை காமன் விக்கிரமன் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 பண்டாரப் பிள்ளை
2 காமன் விக்கிரமன்
3 யா . லக் கணக்கு
4 ஆண்டார் . . . . அ
5 க்குபடி செயித்த தி
6 ருப்பணி சதாசே
7 வை தாணுத்தூண்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 720<br>கி. பி. 1544 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | திருவிதாங்கூர் மன்னர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV, பக்கம் 105 (85/1096) |
| மன்னன் : | பூதலவீர ஸ்ரீ வீரகேரளவன்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 29 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபத்தின் வடக்குப் பக்க மாடம் (கிழக்குப் பக்கம்).

குறிப்புரை நாஞ்சி நாட்டு சுசீந்திரத்து சுசீந்திரமுடைய நயினர் கோயிலில் கணக்கெழுதி வந்த பழைய கணக்கரையும் மற்றும் சிலரையும் நீக்கிவிட்டுப் புதிதாகக் கருங்குடி நாட்டு விசையன்குடியைச் சேர்ந்த உடையான் குட்டி திக்கெலாம் புகழும் பெருமாள் என்பவரை ஸ்ரீ பண்டாரக் கணக்காக நியமித்து, வழக்கப்படி உடைமை, சோறு, மற்றுமுள்ள சுவந்திரங்களையும் அவருக்கு வழங்கியதைக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் எ௱உ௰ ௵ காத்திகை
2 [மீ] உ௰ள உ பூறுவ பக்ஷத்து ஏகாதெசியும் மங்
3 கல வாரமும் பெற்ற அஸ்வதியின் நாள் செய
4 துங்க நாட்டு வென்று மண்கொண்ட பூத
5 லவீர சிறீ[1] வீரகேரளவன்மாராய ஞும் கரு
6 ங்குடி நாட்டு விசையன்குடியில் உடையா
7 ன்குட்டி திக்கெலாம் புகழும் பெருமாளுக்கு ந
8 ாஞ்சிநாட்டு சூழ்சீந்திரத்து உடையார் சூழ்சீந்திர
9 முடைய நயினர் கோயிலில் சீபண்டாரக் க
10 ணக்குப் பண்டுடையாரையும் பழம் பேரை
11 யும் தவிர்த்து நாளது முதலுக்கு மேற்படி கோயில்
12 சீபண்டாரக் கணக்கு எழுதிக்கொண்டு பழை
13 யபடி உடைமையும் சோறும் இதில் உள்ள அ

1. ஸ்ரீ என்று படிக்கவும்.

( திருப்பவும் )

14 டுக்குமதும் சுவாந்திரியங்களும் பற்றிக் கொ
15 ண்டு இத்தரவு பிடிபாடாக ஆசந்திரதாரவற்
16 சந்ததிப் பிறவேசமே கல்லிலும் செம்பிலும்
17 வெட்டி கையாண்டு கொள்ளும்[படி ப]
18 ாற்க இற்படிக்கு கணைக்கு திருவேங்கடத்தப்ப
19 ன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 404<br>கி. பி 1228 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொ. அ. 2 / 1105 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 30 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபத்தின் மேற்குப் பக்கச் சுவர் (உட்பக்கம்).

குறிப்புரை : கோயிற் சொத்துக்கள் அனைத்தையும் கோயிற் சபையே அனுபவிக்க வேண்டும் என்றும், கோயில் நிலங்களை யாரேனும் ஒருவர் பிறரொருவரிடத்தில் அடகு வைத்தாலோ அல்லது விற்றாலோ பந்நிரு கழஞ்சே யஞ்சு காணம் தண்டம் செலுத்த வேண்டும் என்றும் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்ல[ம்] சாக மாண்டின் எதிராமாண்டு கன்னி
நாயிறு முதல் நங் கீழ்கரை ப்ரஹ்மஸோமமும்[1]

2 க்ருஹமடைஞ்ஞு எட்டுக் கூறுயெடத்து மடமும் மாடமும் க்ருஹம்
அடைவொன்றும் வேலியறையும் நாளை

3 றயும் ஸோமாஸிமங்கலமும் க்ருஹம்[2] அடைவொன்றும் கீழ்சேரி
யும் முல்லைமங்கலமும் அறசிலும் க்ருஹமடைவொன்

4 றும் புத்தில்லமுங் கூத்தன் பள்ளியும் [வெந்நித்] தோட்டமும்
அடைவொன்றும் கரும்பனையும் மாடச்சேரியும் சூகுழியும்

5 க்ருமடைவொன்றும் பெரும்பிலாக் காடும் ஸ்ரீவல்லமங்கலமும்
வடசேரியும் க்ருஹமடைவொன்றும் புது

6 மாடத்து க்ருஹம் ரெண்டடைவாக இவ்வடைவு எட்டுக் கூறு
யெடுத்து ஸ . . . . ஞ்சும் வைத்து ஆறெென்றும் அறுநா

7 ழியும் உட்பட ஸர்வாதிக்ஷூவல் அனுபவிப்பாராகவும் இப்படி அனுப
விக்குமிடத்து இக்ராமத்தில் க்ராமாயிகாரம் உள்ளவாள்

---

1. ப்ரஹ்மஸோமமும்.
2. க்ருஹம்.

( திருப்பவும் )

8 கன்றி [மேவு]ற வொற்றியும் விலையும் கொடாப் போமாகவுங் கொடுப்பாருளராகில் அன்றுடு ஸ்வாமிக்குப் பந்திரு க

9 ழஞ்சே யஞ்சு காணம் பொன் உண்டமும் வைச்சு விற்றவன் ஸோமம் ஸபைப் பொதுவாவிதாகவும் இவ்வடை டெ

10 வட்டிலும் அடைவுகளில் இன்றுள்ள ஆள் எண்ணி ஆளோகரி அச்சும் வைச்சு ஆளோகரி பகுத்துக் கொள்வாராகவு

11 ம் இவ்வடைவு எட்டிலும் அடைவுகளில் அன்றன்று மூத்தவர்கள் மஹாஸபைக்கமைஞ்ஞு கூட்டங் கூடி க்ராம கா

12 ரியமும் தேவகாரியமுஞ் செய்வாராகவும் இவ்வெண்மரையுங் கூடாதே காரியஞ் செய்யாயோமாகவும் இம்மடமும் ம

13 ாடமும் அடையொன்றிலேத் தங்களிடை எட்டொன்றிலும் பத் தொன்று கொண்டு தங்களிடைச் சாந்ந ஜநம்

14 இவிடை கூடி யிருக்கின்றவாள்க்குப் பகுத்து கொடுப்பாராகவும் இவ்வண்ணமே கல் வெட்டுமாறு ஸபையெ

15 ட பெருமக்கள் அருளிச் செய்ய கல்வெட்டினென் பதினெட்டு நாட்டார் கல்மாணிக்கமான ஸ்ரீபற்மனை ஆசாரி எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 310<br>கி. பி. 1134 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | கேரளன் விக்கிரமசோழதேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 31 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபத்தின் மேற்குப் பக்கச் சுவர் (வெளிப்பக்கம்).

குறிப்புரை : கேரளன் விக்கிரமசோழதேவர் சுசீந்திரமுடைய நாயனுற்கு மந்திர போனகம், படைப்பதற்காக எழுபத்தொரு அச்சு வழங்கியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்ல[ம்] ௩௱௰ ஆ மாண்டு மிதுன ஞாயிறுக்கு சென்ற வியாழந் திருவாதிரை இ

2 ந்நாளால் கேரளன் விக்கிரமசோழதேவன் நாஞ்சி நாட்டு சுசீந்தி ரமான சுந்தரசோழச்சதுர்வேதி

3 மங்கலத்து உடையார் சுசீந்திரமுடைய நா[ய]னுற்கு மந்திரபோ னகமாக நாள் ௧ க்கு நானாழி யரி

4 அமுர்துபடி செல்வதாகக் கற்பிச்சி கின்னு கோதேத அச்சு[1] எழுபத்தொன்று இவ்வச்சு எழுபத்தொன்று கீட்சேரி பரமே

5 மச்சுவரன் கேசவனும் கீட்சேரி பரமேச்சுவரன் புருஷோத்தமனும் கீட்சேரிக் கேசவன் சேந்தனும் இ

6 ம் மூவர் பக்கலும் நான் உழவொற்றி கொண்ட தேவதானம் தென்பறக்கை நிலம் ஆறுமாவின் மேலும்

7 உழவொற்றியாலும் புறக்க . . த்தாலும் அச்சு எழுபத்தொன்றும் நான் கொடுத்தமையால் இவ்

8 . . . . . . . றினல் . . . ளலங் கொண்டும்

---

1. இது ஒரு வகை நாணயம்.

( திருப்பவும் )

9 . . . . ஹோனகமாக நாள் ஒன்றுக்கு நானாழியுரி அமிர்து செலு . . . . [சாறு] கேசவதேவர் திரு

10 நந்தாவனம் செய்யுமிவனுக்கு கொடுத்து திருநந்தாவனமுஞ் செய்து திருமாலையும் பன்னி

11 ரண்டு சாத்தி இப்படி சந்திராதித்தியவற் செல்வதானமக்கு ஸபை[யு]ம் பெருமக்கள் அருளிச் செய்ய கல்வெ

12 ட்டின தருவன் தேவனான [மும்மடி சுந்தரசோழன்] எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கலி ஆண்டு [45]84<br>கொல்லம் ஆண்டு 659<br>கி. பி. 1483 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | திருவிதாங்கூர் மன்னர் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 67/ 1092 |
| மன்னன் : | ஆதித்தவர்மரான செயதுங்க நாட்டு மூத்தத்திருவடி | ஊர்க் கல்வெட்டு எண் | 32 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபத்தின், தெற்குப் பக்கச் சுவர் (வெளிப் பக்கம்).

குறிப்புரை : மன்னர் ஆதித்தவர்மர், திருக்குறுங்குடியைச் சார்ந்த செண்பகராமச் சதுர்வேதி மங்கலத்து அய்யன் குட்டி வீட்டில் அமர்ந்திருந்த போது, பதினெட்டு நாட்டிலும் உள்ள நிலங்களின் மீது விதிக்கப்பட்டிருந்த நாட்டு வாடகை, திருப்பரப்பூர் மூப்பு போன்றவை உட்பட்ட இரக்ஷாபோகம் என்ற வரியைத் தவிர்த்து ஆணைப் பிறப் பித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . [நா]ற்று எண்பத்து நாலின் மேற் செல்லா நின்ற கொல்லம் ௲௱ ௫௰௯ ஷ மாசி மீ ௰௪ ௨ பூறுவ பக்ஷத்து திறயோதெசியும் சோமவாரமும் பெற்ற பூசத்து நாள் ஆதித்தவன்மரான செயதுங்க ஞட்டு மூத்த திருவடி இருந்தருளிய இடமும் இவர்

2 . . . டி இருந்தருளிய இடமும் பிற தர்தம் செய்தருளின திருமுகத்தின்படி அருளிச்செயல் பன்றி வாய்க்காலுக்கு கிழக்கு வைப்பாற்றுக்கு தெற்கு கல்லுக்கு கிழக்கு கடலுக்கு மேற்கு உள்ள பதினெட்டு நாட்டிலும் நாடு வாடகை திருப்பரப்பூர் மூப்பு திருப்பரப்பூர் இளமுறை

3 . . . உட்பட்ட இலக்க்ஷாபோக வகையும் அம்மை கோயில் இருந்தருளிய இடத்தார் மார பண்டாரத்தில் நின்றும் கேட்டுவித்துக் கொண்ட இலக்ஷாபோக வகையும் சிறைவாய்த் தொரூபத்திலும் இளமுறையிலும் உள்ள இலக்ஷாபோக வகையும் அம்மை கோயில்

4 . . . த்துக் கொண்ட லக்ஷாபோக வகையும் ஆக இவ்வகையாயுள்ள இலக்ஷாபோகங்களும் தவிற்து முன்ஞள் ௲௱ ௫௰௯ ஷ

( திருப்பவும் )

ஆவணி மீ ௰உ ௨ நாமும் நம்முடைய ஆடிகணமாரும் தந்த தரவின்படியே ஆசந்திரதாரவற் சந்ததிப் பிரவேசமே இலக்ஷா போகம் கொள்ளாத வண்ணம்

5 . . . பாடாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளும்படி அறுநூற்று அன்பத்து ஒன்பதாமாண்டு மாசி மாதம் பதினொலா ந் தியதி திருக்குறுங்குடியில் செண்பகராமச் சதுற்வேதிமங்க லத்து அய்யன்குட்டி வீட்டில் நாம் வீடாயிருக்க கற்பித்த மைக்கு இது தரவாகும் இப்படிக்கு கணக்கு

6 [தே]வச்சிலே பெருமாள் எழுத்து ௨ ஸ்வஸ்தி ஸ்ரீ அருளிச்செயல் பன்றி வாய்க்காலுக்கு கிழக்கு வைப்பாற்றுக்கு தெற்கு கல் லுக்கு கிழக்கு கடலுக்கு மேற்கு உ[ள்ள பதி]னெட்டு நாட்டுக் கும் தன்பொருணைக்கரை நாட்டாற்றங்கரை பக்கற் . ற்றங்கரை தென்கரை நாடு [அ]முதகுண வளநாடு மானவீர வளநாடு

7 . . . டி நாடு உள்ளிட்ட பற்றுக்களில் ஊர் துப்பரவு நிலத்துக்கு முன்னாள் கூாடுமள ஸூ நாம் கொண்டு போதும் கடமையில் கார் பயிர் நிலத்துக்கு மாத்தால் கோட்டை ஒன்றுகவும் ஒரு பூவுக்கு மாத்தால் கோட்டை ஒன்றுகவும் தாளடிக்கு மாத்தால் கோட்டை அரையாகவும் மேற்படி ஆண்டு பசானம்

8 . . . படியும் தன் தானுற்பத்தி தான் தன் கையாளும் படியும் பேர் நிறுவாகம் தவிற்த்து வாழ் பேர் கையாளும் படியும் வடகரை மாப்பணத்துக்கும் பணவடைப்பற்று வகையிலுக் குறைத் துத் தந்த வகையும் தெண்டம் கொள்ளாத படியும் சவைக் கணக்கு ஊற் கணக்கு கரணக் கை

9 . . . மாரும் அறுநூற்று அன்பத்தொன்பதா மாண்டு ஆவணி உ௰ ௨ தந்த தரகிவின் படியே ஆசந்திரதணவற் சந்ததி பிற வேசமே கல்லிலு(ல)ம் செம்பிலும் வெட்டிக்கொண்டு கடமையும் இறுத்துப் போதும்படி அறுநூற்று அன்பத்தொன்பதா மாண்டு மாசி

10 . . . [செண்பகராமச்] சதுறுவேதி மங்கலத்து அய்யன்குட்டி வீட் டில் நாம் வீடாயிருக்க கற்பித்தமைக்கு இப்படிக்கு இவகைக் கணக்கு ம[யி]லேறும் பெருமாள் எழுத்து இப்படிக்கு தேவச்சிலே பெருமாள் எழுத்து திருமதிள் திருமடபளி திருக்குளம் செண்பகராமன் மண்டபம் செயித இ[ப்ப]டிக்கு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 745 கி. பி. 1569 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 69/1092 |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 33 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவர் (உட்பக்கம்).

குறிப்புரை : மலைமண்டலத்துத் திருவட்டாற்றைச் சேர்ந்த தம்பி ஆதிச்சன் ஆதிச்சன் என்பவரைத் திக்கெலாம் புகழும் பெருமாளுக்குப்[1] பிறகு ஸ்ரீபண்டாரக் கணக்கராக நியமித்து அவருக்கு சோறும், உடையும், மற்றும் உள்ள சுவாந்திரியங்களும் அளித்ததைக் குறிக்கிறது

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் எ௱சமிரு ஞூ இடப
2 ஞாயறு உ௰அ உ சென்ற வியாழ வாட்ச்சை
3 யும் அவிட்டமும் அமரபக்ஷத்து சஷ்ட்டியும்
4 இன்னுளால் உடையார் சிவிந்திரமுடைய நயினர்
5 கோயிலில் சிகாரியம் [செய்]யின்றவரும் தலை[2]
6 [யி]லே வரும் கணக்கு எழுதின்றவரும் கூடி ச
7 ன்னதியில் இருந்து மலைமண்டலத்து திருவாட்டா
8 று தேசத்து தம்பி ஆதிச்சன் ஆதிச்சன்னு ஆதி
9 சண்டேச்சுர பிறமாணம் எழுதிக் கொடுத்த

---

1. இவ்வூர்க் கல்வெட்டு எண் 29 இல் திக்கெலாம் புகழும் பெருமாள் ஸ்ரீபண்டாரக் கணக்கராக நியமிக்கப் பெற்றதைக் குறிக்கிறது. ஆனால் ஊர். க. எண் 33 இன் மூலம் அவன் சரியாகக் கணக்கு எழுதாது போய் விட்டானென்றும்; பின்னர் அவன் மகன் தாணுவாலையப் பெருமாளை நியமித்து அவனும் அவ்வாறே சென்று விட்டானென்றும்; அதன் பின்னர்தான் இங்கு குறிக்கப்பெறும் தம்பி ஆதிச்சன் ஆதிச்சன் என்பான் நியமிக்கப் பெற்றான் என்றும் தெரிய வருகிறது.

2. சபை.

(திருப்பவும்)

10 பரிசாவது உடையார் சிவிந்திரமுடைய நயி
11 ஞர் கோயிலில் சீபண்டாரக் கணக்கின்னு
12 கருங்குடி ஞட்டில் விசையன்குடில் உடையா
13 ன்குட்டி திக்கெல்லாம் புகழும் பெருமாளுக்கு முன்
14 எ . . . ஞூ காத்திகை மீ உ௰எ உ கொடுத்த தரகின்
15 படியும் ஷி ஞூ மார்கழி [மீ] ௰சு உ கொடுத்த சத்தி
16 முகத்தின் படியும் [எழுதிக்][3] கொடுத்த சண்டேச்சுர பி
17 றமாணத்தின் படியும் மேற்படியான் கணக்கு எ
18 ழுதியாவிச்சு போந்த வண்ணமே அவன்றெ
19 டமகன் தாணுவாலையப் பெருமாள் பழையப
20 டியே யாவிச்சு போந்த இடத்து மேற்படியான்
21 தம்பி ஆதிச்சன் ஆதிச்சன்னு மேற்படி வகைபடி
22 [ய்]ஔளதாகும் சத்திமுகமும் சண்டேச்சுரப் பிற
23 மாணமும் ஆக ஓலை மூன்றும் எாசு௰ந ஞூ பங்கூனி மீ
24 ௰சு உ கொடுத்த ஆசந்திரதாரமே சந்ததிப் பிறவே
25 சமே யாவிச்சுக் கொள்ளுமாறும் கற்பிச்சு மேற்படி
26 யான் வாயோலை கொடுக்கையில் அதின்படியே தம்
27 பி ஆதிச்சன் ஆதிச்சன் சீபண்டார கணக்கும் எழுதி ெ
28 காண்டு உடமையும் சோறும் அடுக்குமதும் தாரை சங்
29 கால் அவிழேகங்ஙளில் அடுக்குமதும் மற்றும் ஒள்ள சு
30 வாந்திரியங்களும் பழையபடியே பற்றிக் கொண்
31 டு ஆசந்திரதாரமே சந்ததிப் பிறவேசமே கல்லிலு
32 ம் செம்பிலும் வெட்டிவிச்சு கணக்கும் எழுதி கொ
33 ண்டு உடைமையும் சோறும் போதரவும் பற்றிக் கெ
34 ாள்ளுமாறும் மேற்படியான் உழவு சிவிந்திர பற்றில்
35 தம்பி ஆதிச்சன் ஆதிச்சன் புள்ளியில் நிலத்துக்கு ெ
36 வட்டி வேகரியும் இஞ்சது பதிஞ்சது தவிர்த்து கொடு
37 த்தோம் சிகாரியம் செய்யின்றவரும் தலையிலே வ
38 ரும் கணக்கு எழுதினவரும் மேற்படி தம்பி ஆதிச்சன்
39 ஆதிச்சன் [இப்படிக்கு] சிகாரியம் கேரளச்சேரி
40 நாராயணன் மூ[த்]தவன் எழுத்து புத்தி[ல்]லத்
41 து சங்கரன் சேந்தன் எழுத்து மடத்துச்
42 சாத்தன் தாணு[வ]ன் எழுத்து

3. இச்சொல் குறி ஒன்றினுல் காட்டப் பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 716<br>கி. பி. 1540 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | திருவிதாங்கூர் மன்னர் | முன் பதிப்பு : | தி. தொல். அ. 70/1092 |
| மன்னன் : | சகலகலை மார்த்தாண்டவர்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 34 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபத்தின் தெற்குச் சுவர் (மேற்குப் பக்கம்).

குறிப்புரை : சுசீந்திரமுடைய நாயனுர் கோயில், ஸ்ரீ பண்டாரக் காரியஞ் செய்புவர்கள், சகல கலை மார்த்தாண்டவர்மராகிய சிறைவாய் மூத்தத் திருவடிகளிடம் சென்று, கோயில் தேவதான நிலங்களுக்குத் தண்ணீர்ப் பாயாது தரிசாகக் கிடந்தமையால், கோயில் பூசைகள் நடவாது சங்கடம் ஏற்பட்டது என்று கூறவே அந்நிலங்களுக்குத் தண்ணீர் பாய வேண்டும் என்று அரசர் ஆணைப் பிறப்பித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் எ௱௰சு ௵
2 ஆனி மீ கூ உ பூறுவ பக்ஷத்து திறையோதெசியும்
3 திங்களாட்ச்சையும் பெற்ற அனிஷத்து நாள்
4 உடையார் சுசீந்திரம் உடைய நயினுர்க்கு நா
5 ஞ்சி னுட்டு தேரான அழகியசோழநல்லூரில்
6 தேர்க்குளத்தின் கீழ் கன்னடியகுலைகாற
7 ன் மடைப்போக்கில் தேவதான நிலம்
8 ௱௰௨ மாவுக்கு மேற்படி பற்றில் நின்ற துரக்காறா
9 தண்ணீர் குடாமல் நிலமது தரிசு கிடந்து போ
10 கையில் பூசைக்கு சங்கடம் வருகை கொ
11 ண்டு மேற்படி கோயில் சீபண்டாரக் காரிய
12 ம் செய்வார்கள் சென்று நயினுர் சகலகலை
13 மாத்தாண்டவன்மராய சிறவாய்மூத்த திருவடி
14 இருந்தருளிய இடத்தின் பண்டாரத்திலேக்கு

( இருப்பவும் )

15 விண்ணப்பம் செய்த [இனத்தில்] நம்முடை
16 ய பற்றுக்கு ஒத்த வண்ணம் நயினர் தேவதான
17 த்துக்கு தண்ணீர் பாயவேணும் என்று திருவு
18 ளம் பற்றி அருளி அந்த மடைப் போக்கில் நயினர்
19 தேவதானம் நிலம் நூற்று இருபது மாவும் நீக்கி உள்ள
20 நிலமும் எழுதிக் கண்ட இடத்தில் பெரும் பற்றில் நி
21 லம் இரு கூறும் தேவதான நிலம் ா௨௰ மாவுக்கு ஒரு கூறு
22 ஆகவும் கற்பித்து ஆக இவ்வகைப்படி முறைக் கொ
23 ட்டி தண்ணீர் பாச்சிக் கொள்ளுமாறு திருவுளம் பற்றி
24 அருளி மேற்படி மடையில் தோரணத்திலும் மேற்படி
25 கோயிலிலும் கல்லில் வெட்டிக் குடுக்கும் படியும்
26 கற்பித்து ஆணைவாள் ஆக கோயில்ப்பேறை சங்கரன்
27 கேரளனும் நென்மேனித் துப்பன் சூரியனும் மேற்படி
28 பற்றில் ஆச்சினை கண்டன் இரவியும் கணக்கு
29 ஈச்சுரன் பாப்பனும் மேற்ப்படி திக்கெல்லாம் புகழும்
30 பெருமாளையும் கற்பித்து நடக்குமாறு கல்லிலும்
31 செம்பிலும் வெட்டி இவ்வண்ணமே மூன்று
32 நாளில் ஒரு நாள் தேவதாந நிலம் ா௨௰ மாவுக்கு நயினார்
33 ஆணைவாள் ஆக [வயிராவி]மார் சென்று தண்ணீர் பா . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 28-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1450 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பக்கம் 281 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | பராக்கிரமபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 35 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் செண்பகராமன் மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : பராக்கிரம பாண்டியன் தனது பிறந்த நட்சத்திரமான மிருக சீருஷ நட்சத்திரத் தன்று தனது பெயரால் பராக்கிரம பாண்டியன் சந்தியை இக்கோயிலில் ஏற் படுத்தி அதற்கு நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஹரி . . ஸ்வஸ்தி ஸ்ரீ சோசதிவைவன்மரான திறிபுவன சக்கிறவத்தி கள் சிறி பிறுக்கிறம பாண்டிய தேவற்கு ஆண்டு இ

2 ருபத்து எட்டாவது மேட ஞ[ா]யறு இருபதாந் தெயதியும் பூறுவ பக்கிழத்து திறிதியையும் பெற்ற நம்மு

3 டைய பிறந்த நாளான மிருகசீருஷத்து நாள் நாஞ்சி னாட்டுச் சிவிந்திரத்து உடையார் சிவீந்திரமு

4 டைய நயினாற்கு நாம் கற்பித்த பராக்கிறமன் பாண்டியன் சந்தி பூசைக்கு நாளொன்று

5 க்கு பூசைக்கு அமுதுபடி பதக்கு நானாழிக்கும் திருமாலை திருப் பருவட்டம் சாத்துப்படி திருவிளக்கு

6 எண்ணை நெய்அமுது கறிஅமுது தேங்காய்அமுது உப்புஅமுது மிளகுஅமுது உள்ப்பட்டியல் நெ[த்தியங்களுக்கும் வானவ]

7 ன் நாட்டு பஞ்சாற்றிங்கரைல் போக்கு செங்களக்குறிச்சியான சுந்தரபாண்டியன் நல்லூரில் சிவகாமசு[ந்தரிக் குளத்த கீழ் இரு பத்தெ]

8 ட்டாவது பீசான முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட நிலம் முப்பது மாவுக்கு அதிகாரி கடைக்கூட்டயிட்டு வரக்[காட்டி (ன்)ன கற்றடிப்படி எ ங்]

(திருப்பவும்)

9 கூறு ஒடு நின்றும் கூ க்கு இ கலி ஶப வும் இன் கிழக்கு[1] கலி கூப்
பிடார விளாகத்துக்கு கிழக்கு தடி ஒன்று நிலம் காணியும்
[தென் கிழக்கு தடி இரண்டு நிலம் அரை]

10 மாவும் தென் கிழக்கு தடி அஞ்சு நிலம் அரை மாவும் இதன்
கிழக்கு தடி இரண்டு நிலம் அரை மாவும் இதன் கிழக்கு தடி
ஒன்று நிலம் காணி[யும் இதன் கிழக்கு தடி அஞ்சு நிலம் ஒ]

11 ரு மாவும் இதன் கிழக்கு தடி மூன்று நிலம் ஒரு மாவும் இதன்
கிழக்கு தடி ஹலு நிலம் மாகாணியும் இதன் கிழக்கு தடி நாலு
நிலம் ஒரு மாவும் தென் கி[ழக்கு தடி இரண்டு நிலம் அரை
மா]

12 வும் தென் கிழக்கு தடி எட்டு நிலம் ஒரு மாவரையும் இதன்
கிழக்கு தடி ந[ா]லு நிலம் மாகாணியும் இதன் கிழக்கு தடி
ஒன்று நிலம் முக்கா[ணியும் இதன் கிழக்கு தடி ஒன்று நில[ம்]

13 காணி அரைக்காணியும் இதன் கிழக்கு தடி ஒன்று நிலம் அரைக்
காணியும் இ[த]ன் கிழக்கு தடி ஒன்று நிலம் காணி அரைக்
காணியும் தென் கிழ[க்கு தடி நாலும் நிலம் ஒரு மாவ]

14 [ரையும்] இதன் கிழக்கு மூன்றிலொன்றில்(ல்) பற்று நிலம் [முக்]
காணி அரைக்காணியும் தென் கிழக்கு தடி ஆறு மூன்றில் ஒன்
றில் [பற்று நிலம் முக்காணியும் இதன் கி]

15 ழக்கு தடி [மூ]ன்று மூன்றிலொன்றில் பற்று நிலம் காணியும்
எட்டாங் கண்ணாறு மேற்கு நின்றும் தடி இரண்டு மூன்றில்
ஒன்றில் பற்று நில[ம் செட்டி குளம் முதல் கண்ணாறு]

16 கிழக்கு தடி அஞ்சு நிலம் ஒரு மாவும் தென் கிழக்கு தடி
இரண்டு நிலம் முக்காணியும் [இ]தன் கிழக்கு தடி மூன்று நிலம்
காணி அரைக்காணி [நிட்கிகங லபும் இதன் கிழக்கு]

17 மேற்கு நின்றும் தடி மூன்று நிலம் மாகாணி அரைக்காணிக்கு
கிழக்கு தடி மூன்று நிலம் மாகாணியும் கலிஶயும் தென் கிழக்கு
கலி கூபஉயும் இன் . .

18 கூ கூயும் . . குரு கலிஶதாயும் இன கிரு கலி மதஉயும் தென் கிழக்கு
கலிஶவாயும் தெதன் குஉடு உவாயும் இன் கிடு ஒ . .

19 கறு ஒரு . . . ன்றும் . . . . . சஉகவ யும் இன் கிழக்கு கலி கூகவ
யும் இ . . . .[2]

---

1. இதன் கிழக்கு.
2. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 3-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | தி. தொ. வெ. தொ. IV. பக்கம், 137. |
| மன்னன் : | சோழபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 36 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் முன் உள்ள ஆனைப்பாறையின் மேற்குப் பக்கம்.

குறிப்புரை : வேளான் சோழகேரளனான கரிகாலசோழவைதும்பராயன், சுசீந்திரத்து மஹாதேவர்க்குத் திருநந்தா விளக்கொன்று எரிப்பதற்காக ஐம்பது ஆடுகள் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய பந்ம
2 ரான உடையார் ஸ்ரீ சோழபாண்
3 டிய தேவர்க்கு யாண்டு ௩ ஆ
4 வது ராஜராஜப் பாண்டி நாட்டு
5 உத்தம சோழ வளநாட்டு நாஞ்
6 சி நாட்டு ப்ரஹ்மதேய ஸ்ரீவிஷ்ணு
7 மான சுந்தரசோழச் சருப்பேதி ம
8 ங்கலத்து ஸ்ரீவிஷ்ணுமுடைய
9 பரம ஸாமிகளுக்கு தண்ட ந
10 ாயகம் சோழ மண்டலத்து வ
11 டகரைக் கஜேந்த்ரசிங்க வளநா
12 ட்டு திருவாலி நாட்டு மருதத்தூரு
13 டையான் வேளான் சோழ கே
14 ரளனான கரிகால சோழ வைது
15 ம்பராயன் இத்தேவர்க்கு சந்திரா
16 தித்தவற் ஒரு திருநொந்தா விளக்
17 கெரிவதாக வைத்த சாவாமூவாப்

( திரும்பவும் )

18 பேராடு ஐம்பது இவ்வாடு ஐ
19 ம்பதுங் கைக்கொண்டு நி
20 சத உழக்கு நெய் அட்ட க்ட
21 வணுணுன் சத்தடி சோறுடை
22 டயான் இவனுக்கு புணை
23 இத்தேவர் வெட்டிக்குடி குண
24 மெண்டி கருங்கோடன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 1063<br>கி. பி. 1887 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | திருவிதாங்கூர் | முன் பதிப்பு : | சு.கோ.பிற்.எண். 91 |
| மன்னன் : | இராமவர்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 37 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், இந்திர விநாயகர் சன்னதியின் பின் பக்கம் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : கோயில் திருப்பணி வேலை கி. பி. 1880 இல் தொடங்கி, கி.பி. 1887 இல் பெரு நீராட்டுதல் நடைபெற்றது என்பதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்ரீ
2 கோபுரம் வேலை துடங்கினது ௲௫௰௫ ௵ மாசி ௨௰௫ ௳
3 கும்பாபிஷேகம் சிறப்பித்தது ௲௬௰௨ ௵ ஆனி ௨௰௧
4 ௳ இந்த சுப சமயத்தில் கிறுபை அருள் கொண்டு
5 ராஜநிதி வகிக்கும் மாட்சிமை தங்கிய மூலந் திரு
6 நாள் ராமவற்ம மகாராஜன் ஜீ ஸி எஸ் ஐ
7 டி ராமராயர் எப் எம் யூ எப்ப
8 எஸ் எஸ் ஸி திவான் ஆற் ரெகு
9 நாதராயர் பி எ திவான் பேஷ்கார்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கலி ஆண்டு 4572<br>கொல்லம் ஆண்டு 646<br>கி. பி. 1471 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | திருவிதாங்கூர் | முன் பதிப்பு : | சுசீ.கோ.பிற்.எண். 58 |
| மன்னன் : | வீரமார்த்தாண்டவர்மரான குலசேகரப்பெருமாள் | ஊர்க் கல்வெட்டு எண் | 38 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், இந்திரவிநாயகர் சன்னதியின் பக்கம் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : வீரமார்த்தாண்டவர்மரான ஸ்ரீ குலசேகரப்பெருமாள், தாணுமாலயப்பெருமாள் கோயிலுக்கு வடக்கில் குளமும், கிணறும், குளப்புரையும் ஏற்படுத்திய திருப்பணியைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ க
2 லியுக ஸம்வத்ஸ
3 ரு௨ சகூ௱ாஎய
4 உ சென்ற இடப
5 ச் சனி கன்னி வி
6 யாழத்தில் கொ
7 ல்லம் சுா௱சாயசு ஆம்
8 இடப ஞாயறு இரு
9 பத்து ஏழு சென்ற
10 வெள்ளி ஆட்சையு
11 ம் பஞ்சமியும் பூச
12 மும் இன்னாளால் .
13 உடையார் தாணு
14 வாலயப் பெரு
15 மாள் கோயிலுக்
16 கு வடக்கின் புற

( திருப்பவும் )

17 த்து திருக்குளமு
18 ம் திருக்கிணறும்
19 குளப்புரையும் கல்
20 லும் கெட்டி திரு
21 ப்பணி செய்வித்த
22 கீழ்ப்பேருர் ஜெ
23 யஸிம்ஹ நாட்டு இ
24 ல்லத்தில் ஸ்ரீ வீரரா
25 உ வீரஊத்தாணு வ
26 ன்ம்மரான ஸ்ரீ குய
27 சேகரப் பெருமாள்
28 பணி செய்வித்தது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 413<br>கி. பி. 1237 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. VIII பக்கம் 32 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 39 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், சுப்பிரமண்ய சுவாமி சன்னதியில் உண்ணாழியின் தெற்குப் பக்க பட்டி.

குறிப்புரை : சுசீந்திரமுடைய நாயனார்க்கு ஒவ்வொரு நாளும் நிமந்தங்களுக்கு அளிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் சாயிக [மாண்டு] மேட ஞாயிறு க சென்றது முதல் உடையார் சுவீந்திரமுடைய நாயனார் ஸ்ரீ கோயிலில் க . . . . . ண்ணிய [சி]லவின்னு நியதிப்படி நாய . . .

2 டாரத்தில் திருப்படி மாற்றோடு கூட . . . த்தி . . . . . . னில் அ[ரி]சி நானாழிக்கும் வேண்டு . [ய] . வும் திருப்படி மாற்றோடு கூட சஞாசிதுவல் செல்லுமா[று] கல்பிச்ச இச்செலவின்னு வேண் . . . [ப]ண்டாரத்தில் வைச்ச [இவ்] வரிசி நானு . . .[1]

1. திருவிதாங்கூர் தொல்பொருள் வெளியீட்டுத் தொகுதியில் ஒரு வரி மட்டுமே படிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 40 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் இராஜேந்திரன் | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், விஷ்ணு சன்னதி உண்ணாழியின் மேற்குப் பக்கம்.

குறிப்புரை : தென்திருவேங்கட நிலை ஆழ்வார்க்கு ஒரு நொந்தாவிளக்கு எரிப்பதற்கு சாவா மூவாப்பேராடு கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னிவளர இருநில மடந்தையும் சீர்தனிச் செல்வியும் போர்ச்செயப் பாவையுந் தன்பெருந் தேவியராகி யின்புற நெடிதிய லூழியு மிடைதுறை நாடும் தொடர்வன வேலிப் படர்வன வாசியும் கள்ளி சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமு

2 ம் பொருகடலீ[ழத் தரசர் தம்முடியும் ஆங்க]வர் தேவிய ரோங்கெழில் முடியும் முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த சுந்தர முடியு மிந்திர னாரமும் தெண்டிரை ஈழமண்டல முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடும் குலதனமாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர் மாலையு

3 ம் சங்கதில் வேலைத்[தொல்பெருங் காவற் ப]ல்பழந் தீவும் செருவிற் சினைவி யிருபத் தொரு கால் அரசுகளை கட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத்தீவரண் கருதி இருத்திய செம்பொற் றிருத்தரு முடியும் கொண்ட கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீ ராஜேந்த்ரசோழ தேவற்க்கு யாண்டு . . ஆவது சோ

4 ழ வளநாட் . . . . . . . . மான சுந்தரசோழச் சருப்பேதிமங்கலத்து தென்றிருவேங்கட நிலை ஆழ்வார்க்கு ஒரு நொந்தா விளக்கு . . . வைச்ச . . . இன்னாட்டு . . .

(திருப்பவும்)

5 . . . . . நுந்தாவிளக்கு ஒன்று இதுக்கு வைச்ச சாவாமூவாப்
பேராடு [ஐம்பது] . . . . இவ்வூர்ப் படைத் தலைவன் . . . .
கைக்கொண்டு நிசதம் அட்டுவதாக . . . இவனுக்குப் புணை

6 . . . . . . . . பற்மக்கு யாண்டு ௬ ஆவது ராஜராஜ மண்டலத்து
நாஞ்சிநாட்டு ப்ரஹ்மதேயம் சுசீந்திரத்து தென்றிருவேங்கட நிலை
[ஆழ்வார்க்கு] . . . இ தென்னாட்டு விக்கிரம கூற்றத்து . . .
வைச்ச திரு . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 8-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 40-A. |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், விஷ்ணு சன்னதி உண்ணாழியின் மேற்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : இராஜராஜ மண்டலத்து ராஜேந்திரசோழ வளநாட்டு நாஞ்சி நாட்டுப் பிரம தேயமான .... சோழச்சருப்பேதிமங்கலத்தில் எழுந்தருளியிருக்கும் தென்திரு வேங்கட நிலை பரமசுவாமிகளுக்கு மாணிக்கஞ்செட்டி என்பவர் நந்தாவிளக் கொன்று எரிப்பதற்காக [அச்சு] இருபத்தைந்தும், பசுக்கள் இருபத்தைந்தும் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 நந்தா விளக்கு ஒன்றுக்கு வைச்ச பசு இருப[த்]தைஞ்சு ...... கணக்கு வாணு .... பல்லவரையன் வைச்ச [அச்சு] இரு [த்]பதைஞ்சும் ..

2 யாண்டு அ ஆவது ராஜராஜ மண்டலத்து ராஜேந்த்ரசோழ வள நாட்டு நாஞ்சி நாட்டு ப்ரஹ்மதேயம் ... சோழச் சருப்பேதி மங்கலத்து தென்றிருவேங்கட நிலை பரமஸ்வாமிகளுக்கு ..

3 ரு மாணிக்கஞ் செட்டி வைச்ச திருநுந்தாவிளக்கு ஒன்று இதுக்கு வைச்ச பசு இருபத்தைஞ்சு ... இவ்வூர் ... நிசதம் அட்டக் கடவேனாக நெய் உழக்கு இவனுக்கு புணை இவ்வூர் கூத்தாடு ..

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 41 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், நந்தி சன்னதிக்கு வடக்குப் பக்கத்தில் உள்ள தூணில் சிலையின் கீழ்.

குறிப்புரை : பறவைக்கரையைச் சேர்ந்த கரும்பன் என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 பறவை
2 க்கரை
3 கரும்பன்
4 சதா ே
5 [ச]ர்வை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 2 + 3-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு | — |
| அரசு : | பாண்டியன் | | |
| மன்னன் : | மாறஞ்சடையன் | ஊர்க் கல்வெட்டு எண் | 42 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் வெளிப்பக்கத்தில் உள்ள தெற்குப் பாறை.

குறிப்புரை : கல்வெட்டின் முதற்பகுதி மட்டும் உள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாறஞ் சடையர்க்கு
2 யாண்டு இரண்டு இதனெதிர் மூன்று இ
3 வ்வாண்டு மீனநாயிற்று . ண
4 ரும் தேர்ச்ச . . . . . . . . .
5 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 759<br>கி. பி. 1583 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 42-A |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், முருகன் சன்னதியின் முன் உள்ள தூண்.

குறிப்புரை : இளையநயினர் என்பவர் மேற்படி தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொ ௲௭௱௫௰௯ காத்திகை
2 ௴ ௨௨ கேரளபிரத் தமித்
3 தேவர் ஸ்ரீ கோயிலிலே
4 முறைத் . . . குமராண்
5 டாங்கு . . . டி மாலே
6 க்குட்டி . . . மிகள்
7 சிதம் . . . வசம்
8 வித்த . . . க்கிலிய
9 ன் தி . . . ருப்பணி
10 இளையநயின
11 ர் சதாசேர்வை
12 வ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 15+4 |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 12-13 ஆம் நூற்றாண்டு[1] |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. III பகுதி I, பக்கம் 71 |
| மன்னன் : | வீரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 43 |

இடம் : தாணுமாலயப் பெருமான் கோயில், கைலாசநாதர் சன்னதியின் தெற்குச் சுவர், (வெளிப்பக்கம்).

குறிப்புரை : அதிகார மேலெழுத்து சோழாந்தகப் பிரமமாராயன், வங்கனூற்தேவன் என்பான் தான் பயிரிட்டு வந்த தேவதான நிலத்தை அடகு வைத்தான் என்று சொல்ல, அதனை ஸபையார் விசாரித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 சோழன் தலை கொண்ட கோ வீரபாண்டியற்கு யாண்

2 டு பதினஞ்சாவதின் எதிர் நாலாவது இவ்வாண்டு நாஞ்சி நாட்டு

3 ஸ்ரீ௨௨தேயம் நாஞ்சி நாட்டு திருச்சிவிந்திரது உஹாஸபையோம் அ

4 திகார மேலெழுத்து சோழாந்தகப் பிரமமாராயன் வங்கனூற் தேவர் நிலம் தே

5 வதானத்தை விலைய்யொற்றியும் வைத்தாரென்று சொல்ல கேட்டேன்

6 தேவன் பட்டாங்கு சொல்லுக வென்று வினவ ஸபையோம் இருந்து விலையு ஒற்றி

7 யுங் கொண்டாரை . . .

1. இக்கல்வெட்டு கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் ஆண்ட வீரபாண்டிய மன்னனின் காலத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் அதனுடைய எழுத்தமைதியை நோக்கும்போது பிற்காலத்தில் திரும்ப பொறிக்கப்பெற்ற கல்வெட்டாகக் காணப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 12-13 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 44 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் தெற்குச் சுவர் (வெளிப் பக்கம்).

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. இராஜராஜப் பாண்டி நாட்டு சுந்தர சோழச் சதுர்வேதிமங்கலத்தைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . ராஜராஜப் பாண்டி நா . .
2 . . ன சுந்தர சோழச் சதுர்வெ . .
3 . . உலகளஞ சோழ நி . .
4 . . ன்னவத . .[1]

1. கல்வெட்டின் பிற பகுதிகள் புதிதாகக் கட்டப்பட்டுள்ள படிக்கட்டுகளினால் மறைக்கப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 420 கி. பி. 1244 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 32/1090 |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 45 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் மேற்குப் பக்கச் சுவர் (உட்பக்கம்) முதல் பட்டி.

குறிப்புரை : சுசீந்திரத்தைச் சேர்ந்த பராசிவன்தேவன் என்பவர் சுசீந்திரம் உடைய நாயனாற்குத் திருநந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்குப் புதுப்பொன் அச்சுப் பத்து அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் ௪௱௨௰ தாமாண்டு மிதுன ஞாயிறு உ௰அ செ்ன்ற நாள் உடையார் சுசீந்தும் உடைய நாயினாற்கு இக் கோயிலில் பராசிவன் தேவன் ஸுசீந்த்ரவாஸி திருநந்தா விளக் குச் செல்வதாக இக்கோயிலில் அதிகாரம் உடைய பொதுவாண்

2 மார் எப்பேர்ப்பட்டாருங் கைக்கொண்ட புதுப்பொன் அச்சுப் பத்து இவ்வச்சுப் பத்துங் கொண்டு இந்நாயனாருடைய நாழி கையில் அன்[று] இருமுறையுடையவன் திருநந்தா விளக்கு முட்டாமல் செல்வதாகவும் இப்படி செய்யுமிடத்தில் முட்டுகில் முட்

3 டிரட்டி செலுத்துவராகவும் பின்பு முட்டுகில் முட்டிரட்டியுந் தெண்டமு வைப்பராகவும் மூன்று மாஸம் முட்டுகில் இவைச் சுப் பத்தும் தேவர்கன்மிகள் சொன்[னி]டத்தில் செலுத்தித் திருநந்தா விளக்கு முட்டாமல் ஆவஞ்சாதித்தவற் செலுத்துமாறு கற்பித்த இவை

4 ச்சு பத்துங் கைக்கொண்டு கல்வெட்டி கொடுத்தோம் இக்கோயி லில்ப் பொதுவாண்மாரோம் தேவன் சுசீந்திரவாஸிக்கு இது ஸஹை[யோ]ம் பெருமக்கள் அருளிச் செய்யக் கல்வெட்டினேன் செல்வன் சிங்கப்பெருமானான உதையமாத்தாண்ட ஆசாரி எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 46 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் கிழக்குப் பக்கத்தில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . . டக் கடமையில் வாசி . .
2 . . சதவான வேளூர் ை . .
3 . . ழுத்து இப்படி அறிவே . .
4 . . தாழைக்குடிக் கீழ்ச்சே . .

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 11-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 47

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் கிழக்குப் பக்கத்தில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 . . [யோ]டும் கொ . . . . ழ . . ண . .
2 . . செம்பியன் குன்றநாந . . . . கோதை . .
3 . . ாவ[ா] மூவாப் பேராடு ஐ . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 34-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 941 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து | வட்டெழுத்து | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. I, பக்கம் 237 இந்திய கல்வெட்டுகள், தொகுதி V, பக்கம் 42 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் | பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 48 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியில் உள்ள கிழக்குப் பக்கப் பாறை.

குறிப்புரை : நாஞ்சி நாட்டுத் திருச்சுசீந்திரத்து மாதேவர்க்கு தென்னாட்டுத் தலைக்குளத்தைச் சேர்ந்த அரையனரவிந்தன் என்பான் ஒரு நொந்தாவிளக்கு அளித்து அது எரிப்பதற்கு ஒவ்வொரு நாளும் உழக்கு நெய் அளிப்பதற்காக ஐம்பது ஆடுகள் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிபன்ம
2 ற்க்கு யாண்டு முப்பத்து நாலு இ
3 வ்வாண்டு நாஞ்சி நாட்டு திருச்
4 சிவிந்திரத்து மாதேவர்க்கு தெ
5 ன்னாட்டு தலைக்குளத்து அரையன
6 ரவிந்தன் சந்திராதித்தவல
7 ம் நியதி உழக்கு நெய் முட்டா
8 மல் எரிப்பதாக வைச்ச திருநொ
9 ந்தாவிளக்கு ஒன்றினுக்கு வைச்[ச]
10 சாவா மூவா பேர் ஆடு அம்பது இவை
11 ஐம்பதும் பரடை ஸபையார்க்கு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 40-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 947 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | இந்திய கல்வெட்டுகள் தொகுதி 5, பக்கம் 43 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 49 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியில் கிழக்குப் பக்கத்தில் உள்ள பாறை.

குறிப்புரை : களக்குடி நாட்டைச் சேர்ந்த கரவந்தபுரத்து வியாபாரி, ஒரு கை அரங்கன் என்பான் சுசீந்திரத்து எம்பெருமானுக்கு நாள் ஒன்றுக்கு ஒன்றரை ஆழாக்கு நெய் அளிப்பதற்காக எழுபத்தைந்து ஆடுகளையும்; சுசீந்திரத்துத் திருவேங்கட நிலைக்கு நாள் ஒன்றுக்கு ஆழாக்கு நெய் அளிப்பதற்காக இருபத்தைந்து ஆடுகளையும் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரையும் ஈழமும் கொண்ட கோப்
2 பரகேசரி பன்மற்கு யாண்டு நாற்பது இ
3 வ்வாண்டு கும்பநாயிற்றுத் திருச்சு
4 விந்திரத்து எம்பெருமானுக்குக் களக்
5 குடி நாட்டுக் கரவந்தபுரத்து வியாபாரி ஒரு
6 கை அரங்கன் வைத்த திருநொந்தா விளக்கு ஒ
7 ன்று நிறை பலத்து முப்பது இது நிசதம்
8 உழக்கரை நெய் முட்டாமல் பகலும் இரவும்
9 சந்திராதித்தவரை எரிவதாக (விட்ட) சாவா மூ
10 வாப் பேராடு எழுபத்தஞ்சு இவன் திரு
11 வேங்கட நிலைக்கு வைச்ச திரிநொந்தா விளக்
12 கு ஒன்றினுக்கு நிசதம் ஆழாக்கு நெய் மேற்
13 படி எரிவதாக விட்ட ஆடு இருபத்தை
14 ஞ்சு வூர் ஆடு மூலப்பரடைச்சவையார்க்கு
15 அட்டிக் குடுத்தேன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 2+1 |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV பக்கம் 117 |
| மன்னன் : | மாறஞ்சடையன் | ஊர்க் கல்வெட்டு எண் | 50 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் கிழக்குப் பக்கத்தில் உள்ள பாறை.

குறிப்புரை : மலைநாட்டுக் கணையர் பள்ளியைச் சேர்ந்த இயக்கன் செல்லன் எனப்படும் தென்னவன் உத்தரமந்திரி சுசீந்திரத்து எம்பெருமானுக்கு திருநொந்தா விளக்கு ஒன்று அளித்து, அதை எரிப்பதற்கு, நூறு ஆடுகள் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாறஞ்சடையற்கு யாண்டு இரண்டு இ
2 தனெதிராண்டு துடங்கின கற்கடக ஞாயிற்று திருச்சி
3 விந்திரத்து எம்பெருமானுக்கு நிசதி உரிய் நெய் [மு]
4 ட்டாமல் எரிவதாக மலைநாட்டுக் கணையர்பள்ளி [இ]
5 யக்கன் செல்லனுயின தென்னவன் உத்தரமந்திரி
6 வைத்த திரிநொந்தா விளக்கு ஒன்று இதுக்கு வைச்ச
7 சாவா மூவாப் பேராடு நூறு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 2 + 14 |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV பக்கம் 121 |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 51 |
| மன்னன் : | சடையன்மாறன் | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் கிழக்கே உள்ள பாறை.

குறிப்புரை : சுசீந்திரத்து மாதேவர்க்கு ஒரு திருநந்தாவிளக்கு எரிப்பதற்கு, குன்றன் சூலபாணி என்பவன் ஊர்ச்சபையாரிடம் ஐம்பது ஆடுகளை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய மாறர்க்கு யாண்டு இர[ண்டு]
2 இதனெதிர் பதினாலு இவ்வாண்டு திருச்சுசீந்தி
3 ரத்து மாதேவர்க்கு திருநந்தா விளக்கு எரிவதா[க] ஸ்ரீதெ
4 ன்குணவாய் குன்றஞ் சூலபாணி வைத்த விளக்கு ஒன்
5 று இதுக்கு நிசதி உழக்கு நெய் முட்டாமல்[ல]
6 ட்டுவதாக வைத்த சாவா மூவாப் பேராடைம்பது இ
7 வைய்ம்பதும் பரடை ஸபையார்க்குக் க[ல்]வெட்
8 டிக் குடுத்தான் குன்றஞ் சூலபாணி பரடைஸபை
9 க்கு . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 9-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV, பக்கம் 134—135 |
| மன்னன் : | சுந்தரசோழ பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 52 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் கிழக்கே உள்ள பாறை.

குறிப்புரை : கோட்டாறுன மும்முடிசோழ நல்லூரிலிருக்கும், சங்கரப்பாடியான் கழநி வெண்ணியான மதுராந்தகப் பே[ர]ரையன் என்பவர் சுசீந்திரத்துத் தென்திருவேங்கடத்தாழ்வார்க்கு ஒன்றரை நந்தாவிளக்கு எரிப்பதற்காக ஒவ்வொரு நாளும் ஒன்றரை உழக்கு நெய் வழங்குவதற்கு முப்பது பசுக்கள் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடையபன்மரா
2 [ன] ஸ்ரீ சுஙரசோழ பாண்டிய தே
3 வற்க்கு யாண்டு ஒன்பதாவது இ
4 ராஜராஜப் பாண்டி நாட்டு[த்த]
5 [மசோழ] வளநாட்டு நாஞ்சி
6 நாட்டு ஸ்ரீஹேயம் சுசீ
7 ந்திரமாந சுஙரசோழச் சருப்பே
8 தி மங்கலத்து தென் றிருவே[1]ங்க
9 டத்தாழ்வார்க்குக் கோட்டாருந
10 மும்முடி சோழநல்லூரிருக்கும்
11 சங்கரப்பாடியான் கழநி வெண்ணி

( திருப்பவும் )

1. இவ்வெழுத்து வரிக்கு மேல் எழுதப்பெற்றுள்ளது.

12 யாந மதுராந்தகப் பேரையன் வைச்ச திரு

13 நந்தா விளக் கொன்றரைக்கும் இவை சாவா மூ

14 வா பசு முப்பத்தெட்டும் கொண்டு சந்திரா

15 தித்தவல் நிசஞ முழக்கரை நெய்யட்ட

16 க்கடவேன் இவ்வூர்ப் படைத் தலை

17 வன் காவாணை கருவூராந் திருவேங்க

18 ட எட்டியென்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 24-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV பக்கம் 138—39 |
| மன்னன் : | சோழபாண்டிய தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 53 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் வெளிப்புற ஆனைப் பாறை.

குறிப்புரை : இராஜராஜப் பாண்டி நாட்டு, உத்தமசோழ வளநாட்டைச் சேர்ந்த நாஞ்சி நாட்டு பிரமதேயம் சுந்தரசோழச் சருப்பேதிமங்கலத்து சபையார், சுசீந்திர முடைய மகாதேவர்க்குத் திருநொந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காக நிலம் விற்றுக் கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடையபந்மரான உடையார் ஸ்ரீ சோழபாண்டிய தே
2 தவர்க்கு யாண்டு உ௰சு ஆவது ராஜராஜ பாண்டி நாட்டு
3 உத்தமசோழ வளநாட்டு நாஞ்சி நாட்டு ப்ரஹ்மதேயம் சுந்தரசோ
4 ழச் சருப்பேதி மங்கலத்து ஸபையோம் இவாண்டு மிது
5 ந நாயிற்று உ௰க ஆந்தியெ[தி] நாள் குறிசாற்றி மணியம்பலத்
6 து [கூட்டம்] குறைவரக் கூடியிருந்து இவ்வூர் ஸுசீந்த்ரமுடைய பர
7 மஸ்வாமிகளுக்கு நில நிவந்தத்தால் திருநொந்தா விளக்கு சந்த்ராதித்தவல்
8 எரிவதாக ஆதிசண்டேஸ்வரர்க்கு விற்று குடுத்த நிலம் இவ்வூர்
9 கீழ்கரை புத்தனே[ரி] கீழ் அமரபுயங்க வா[ய்]க்காலுக்கு கிழக்கு கரை[யோ]
10 டுடைந் [முற்]செய் குறை நீக்கி இரண்டாஞ் செ[ய்]குறை நிலம் முக்காணியு

( திருப்பவும் )

11 ம் ௩ ஆஞ்செய் நிலம் ஒரு மா ச ஞ் செய் நிலம் ஒரு மா ஆக நிலம் இரண்டு மா முக்

12 காணி மு[ண்]ணில மொழிவின்றியே விலைக்கற விற்று குடுத்த இ

13 நிலத்துக்கு சோழமண்டலத்து வடகரை ராஜேஞ்ரசிங்க

14 வளநாட்டு குறுக்கை நா[ட்டு] . . வெ . . ரன மதுராந்தக சரு

15 ப்பேதி மங்கலத்து வேளார் [தெ]ன்னவன் தேவர் [க]ண்டநாந அஹி

16 மானசோழ விழுப்பரையன் இ[ந்]நி[ல]த்துக்கு வேண்டும் விலைப்பொ

17 ருளும் இறைப் பொருளும் தர ை[கயிலே] அறகொண்டு இநிலம் விலை

18 க்கற விற்று குடுத்தோம் ஸபையோ[ம்] ஆசிசாஸவஜ்ஞேஸ்வர[ரை]க்ஷ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 54 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், அனுப்பு மண்டபத்தின் மேற்குப் பக்கத்தில், தெற்குத் தூண் சிலையின் மீது.

குறிப்புரை : மாராயன் வல்லாள தேவன் மகள் ஆண்டிச்சி என்பாள் இத்தூணைக் கொடையாக அளித்தாள் என்பதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 மாராயன் வல்ல
2 ாள தேவன்
3 மகள் ஆண்
4 டிச்சி சத
5 ா சேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 55 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயிலின், முன்னுள்ள அனுப்பு மண்டபத்தின் மேற்குப் பக்கத் தூண் சிலையின் மீது.

குறிப்புரை : சுசீந்திரத்தைச் சேர்ந்த ஈச்சகுட்டி என்பவர் இத்தூணைக் கொடையாக அளித்தார் என்பதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 நயினார் சுசீந்திரமுடை
2 ய தாணுமாலையப் பெரு
3 மாள் கோவிலில் தெ
4 ய்வ பக்தரான சிவிந்
5 திரவாதி ஈச்சகு
6 ட்டி சதா சேவை உ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 849<br>கி. பி. 1673 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 56 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், சிற்சபை மண்டப அபிஷேகப் பீடம்.

குறிப்புரை : கணதேசிகளில் சவரிகிட்டிணன் ஈச்சுரன் என்பவர் இக்கோயிலில் விதானத்தையும் சிற்சபையையும் எடுப்பித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொல்லம் அாசயிகூ ஞூ அற்பசி மீ" ಬ ட தேசிடத்து சன்னதி யில் தள[வரி]சையும் ஷெடி தெக்குப் பிறத்து பத்தன் எழுத்து . . . ட விதானமும் சிற்[சபயும்] சென் . . செட்டி . . . கண தேசிக ளில் சவரிகிட்டிணன் ஈச்சுரன் சதாசேர்வை ட

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் ஆண்டு 805 கி. பி. 1629
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 57

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், சிற்சபை மண்டப மேற்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : வீரகேரள நல்லூர் விசுவனாதன் என்பான் விநாயகப் பெருமாளை எழுந்தருளி வைத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஆறு ஹு காத்தி
2 கை மீ ம் யிக உ
3 நாஞ்சி ஞட்டு
4 வீரகேரள
5 நல்லூரில்
6 செட்டு விச்சுவஞதன்
7 விஞயகப் பெருமாள்[1] சதாசேவை

---

1. இச்சொல் இரண்டு குறிகளால் காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 11-12 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | முதலாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 58 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் தெற்குப் பக்கத்தில் உள்ள பாறை.

குறிப்புரை : சுசீந்திரத்து எம்பெருமாஞர் கோயிலுக்கு திருநந்தாவிளக்கு எரிப்பதற்கு ஆடுகள் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்மாது விளங்க ஜெயமாது வி
2 ரும்ப நிலமகள் [நிலவ] மலர் மகள் புணர உரிமை
3 மயிற் சிறந்த மணிமுடி சூடி ஏனை மன்னவர்
4 . . திக்கனைத்துந் தன் சக்கரம் நடாத்தி வீரசிங்கா
5 ஸநத்து புவனமுழுதுடையா[ளோடும்] வீற்றிருந்தருளிய கோவி
6 ராசகேசரிபன்மரான சக்கரவர்த்தி [ஸ்ரீ] குலோத்துங்கசோழதேவ
7 ர்க்கு யாண்டு . . [தொரு]பதும் . . . . . சோழ . . . .
8 . . . . . . . . . . த்தம ஸ்ரீ . . . து[ந]வெனு . அரையன் தேவ
9 . . ச்சஷிரா . . . . மூவா . . . ஞ்சும்
10 . . . . . . . . . . . . . . . .
11 . . . . . . . . . . . . . . . .
12 . . இவ்வாடு [இருபத்தஞ்சும்] கைக்கொண்டு
13 . . க்கும் உழக்கு நெய் சஷிராதித்த . .
14 . . . . . . . . . . . . . . . .
15 . . ராம் பசுவைய் கொ[ன்ற] பலன் . . .

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : திருவிதாங்கூர்
மன்னன் : பூதல வீர ஸ்ரீரவிவன்மர்

ஆட்சி ஆண்டு :
வரலாற்று ஆண்டு : கொல்லம் ஆண்டு 712
கி. பி. 1536
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை :
முன் பதிப்பு : தி. தொல். வெ. தொ. IV, பக்கம் 102—3
ஊர்க் கல்வெட்டு எண் : 59

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் கைலாசநாதர் சன்னதியின் தெற்குப் பக்கத்தில் உள்ள பாறை.

குறிப்புரை : செயதுங்க நாட்டு வென்று மண்கொண்ட பூதலவீர ஸ்ரீ ரவிவன்மர் சுசீந்திரம் உடைய நயினுர்க்கு சிறு காலே வழிபாட்டில் உதைய மார்த்தாண்டன் சந்தி நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு திருவமுதுக்கான பன்னிருநாழிக்கும், திருமாலே இரண்டுக்கும் தேவதானமாக நிலம் விட்டுக் கொடுத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு .

1 அருளிச்செயல் கொல்லம் எாய்உ ஆ சித்திரை மீ ௰௯ ௳ பூறுவபக்கிழத்து
2 ஷட்டியும் நாயறாட்ச்சையும் பெற்ற புணத்ததுந் நாள் செயதுங் கனாட்டு வென்றுமண்
3 ங் கொண்ட பூதல வீரசிறீ இரவிவன்மயராய நாம் உடையார் சிவிந்திரம் மு
4 டைய நயினார்க்கு சிறுகாலப் பூசையில்[1] உதைய மாத்தாண்டன் சந்தியாக
5 நடக்கிற வகைக்கு நாளொன்றுக்கு அமுதுபடி பன்னிரு நாழியும் திருமாலே ஒரணே
6 க்கும் எழுநூற்று ஒரு பத்து இரண்டாம் ஆண்டு பசானம் முதலுக்கு தேவதானமாக
7 விட்டுக் குடுத்த பணக்குடி முறத்த நாட்டு இருக்கந்துறைப் பற்றில் புள்ளமங்கல

( திருப்பவும் )

1. திறுகால பூசையில் என்று படிக்கப்பட்டுள்ளது.

8 மும் வேப்பங்குளமும் ஆகக்குள மிரண்டுக்கும் பெருநான்ங் கெல்
கையாவது

9 கீழெல்கை சங்கரனேரிக் குளத்து நீர்நக்கலுக்கு மேற்க்கு தென்
னெல்கை புளி

10 யம் பாட்டுக்கு வடக்கு மேலெல்கை வில்லிசேரிக் குளத்துப் புர
வுக்கு கிழக்கு

11 வடவெல்கை கல்லத்திக்குளத்துப் புாவுக்குத் தெற்க்கு ஆக இந்
நான்ங்கெல்கைக்கு உள்

12 ப்பட்ட குளமிரண்டும் மாவும் நஞ்சை புஞ்சையும் கரையும் கரைக்
காடும் கீழ்நோக்கி

13 ன கிணறும் மேல் நோக்கின மரமும் மற்றுந் நாம் கொள்ளு
கோ முறைபாடும் எப்பே

14 ற்ப்பட்டதும் கைய்யாண்டு போதுமிடத்து கற்ப்பித்த பூசையில்
சோறு பன்னிரு நாழியும்

15 பெண்ங்களில் நாச்சியார் மகள் சீ பற்பனுதப் பெருமாளுக்கு
ஆசெந்திரதாரவெற்ச் சந்ததி

16 ப்பிறவேசமே குடுத்துப் போதும்படி எழுநூற்று ஒரு பத்து
இரண்டாம் ஆண்டு சித்திரை மாத

17 ம் பத்தொன்மயதாந்[தியதி] பூறுவபக்ஷத்து ஷட்டியும் நாயருட்
சையும் பெற்ற புணர்த்தது

18 ந் நாள் முறத்[த]ுட்டு பணக்குடியில் புதிய இடத்து நாம்
வீடாயிருக்க கற்ப்பித்தமைக்கு

19 தாங்களும் இத்தரவு [பிடி]பாடாக ஆசெந்திரதாரவற் செல்வ
தாக கல்லிலும்

20 செம்பிலும் வெட்டி கைய்யாண்டு போதும்படியும் பாற்க இப்ப
டிக்கு கணக்கு கோவிந்தன்

21 அய்யப்பன் எழுத்து இக்கோயிலில்ச் சிற்பம் அய்யன் தெண்டீய்ச்
சுரமுடை[யான்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 2 + 5-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1351 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | சுசீ. கோ. பிற். எண். 54 |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 60 |
| மன்னன் : | வீரபாண்டியன் | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் கைலாசநாதர் சன்னதியின் தெற்குப் பக்கத்தில் உள்ள பாறை.

குறிப்புரை : சுசீந்திரமுடைய நயினர்க்கு வீரபாண்டியன் சந்தி ஒன்று ஏற்படுத்தி திருவமுது வகைக்கும், திருநந்தா விளக்குக்கும் தேவதானமாக நிலம் அளித்ததைக் குறிக்கிறது. திருவொத்தசாம பூசை குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாரவன்மரான த்ரிபுவனசக்ரவத்திகள் கோனே [ரின்]

2 மேல் கொண்டான் ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்[டு]

3 உ ஆவது எதிர் ரு ஆவது மிதுந ஞாயிறு ௰உ பூறுவ பக்ஷத்து

4 ஜெஸமியும் மங்கலவாரமும் வரியான் யோகமும் பெற்ற சித்திரை

5 நாள் நாஞ்சி நாட்டு சுசீந்திரத்து உடையார் சுசீந்திரமுடைய நயி ஞர்

6 கோயிலில் ஸ்ரீபாதமூலப்பட்டுடைய பஞ்சாசாரியர் தெய்வகன்மி

7 களுக்கு . . . . . . னயிஞற்கு வீரபாண்டியன் சந்தி திருவொத் தசாம

8 பூசைக்கு நடக்கும்படி கற்பித்த வகைக்கு அமுதுபடி சாத்து

9 படி[க்கும்] . . . . . திருப்பரிவட்டம் திருநந்தாவிளக்கு உப்ப முது

10 . . . . . முது கரியமுது இலையமுது அடைக்காயமுது ஊட்டி

11 வித்து நைவெத்யங்களுக்கு கீழ்களக்கூற்றத்து பிரமதேசம் ஸ்ரீ

12 வல்லப சதுவேதிமங்கலத்து கங்கைகொண்டான் பற்றி

( திருப்பவும் )

13 ன் . . . . . . தேவதானம் நீக்கி விட்டுக் குடுத்த ஞான்று

14 லன் குளத்துக்கு எல்கையாவது கீழ் எல்கை பாழ்கறம்

15 . . கண்டியப் பேரேரியில் மேலைக் கடைக்கொம்புக்கறை

16 . . . . . . . . ற்றுக்கு மேற்கு தென் எல்கை . . . . .

17 . . . . . . . . கரம்புக்கு வடக்கு மேல் எல்லை

18 க இக்குளத்தில் நீர்நக்கலுக்குக் கிழக்கு வடவெல்கை

19 . . . க்கும் . . . லமும் . . . . . காலுக்கு தெற்கு

20 . . இன்னான் கெல்கைக் குட்பட்ட நஞ்சை புஞ்சையு

21 ம் மேல்நோக்கின மரமும் கீழ்நோக்கின கிணறும் மற்

22 று [மெப்பேர்ப்பட்ட] ஸமஸ்தவ்ராத்தியும்[1] நாங்கொள்ளுங் கொள்ளுமு . .[2]

---

1. ஸமஸ்தப்ராப்தியும் என்று இருத்தல் வேண்டும்.
2. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 61 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் இரண்டாவது திருச்சுற்றிலுள்ள சிலை செதுக்கப் பெற்றுள்ள தூண்.

குறிப்புரை : சிறப்புக்குடியாக உள்ளதில் பத்தாம் குடியைச் சேர்ந்த நாச்சியார் மகள் குஞ்சி உமை இத்தூணை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 சிறப்புக்குடி ப
2 த்தாங்குடியி
3 ல் உடைய நா
4 ச்சியார் மகள் கு
5 ஞ்சி உமை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18 ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 62 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் இரண்டாவது திருச்சுற்றிலுள்ள சிலை செதுக்கப் பெற்றுள்ள தூண்.

குறிப்புரை : திருமேனி செட்டியார் அழகுடன் ஆடும் பெருமாளுக்கு இத்தூணை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 திருமேனி செ
2 ட்டியார்
3 அழகுடனுடும்
4 பெரு[1]மாள் சத[ா]ே
5 சருவை

1. இது குறி ஒன்றினுல் காட்டப் பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 8-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1140 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV, பக்கம் 125-126 |
| மன்னன் : | ஸ்ரீ வல்லப தேவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 63 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், முதல் திருச்சுற்றின் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : பாண்டிய மன்னன் மாறவர்மன் ஸ்ரீ வல்லபன், முள்ளி நாட்டிலுள்ள இராஜராஜச் சதுர்வேதிமங்கலத்து அரண்மனையில் பள்ளியறைக் கூடம் என்னும் மண்டபத்துப் பள்ளிப் பீடம் முனையதரையன் என்னும் அரசு கட்டிலில் அமர்ந்திருந்தபொழுது நாஞ்சி நாட்டு, சுசீந்திரமான சுந்தரபாண்டியச் சதுர்வேதி மங்கலத்து சுசிந்திர முடைய மகாதேவர் கோயிலில் உள்ள கூத்தாடுந் தேவருக்கும் நம்பிராட்டியாருக்கும் நித்த நிவந்தங்கள் செய்வதற்காக புறத்தாய நாட்டைச் சேர்ந்த புள்ள மங்கலத்தில் உள்ள சில நிலங்களைக் கொடையாக அளிப்பதற்கு ஆணைப் பிறப்பித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ பூமகள் ஜயமகள் பொற்புயத்திருப்ப நாமகள் விரும்ப நா
2 ன் மறை நெறியினில் யிருநிலமுழுவதும் ஒரு குடை நிழற்றிக் கருங்கலி கடிந்து
3 செங்கோலோச்சி ஏத்தருநர் கீர்த்தியிம் சேது பரியந்தம் கோத் தொழில் நடாத்திப் பார்த்திவரிறை
4 ஞ்சி வென்றி முரசம் முன்றில் முழங்கப் பொருசிலை முறியப் புலி பிலஞ்சேரக் கனக மால்வரைக் கயல்
5 விளையாட விஜைய அபிஷேகம் முறைமையில் பண்ணி விலகிய கதிர்மணி வீரஸிம்ஹாஸநத்து வீற்றிருந்
6 தருளிய கோமாற பன்மரான த்ரிபுவனசக்கரவற்திகள் ஸ்ரீ வல்லப தேவற்கு யாண்டு எட்டாவது நாள் [ரா] ஏழிந்நால்
7 முள்ளிநாட்டு ராஜராஜச் சதுர்வேதிமங்கலத்துக் கோயிலினுள் ளாலைப் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப் பீ

( திருப்பவும் )

8 டம் முனையதரையனில் எழுந்தருளியிருந்து நாஞ்சி நாட்டு சுசீந்தி
ரமான சுந்தரபாண்டியச் சதுர்வேதிமங்

9 கலத்து ஸபையார் செய்யத் திருவாய் மொழிந்தருளினபடி [த்
தங்களூர்] சுசீந்த்ரமுடைய் மஹாதேவர் கோ

10 யிலில் கூத்தாடுந் தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருப்படி
மாற்றுள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்

11 கு இறுப்பதாக தேவதானம் இறையிலியாக நாம் முன்பு குடுத்த
புறத்தாய நாட்டுப் புள்ள மங்

12 கலத்தில் இந்நாட்டு இருக்கந்துறையில் தும்புருநாரத ஈஶ்வரமுடை
யார்க்கு நீர் நிலம் பத்துமாவும்

13 கருஞ் செயில்[1] பத்துமாவும் அய்யன் குடுத்தருளித்தாக இருக்கந்
துறையார் நமக்கு சொன்னமையில் புள்ளமங்

14 கலம் மாளிகை முதற்படி நான்கெல்லைக்கு உட்பட்ட நிலத்திலேய்
நிலங்கலந்தபடி நீர்நிலம் பத்து மாவும்

15 பத்து மாக் கருஞ் செய்யும் தும்புருநாரத ஈஶ்வரமுடையார்க்கு தேவ
தானமாக எட்டாவதிநெதிராமாண்டு முதல் நீக்கி

16 புள்ளமங்கலம் மாளிகை முதல்ப்படி நான்கெல்லைக்குட்பட்ட
நிலம் சுசீந்திரமான சுந்தரபாண்டியச் சதுர்வேதிமங்

17 கலத்து கூத்தாடுந் தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருப்படி
மாற்றுள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கு காராண்மையும் அ

18 ந்தராயமும் உட்பட்ட தேவதானம் இறையிலியாகப் பெறவேணு
மென்று மானாபரண மங்கலத்து நம்பியும் ஆ

19 ண்ட [பிள்ளைஹட்ட] ஸ்ரீராத்யாஜியாரும் நமக்கு சொன்னமை
யில் முன்பு நாங் குடுத்த கேழ்விப்படியும் உள்வரிப்படியு

20 ம் எட்டாவதி னெதிராமாண்டு முதல் காராண்மையும் அந்தராய
மும் உட்பட தேவதானம் இறையிலியாகக் கைக் கொண்

21 டு திருப்படிமாற்றுள்ளிட்ட நிவந்தங்கள் செலுத்துவிக்க வென்றும்
இப்படிக் கல்லிலும் செம்பிலும் வெட்டுவித்துக் கொ

22 ள்க வென்று திருவாய் மொழிந்தருளினர் என்று திருமந்திர ஓலை
செழுவனூருடையான் எழுத்தினாலும் ஸந்திவிக்கிர[2] . . . .

---

1. தி. தொல். வெ. தொகுப்பில் புஞ்செய் எனப் படிக்கப்பட்டுள்ளது.
2. இது தி. தொல். வெ. தொகுப்பில் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று படிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 432<br>கி. பி. 1256 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 9/1107 |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 64 |
| மன்னன் : | வீரபாண்டியர் | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், தெற்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : ஊர்ச் சபையினராலும், கோயில் சிகாரியத்தாராலும் எழுதப்பட்ட செயகட வோலை இது. வீரபாண்டியதேவரின் நம்பிராட்டியார், உலகமுழுதுடையாள் என்னும் சொக்கத்தாண்டாள் சுசீந்திரமுடைய நாயனர்க்குத் திருவமுது படைப்பதற்கும் மூன்று பிராமணர்களுக்கு உணவு அளிப்பதற்காகவும் புதுப் பொன் இருநூறு அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொல்லம் ௪௱௩௰௨ மாண்டை தனுஞாயிறு ௰௯ சென்ற வியாள வாட்சையும் வி . .

2 காஉஸியும் பெற்ற இந்நாளால் நாஞ்சி நாட்டு பராவீரூரான சுந் தரசோழச் சதுவே . .

3 டையார் பராவீரூம் உடைய நாயனர் ஸ்ரீ கோயிலில் திருச்சுற்று மண்டபத்தில் இருந்து . .

4 காரி[ய]ஞ் செய்வாரும் இருந்தெழுதின செயகடவோலைக் கரண மாவது உடையார் பராவீ . .

5 வற்கு பெருமான் ஸ்ரீ வீரபாண்டியதேவர் நம்பிராட்டியார் சொக் கத்தாண்டாளென் . .

6 நித்தில் செல்வதாக திருவமுதுக்குக் கற்பிச்ச அரி[சி] குறுணி இரு நாழிக்கும் அஞ்சிரண்டால் . .

7 ஒரு நாழியும் பூஜாகாலத்து அமுது செய்யும் ஸ்ராஹ்ணர் மூவற்க்கு வெஞ்ச . .

(திருப்பவும்)

8 நல் முக்குறுணியுங் கூட . . . க்குங் கல்பிச்ச புதுப்பொன் அச்சு உ௰ .

9 ற்றினு . இவூர் தேவரடியாள் குன்றுண்டி திருவாண்டிகைக் கொண்ட அச்சு . .

10 கைக்குச் செலுத்தும் அரி[சி] குறுணி இதில் பெரியநாயனார் திருவமுதுக்கு அரி .

11 க்கு வெஞ்சனத்துக்குத் திருவமுது செய்விச்சுச் சோறு தான் கொண்டு வருமா . .

12 . . ஸ்ரீ ப்ராஹ்மணர் போஜநத்துக்கு ஒராண்டில் இவன் செலுத்தும் மாஸம் ஒன்பது . .

13 றுத்துவாராகவும் செலுத்துமிடத்து முட்டுகில் இவன் கைக் கொண்ட அச்சு ா ரு . .

14 ன்றே கால் . வச்சி கண்ட அச்சு ௬௰௯ ங்கூட அச்சு ா௯௰ச க்குஞ் செலுத்தின நில . .

15 ள்க்கைக் குளத்தின் கீழ் அமரபுயங்க வாய்க்காலுக்கு வடக்கு . . கரைக் கீழ் முருகறை . .

16 இகிட பள்ளிபடை தடி ௧ நிலம் க . . யும் இந்திரவீர வாய்க்காலுக்கு தெற்குக் கீழ் குண் . .

17 . . ஆகத் தடி மூன்று நிலம் ௨௲ ன் மேல் அச்சு ௯௰௨ மேல்படியான அ . .

18 . . அமரபுயங்க வாய்க்காலுக்கு தெற்கு . . மடத்து கேசவநாராய[ணன்]

19 . . பனையறை தடி நிலம் . . ௨௲ ம் வேளைய்க் . . டு வடக்கு நாலாங்கண்ணாறு மேல்

20 . . பூவன் தடி க நிலம் ௳ வும் ஆக ஒற்றியோலை . . ௨௲ யன் மேலும் . .

21 . . இதின்னு கட்டிய அச்சு ௬௰எ ம் கற்பி . . . . ணேடி கூட . .

22 . . நிலம் . ௨௲ யின் மேலும் ஒள்ள ஒற்றிறை . . . . அச்சு எ ம் கூட . .

23 ச்சு ௪௰க . . . கீழ்கரை ப்ரஹ்மஸோம்மில் தென் கண்ணாற்றில் குளத்தில் பெரும் . .

24 அச்சு ௬௰ கொடுத்து விலை கொண்டுடைய கலம் மூன் . ஒன்றும் ஆக இந்நில . .

25 தொண்ணூற்று நாலும் மேல்படியில் செலவாண்டி சேகராண்டான் கைக்கொண்ட அ . .[1]

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | சமஸ்கிருதமும், தமிழும் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | கிரந்தமும், தமிழும் | ஊர்க் கல்வெட்டு எண் | 65 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : கருடாழ்வார் சன்னதி, வடக்குப் பக்கத் தூணில் சிலைக்கு மேல்.

குறிப்புரை : சுசீந்திரத்தைச் சேர்ந்த ஆசிரியர் கேசவன் கேசவன் என்பாரின் பெயர்த்தியால் இத்தூண் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஶ்ரீ
2 ஹாதிஜே
3 ய பரஹூழ
4 ஹஜேஹ
5 உஹிந்த ஃ
6 கேபபவ
7 வேதிழ
8 ஊதகஹூழ
9 ஹஜேஹ
10 உஹீந்த ஃ
11 சுசீந்தி
12 ரத்து வா
13 த்தியார்
14 கேசவ
15 ன் கேச
16 வன் பேத்
17 [தி]யால்க் கு
18 டுப்ப சத
19 ா சேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 66 |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், வாகன மண்டபத்தின் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் இடைப் பகுதியே உள்ளது. சுசீந்திரமுடைய நயினார்க்குத் திருவமுது படைப்பதற்கும், பிராமணர்களுக்கு உணவு வழங்குவதற்குமாக நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . தம் நி . . . . . .
2 . . உடையார் பப-வீ . .
3 ஸடெஹெயும் ஸ்ரீ காரி[ய]ஞ் செய்வ . .
4 ஈமுடைய நாயனாற்கு பெரும . .
5 உலகமுழுதுடையார் நித்தல் செலு . .
6 நெல் முக்குறுணி ஒரு நாழியும் . .
7 மை உட்பட நெல் முக்குறு[ணி] . .
8 இவ்வச்சு இருநாற்றிலும் இ . .
9 ருமிரு க்கும் நாள் சு க்குச் செ . .
10 அஞ்ஞாழியும் திருவேங்கட . .
11 ஆக முன்னாழியும் ப்ராஹ்மண லெ[ாஜன . . ]
12 ம் இப்படி செலுத்துவாராகச் . .
13 யருக்கும் ஒன்றொன்றே காலாக . .
14 ங்கீள்வெல்லை வேள்க்கைக் குளத் . .
15 . . . . . . . . . . . . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 654<br>கி. பி. 1478 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | சமஸ்கிருதம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | கிரந்தம் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. VIII, பகுதி I, பக்கம் 23 |
| அரசு : | திருவிதாங்கூர் | | |
| மன்னன் : | இராமவர்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 68 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், செண்பகராமன் மண்டபம் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : திருவிதாங்கூர் மன்னர் இராமவர்மர் இம்மண்டபம் அமைத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 𑌶𑍁𑌭𑍇 𑌕𑍋𑌲𑌮𑍍𑌬 𑌸𑌂𑌜𑍍𑌞𑍇 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿

2 𑌮𑌹𑌿𑌮𑌾𑌮𑍌𑌳𑌿 𑌚𑌿𑌤𑍍𑌰𑌯𑌾𑌤𑍇𑌤𑌾𑌮𑌹𑍇

3 𑌷𑍍𑌯 𑌚𑍈𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇 𑌵𑌸𑌂𑌤𑌵𑌾𑌰𑍇 𑌵𑍍𑌰

4 𑌤𑌿𑌵𑌤𑌿 𑌵𑌨𑌿𑌤𑌾𑌮𑍁𑌖𑍍𑌯𑌕𑍇 𑌰𑌾𑌜𑌵𑌜𑍍𑌰𑌾

5 𑌕𑍈𑌕𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌰𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑌲𑍍𑌯𑌂 𑌕𑌮𑌿

6 𑌤𑌭𑌾𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌶𑍍𑌰𑍀 𑌜𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌵𑍀𑌦𑍍𑌰𑍇

7 𑌵𑍍𑌚𑍀 𑌹𑌰𑌵𑌾𑌮𑍁 𑌚𑌰𑌬𑌾𑌜𑌣𑌿𑌰𑌕𑍍𑌷

8 𑌤 𑌵𑌾𑌰𑍋𑌜𑍍𑌞𑌵𑍍𑌚𑍀𑌦𑍍𑌰𑍌𑌳𑍍𑌯𑍇 ॥

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 820<br>கி. பி. 1644 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 69 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் கொடிமரத்தின் முன் உள்ள தெற்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : சுசீந்திரத்தைச் சேர்ந்த நங்நய்ய அம்மையைப் பற்றிக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 அாஉய் ௵
2 செரீர
3 சுசீந்
4 திர வா
5 தி நங்
6 ஙய்ய அ
7 ம்மை
8 கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18 ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 70 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், மயில் மண்டபத்தின் மேற்குப் பக்கத் தரை.

குறிப்புரை : [வ]டுகநாதன் அளித்த கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 [வ]டுகனுதன்
2 [ச]தா சேர்வை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 759<br>கி. பி. 1583 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 71 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், மயில் மண்டபத்தின் மேற்குப் பக்க மேல் பட்டி.

குறிப்புரை : சுசீந்திரமுடையார் கோயில் சன்னதியில், பண்டாரம் பனைமறைத்தாடி என்பார் ஊஞ்சல் மண்டபம் எடுப்பித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொல்லம் எா௱நுக ஸ்ரீ தை உ௰ரு உடையார் சுசிவிந்திர . .

2 தியில் ஊஞ்ச மண்டகம் கெட்டின பண்டாரம் பனை[ம]றைத் தாடி . .

3 மேல்ப்படி கோயிலில் முறையில் பூங்(ங)குடி பொயிசொல்லாமெ யார் ம . . .

4 செய்ததன்ன தூண் சதாசேவை நன்ருக

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 72 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், மயில் மண்டபத்தின் மேற்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : சுசீந்திரமுடைய நயினார்க்கு . . . ன இரவி என்பானின் மனைவி மார்த்தாண்ட குட்டி என்பவள் அளித்த கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . . .

2 முடைய நயினார் . . .

3 ன இரவி உடைய பெண்சாதி

4 மாத்த[ா]ண்ட குட்டி கணக்கு ஆக

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 817<br>கி. பி. 1631 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 73 |

இடம் : முன் உதித்த நங்கை அம்மன் கோயில் மண்டப நுழைவாயிலில் தெற்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : முந்நூற்று நங்கை அம்மனுக்கு ஆண்டு தோறும் ஆடித் திங்கள் பூரத்து நாளில் திருவூசல் விழா நடத்துவதற்கும் தேரில் வீதி எழுந்தருளிவிக்கவும் நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 கொல்லம் ௮௱௰௭ ௵ ஆடி ௰ ௫ உ சிவிந்திரமுடைய
2 நயினர் கோயில்த் தெய்வகன்னிகளில் சிறப்புக்குடி மூத்தகுடி இடப்பா
3 க மகள் மாதம்மைக்குட்டி கணக்காக அம்மை முன்னூற்று நங்கைக்கு
4 ஆண்டுதோறும் திருவாடிப்பூரத்து நாள்ச் சிறப்பும் திருவூசலும் பெரிய தே
5 ரு வீதிவளைய எழுந்தருளுகிற திருநாள்ச் செலவு வகைக்கு காராண்மை
6 யாக மேற்படி கோயிலில்ப் பாரிசைவரில் குப்பையாண் . . திகள் உச
7 ம் தானகரண மேல் வாரம் சோராவொற்றிக் கொண்டு விட்டுக் குடுத்த தெர்
8 க் குளத்தின் கீழ் முட்டைக்குளி மடைப் போக்குத் தாளையடிக்கவரில் க
9 முது காலில்ப் பிள்ளை வயல் கலி உசுல் ஒன்றுபாதி வக கலி க்கு ௵ க க்கு

(திருப்பவும்)

10 மேல் வாரம் உம்கா படி ௬ . . . . . .

11 ல்லின் . பாதி . . கலி க்கு ஸூ க க்கு மேல் வாரம் உமக ன்
படி ௬ ௩ம் ஆக

12 ௬ . ம் ஷெடி யான் வசம் குடுத்த ட எம்ரு க்கு உபையம் ௬
க ம் ஆக

13 எ . ஆண்டுதோறும் பற்றிக் கொண்டு அம்மை திருவூசல் ஆடும்
பத்து

14 திருவூசல் பிடிக்கும் அம்மைமாருக்கு பருவட்டம் ஒன்றும் . . ம்

15 . . பருவட்டம் ஒன்று காராண்மை கை ஏ[ற்று] நடத்தும் பேற்கு
பரு

16 வட்டம் ஒன்றும் குடுத்து ஆசந்திரதாரமேற் சந்ததிப் பிறவேசமே
நடத்திப்

17 போதுவாராகவும் இப்படி நடக்கும்மிடத்து ஒரு நாள் முட்டினுல்
கோ

18 . . . . . . . . . . . மோகத்தில் கைப்பிக்கும் வண்ணம் . திரமுப்
சொ

19 ல்லிப் போதுவாராகவும் இந்

20 தப்படி நடக்க கைப்பித்த

21 இடப்பாகம் மகள்

22 மாதம்மைக் குட்டி எழுத்து ௨

மாவட்டம் : கன்னியாகுமரி

வட்டம் : அகத்தீஸ்வரம்

ஊர் : சுசீந்திரம்

மொழி : தமிழ்

எழுத்து : வட்டெழுத்து

அரசு : சோழர்

மன்னன் : முதலாம் இராசராசன்

ஆட்சி ஆண்டு : 10-ஆம் ஆண்டு

வரலாற்று ஆண்டு : கி. பி. 995

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : இந்.கல்.தொ. V, பக்கம் 43; தி. தொல். வெ. தொ. I, பக்கம் 238

ஊர்க் கல்வெட்டு எண் : 74

இடம் : கைலாசநாதர் கோயிலின் வெளிப் பக்கம் உள்ள பாறையின் கிழக்குப் பக்கம்.

குறிப்புரை : ஈழநாட்டு மழவரையன் சென்னிகண்டன் என்பவன் சுசீந்திரத்து மகாதேவர்க்கு ஒரு திருநந்தா விளக்கு எரிப்பதற்கு நாள்தோறும் உழக்கு நெய் அளிக்க ஐம்பது ஆடுகள் மூலபரடைச் சபையார் வசம் ஒப்படைத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோஇராசஇராசகேசரி பன்
2 மர்க்கு யாண்டு பத்தாம் யாண்டு துடங்
3 கின கற்கடக ஞான்று நாஞ்சி நாட்டு
4 ப்ரஹ்மதேயம் திருச்சிவிந்திரத்து
5 மஹாதேவர்க்கு [ஈ]ழநாட்டு மழவ
6 ரையன் சென்னிகண்டன் நிசதம் உழ
7 க்கு நெய் சந்திராதித்தவல் இர
8 வும் பகலு முட்டாமல் எரிவதாக வ
9 ச்ச திருநொந்தா விளக்கு ஒன்று இதுக்கு
10 வைச்ச சாவா மூவாப் பேராடு அஞ்பது
11 இவை மூலபரடை ஸபையார் வசம் காட்டி
12 க் குடுத்தன மூலபரடைச் சபையாரும்
13 எம்பெருமான் வெட்டிர் குடி படைத்[தெ]ரு
14 மன் கணையந்துறையாக்கி வழி காட்டி
15 க் குடுத்தன

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 2+10-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகஸ்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV, பகுதி II பக்கம் 123 |
| மன்னன் : | கோச்சடையமாறன் | ஊர்க் கல்வெட்டு எண் | 75 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் இரண்டாம் திருச்சுற்று ஆனைப் பாறை.

குறிப்புரை : சுசீந்திரத்து மகாதேவர்க்கு, புறத்தாய நாட்டு இழக்கந்துறையைச் சார்ந்த அறுகைவணிகன் கண்ணிபழஞ்சி என்பவர் திருநுந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு ஐம்பது ஆடுகள் மூலபரடைச் சபையாரிடம் ஒப்படைத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடையமாறற்கு யா
2 ண்டு இரண்டு இதனெதிர் பத்து இவ்வா
3 ண்டு மகர நாயிற்று இருபதாந்தியெ
4 தி நாள் நாஞ்சி நாட்டு திருச்சிவிந்
5 திரத்து எம்பெருமானுக்கு புறத்தா
6 ய நாட் டிழக்கந்துறை அறுகை வணிய
7 ன் கண்ணி பழஞ்சி வைச்ச திருநொ[ந்]தா
8 விளக்கொன்று சந்திராதிச்சவல் நிசத முழக்கு நெ[ய்]
9 யெரிவதாக மூன்று நியாயம் பிழையாதன சா
10 வா மூவா பேராடு ஐய்ம்பது இவ்வாடு ஐய்ம்ப
11 தும் எம்பெருமான் ஸ்ரீ காரியமாராய்கின்ற
12 மூலபரடை ஸபையார்க்குக் காட்டிக் குடுத்
13 தென் [அறுகை கண்ணி ப]ழஞ்சியென்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் ஆண்டு 661+1 கி. பி. 1486 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 76 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், மரவாகன மண்டபத்தின் வடக்குப் பக்கச் சுவர் (மேற்குப் பக்கம்).

குறிப்புரை : சுசீந்திரமுடைய நாயனுர்க்கு திருநந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்காக பொன்னும், மற்றும் புதுப்பொன் பன்னிரண்டு அச்சும் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் [சூ]ாசுக மாண்டைக் கெதிராமாண்டை சிங் . . .

2 று ௰உ சென்ற ஞாயிறுந் திருவோண மிந்நாளால் ஸ்ரீ ஶுசீந்த்ரம் சுந்தர

3 சோழச் சதுர்வேதிமங்கலத்து உடையார் ஶுசீந்த்ரமுடைய நாயனுர் திருவாசல் மாடத்து

4 ஸபையும் ஸ்ரீகாரியஞ் செய்வாரும் கூடி இருந்தடத்து செய்த காரியமாவது பரமக்குடி பெரியநாட்ட

5 ான[1] பகவதி ஆழ்வாரான அமரகோனுர் ஶுசீந்த்ரமுடைய நாயனுர்க்கு நியதி ஒரு திருநந்தா விளக்கு எரிவதாகக் கு

6 டுத்த பொன்னும் [மற்றும்] புதுப் பொன் [அச்சு] ௰உ இவ்வச்சுப் பன்னிரண்டும் இந்நாயனுர் ஸ்ரீகோ

7 யிலில் . . . . . . முப்பது வட்டமும் உடைய தென் . காடமெவல் லும் தாமோதரம்

8 . . . . ல்லும் இரவி . . . . . . . லம் கொற்றெனும் இவ்வனை வோம் இவ்வச்சு ௰உ ங் கைக்

9 கொண்டு இந்நாள் முதல் நாயனுர் கோயிலில் [இடை] நாழிகை யில் நியதமெரிப்பதான திருநந்தாவிளக்கு

10 ஒன்று இம்மார்கமே விளக்கெரிக்குமிடத்து ஒரு நாள் முட்டு கில் முட்டிரட்டி எரிப்பதாகவும் இரண்டு நா

11 . . . . . . . . டு தருநாளைக்கு[2]

1. இவ்வெழுத்து வரிக்கு மேல் எழுதப் பெற்றுள்ளது. 2. இக்கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 77 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கொன்றையடி சன்னதியில் தெற்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : ஆண்டார் இராயக்குட்டி என்பவர் தூண் ஒன்று அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 பண்ட . மப
2 தாமன் வித்திரனே
3 பாசலக் கணக்கு
4 ஆண்டார் . ராய
5 க்குட்டி செவித்த தி
6 ருப்பணி சதாசே
7 வை தாணுத் தூண்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 32-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 1102 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV, பகுதி II பக்கம் 130 |
| மன்னன் : | முதலாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 79 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், இரண்டாம் திருச்சுற்றில் மேற்குப் பக்கமுள்ள ஆனைப் பாறை.

குறிப்புரை : இக்கல்வெட்டு வெண்பாவில் எழுதப்பெற்றுள்ளது. சேய்லூர்மண் பூவணவன் காரி என்பவன் சுசீந்திரமுடைய நாயனார் கோயிலில் தேவியை எழுந்தருளச் செய்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சுலவு மலற்சோலைச் சுசீந்திர
2 வாதிக்குத் தலநிகழ் மாதைச் சமைத்தான்
3 நிலவு புகள்[1] வாளபையற் கியாண்டு பதிறு
4 [றி]ரட்டி சேய்லூர் மண் பூவணவன் காரி புரிந்
5 து

---

1. நிலவு புகழ் என்று படிக்கவும்,

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 4+6-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 956 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. III, பகுதி I, பக்கம் 74 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | வீரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 80 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், இரண்டாம் திருச்சுற்றின் கிழக்குப் பக்கத்தில் உள்ள ஆனைப் பாறை.

குறிப்புரை : திருவழுதி வளநாட்டுத் திருக்கோளூரைச் சேர்ந்த சாத்தஞ்சிங்கம் என்பான் சுசீந்திரத்து எம்பெருமானுக்கு திருநந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு ஒவ்வொரு நாளும் உழக்கு நெய் அளிப்பதற்காக ஐம்பது ஆடுகளை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சோழன் தலை கொண்ட கோ வீரபாண்டி
2 யர்க்கு யா[ண்]டு நான்கு இதனெதிர் ஆறு இவ்
3 வாண்டு கன்னி நாயிறு பிறந்த ஸங்கிராந்தி மு
4 தலாகத் திருச்சிவிந்திரத்து எம்பெருமானு
5 க்கு நியதம் உழக்கு நெய் முட்டாமல் எரி
6 வதாகத் திருவழுதி வளநாட்டுத் திருக்கோளூர்ச் சா
7 த்தஞ் சிங்கம் வைத்த திரிநொந்தா விளக்கு ஒ
8 ன்று இதுக்கு விட்ட சாவா மூவாப் பேராடு
9 மூன்று நியாயமும் பிழையாதன ஐம்
10 பது இவை பருடைச் சவையார்க்கு காட்டி குடு
11 த்தன

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 15+4-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 976 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | வீரபாண்டியன் | ஊர்க் கல்வெட்டு எண் | 81 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் இரண்டாவது திருச்சுற்றிலுள்ள கிழக்குப் பக்க ஆனைப் பாறை.

குறிப்புரை : மஹிமாகர வளநாட்டுத் தேவதானப் பிரமதேயம் சோளாந்தக மங்கலத்தைச் சேர்ந்த பெருமருதூர்க் காப்பியன் சோழாந்தகப் பிரமமாராயன் என்பவர் சுசீந்திரத்து பரமேசுரர்க்கும், பரமஸ்வாமிகளுக்கும் இரண்டு திருநந்தா விளக்குகளை அளித்ததைக் குறிக்கிறது. கல்வெட்டின் ஒரு பகுதி சுவரினால் மறைக்கப் பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 சோழன் தலை கொண்ட கோ வீரபாண்டியற்கு
2 யாண்டு பதி[னை]ஞ்சு இதன் எதிர் நாலு இ
3 வ்வாண்டு நாஞ்சி நாட்டுப் பிரம்மதே[யம்] தி
4 ருச்சிவிந்திரத்து பரமேசுரர்க்கும் இவ்வூர்த் திருவேங்கட
5 நிலை பரமஸ்வாமிகளுக்கும் [ம]ஹிமாகர வளநாட்டுத் தேவதான[ப்]
6 பிரமதேயம் ஸாளக்ராமத்து சோளாந்தக மங்கலமுடைய பெரும
7 ருதூர்க் காப்பியன் சோளாந்தகப் பிரம மாராயனயின நாராயண ஸ்ரீ
8 மாயவன் வைத்த திருநொந்தா விளக்கு இரண்டு இரண்டும் இவ்வாண்
9 . . . . [ஞ]ளஞ்னூற்றுத் தொண்ணூற்று மூன்று முதலா இரவும் பகலும்
10 . . . . . . தித்தவல் திருவுண்ணழிகையி
11 . . . . . . திருவிளக்கு இர[ண்]டினுக்கு இ

(திருப்பவும்)

12 . . . . [நிச]திப்படி நாராச நாழி . . .
13 ரிய் நெய் முட்டாமலட்டுவதாக கொ
14 . . துங் கொண்டு உவச்சின வரஸ்ரீ[ஸ்ரீ]
15 . . . நித்தம் இப்பரிசு அட்டுவதா
16 . . டைச் சவையோம் இவ்விளக்[கெரி]
17 . . வ்லூர் பரடை[1] ஸஹையார்

1. இவ்வெழுத்து வரிக்குக் கீழ் எழுதப் பெற்றுள்ளது.

த. நா. தொ. ஆய்வுத்துறை　　　　　　　　தொடர் எண் : 1968 / 212

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 15 + 4-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 976 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | 82 |
| மன்னன் : | வீரபாண்டியன் | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்று ஆனைப் பாறை.

குறிப்புரை : மஹிமாகர வளநாட்டுத் தேவதானப் பிரமதேயம் சாளகிராமத்தைச் சேர்ந்த சோழாந்தகப் பிரமமாராய நாராயணம் ஸ்ரீ மாதவன் என்பவர், சுசீந்திரத்து பரமஸ்வாமிகளுக்கு நாள்தோறும் பன்னிருநாழி அரிசி திருவமிர்து படைக்க, மூலபரடைச் சபையாரிடம் நிலம் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சோழன் தலை கொண்ட கோ வீ
2 ரபாண்டிய[ர்க்கு] யாண்டு பதினஞ்சு
3 இதனெதிர் நாலு இவ்வாண்டு நாஞ்சி
4 நாட்டுப் பிரமதேயம் ஸ்ரீ சுசீந்த்ரத்துத் தி
5 ருவேங்கட நிலை நின்றருளின பரமஸ்வா
6 மிகளுக்கு மஹிமாகர வளநாட்டு தேவதான
7 ப் பிரமதேயம் ஸாளக்ராமத்துச் சோழா
8 ந்தக மங்கலமுடைய பெருமருதூர்க் காப்பி
9 யன் சோழாந்தகப் பிரமமாராயனாயின
10 நாராயணம் ஸ்ரீ மாதவன் பொதில் நானாழி
11 ச்செய்தரிசியாக நிசதம் பன்னிருநாழி
12 திருவமிர்தரிசி செல்வதாக விலை கொண்
13 ட பூமியாவது திருச்சிவிந்திரத்து
14 எம்பெருமான் ஸ்ரீ காரியமாராய்கின்ற மூ
15 லபரடைச் சபையோம் எம்பெருமான் தேவதா
16 ன மருதகுண வாய்க்காலால் நீருண்டு நெல் வி
17 ரைவது [நிரு]பசேகரவளநல்லூர் நாற்கல
18 ம்பாடு ஒரு மாவும் முக்கலம்பாடு தடி ஒ
19 . . . . . . . . . மாவு முக்கலம் பாட்டு
20 . . . . . . . . . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 2 + 14-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 83 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | சடைய[வர்மர்] | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், ஆனைப்பாறைக்குக் கிழக்கே தரை.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. சுசீந்திரத்து எம்பெருமான் தாணுமாலயப் பெருமாள் குறிக்கப்படுகிறார்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய . .
2 ரண்டு இதனெதிர் பதிறு . .
3 நாஞ்சி நாட்டு தேர்க்கரும்ப . .
4 றுதி தந்து இவன் தம் . . . . .
5 று . . . . . . . . . . அமிது . .
6 திரு பங்கு . . தொ . . .
7 த்து எம்பெருமான் . .
8 தாகச் சந்திராதித்தவ . .
9 இதனுக்[கு] வைச்ச சா
10 இவை மூலபரடைச் . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 84 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், விஷ்ணு கருவறையின் மேற்குப் பக்க பட்டி.

குறிப்புரை : சுசீந்திரமுடைய நாயனர் கோயிலுக்குத் திருவிளக்கு ஒன்று கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 திருவிளக்கு ஒன்றுக்கு வைச்சப் . . . . தலைவனர் . வாணைக்கு . . . . ரையருன . .

2 . . ராஜராஜ மண்டலத்து ராஜேந்த்ரசோழ வளநாட்டு . . ஸ்ரூ தேயம் . . சருப்பேதிமங்கலத்து . .

3 மாணிக்க . . வைச்ச திருநொந்தாவிளக்கு ஒன்று . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 722<br>கி. பி. 1546 |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 12/1112 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 85 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்றில் உள்ள ஆனைப் பாறையின் கிழக்குப் பக்கம்.

குறிப்புரை : சுசீந்திரமுடைய நயினார் கோயில் செண்பகராமன் சந்தி உமா பூசைக்கு தேவரடியாரில் ஒன்பதாங் குடியைச் சார்ந்த கேரளக்குட்டி என்பவரால் அளிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் எா௨௱௨ ஆடி மீ ம்ச ௨ சென்ற புதனாட்சையும் உரோகணியும் அபர பக்கத்து

2 ஏகாதெசியும் இன்னாளால் உடையார் சுசீந்திரமுடைய நயினார் கோயில் சீகாரியம் செய்கின்றவரும் சவையிலே

3 வரும் கணக்கு எழுதினவரும் கூடி சன்னதியில் இருந்து ஆதி சண்டேச்சுரப்பிறமாணம் எழுதிக் குடுத்த பரிசாவது

4 நாஞ்சி நாட்டு சுசீந்திரத்து உடையார் சுசீந்திரமுடைய நயினார் கோயில் தேவரடியாரில் [சி]றப்பில் ஒன்பதாங் குடி

5 யில் நம்பிளை கேரளக்குட்டி முடியிலாடும் பெருமாளுக்கு சண் டேச்சுரப் பிறமாணம் எழுதிக் குடுத்த

6 பரிசாவது மேற்படி கோயில் செண்பகராமன் சந்தி உமா பூசை கற்பித்த வகையில் நாள் ஒன்றுக்கு

7 [சோ]று பதக்கில் மேற்படியாற்கு நாம் உண்ணி னிலத்து [ஒ]துக்கும் . . . [1]

---

1. கல்வெட்டின் மற்றப் பகுதி கிடைக்கவில்லை.

மாவட்டம் : கன்னியாகுமரி

வட்டம் : அகத்தீஸ்வரம்

ஊர் : சுசீந்திரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : முதலாம் குலோத்துங்கன்

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 11-12-ஆம் நூற்றாண்டு

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 86

இடம் : தாணுமாலயப்பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்றில் ஆனைப்பாறைக்குக் கிழக்கே உள்ள பாறை.

குறிப்புரை : கல்வெட்டு இடையிடையே சிதைந்துள்ளது. ஐம்பது ஆடுகள் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ புகள்மாதுவிளங்க செ . . . .
2 கள் புணர உரிமையிற் சிறந்த ம . . .
3 தர ஏனை மன்நவர் . . . . ஏதிலுற்றிழித . . .
4 ங்காஸநத்து அவனிமுழுதுடை . . .
5 ராந சக்கரவத்தி ஸ்ரீ குலோத்துங்க . .
6 ரவத்தி ஸ்ரீ குலோத்துங்கசோழ . .
7 ஆகவும் . . [டே]மணி . . ந்நை . .
8 வ . . . ர . . . . . . . . . வற்கு . . .
9 ஊன . . . . . . . . . . சோழ . . .
10 தேசம் சுஙரசோழ . . . . . . .
11 ற்கு வைத்த . . . . . . .
12 சாவா மூவா பேராடு ஐம்பது . .
13 . உழக்[கு நெய்] முட்டாமல் அ[ட்] . . . .
14 . . . . . . . . இன் . . . . . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு | : | — |
| வட்டம் | : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு | : | சுமார் கி. பி. 17-18 ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | சுசீந்திரம் | | | |
| மொழி | : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | | — |
| எழுத்து | : | தமிழ் | முன் பதிப்பு | : | — |
| அரசு | : | — | ஊர்க் கல்வெட்டு எண் | | 87 |
| மன்னன் | : | — | | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் இரண்டாவது திருச்சுற்றில் உள்ள தூண்.

குறிப்புரை : நெல்லையைச் சேர்ந்த வாச்சான் திருநீலகண்டன் என்பார் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . ட்டு . .
2 நெல்லை ரு வாச்
3 சான் திருநீலக
4 ண்டன் சதா சேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 696<br>கி. பி. 1520 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | திருவிதாங்கூர் | | |
| மன்னன் : | உதையமார்த்தாண்டவர்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 88 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், இரண்டாம் திருச்சுற்றில் உள்ள ஆனைப் பாறைக்குக் கிழக்கு.

குறிப்புரை : நாஞ்சி நாட்டு சுசீந்திரத்து உடையார் சுசீந்திரம் உடைய நயினர்க்கு அமுது படிக்காக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 அருளிச்செயல் செ[ய]துங்க நாட்டு சங்கரநாராயணை வென்று மண் கொண்ட பூதல வீர ஸ்ரீ உதைய மாத்தாண்ட . .

2 . . நாம் விட்டுக் குடுத்த நாஞ்சி நாட்டுச் சுசீந்திரத்து உடையார் சுசீந்திரம் உடைய நயினாற்கு செலவு கற்பித்த வகையில் மேற் படி கோயில் பொரசைவால் . . இவன்

3 திருவினத்தான் இராகவனுக்கு நாள் ஒன்றுக்கு சோறு முன்னாழி யாக பற்றிப் போதும்படி சா . . வகைக்கு அமுதுபடி முன் னாழிக்கு . .

4 உள்படி மேற்படி கோயில் நின்றும் நெல்லும் ஏற்று அமுதுபடி முன்னாழியும் கோயிலில் கொண்டு சென்று அத்த[ச]ாம பூசை யில் இப்படி நெதப்பி . .

5 . . ன்ன பூசையில் . . . கையும் செய்வித்து சோறுகொண்டு போதும்படி ஆசந்திரதாரவற் சந்ததிப் பிர[வேசமே] கல்லிலும் செம்பிலும் வெட்டுவி

6 த்து சோறு முன்னாழியும் பற்றிக்கொண்டு போதும்படி கொல்லம் ௬௯௬ ஆடு சித்திரை மாதம் ௰௧ உ சுபெரவக்ஷத்து அமாவாசி யும் பெற்ற சதைய . .

7 . . வதி . . களக்கர் சோழகுலவல்லிபுரத்து வீரமாத்தாண்ட சது றுவேதிமங்கலம் என்று நம் பேரால் . .

8 ந்தக் கற்பித்தமைக்கு இத்தரகு பிடி பாடாக் கையாளும்படியாக வும் பாற்து இப்படிக்கு இராமன் இராமன் எழுத்து உ

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி 17-18-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 89

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், இரண்டாவது திருச்சுற்றின் கற்சிலைத் தூண்.

குறிப்புரை : அணஞ்சமுத்து என்பாளின் மகள் நாச்சியார் கொடை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு .

1 [சிறப்புக்]
2 குடியில் அ
3 ணஞ்சமுத்
4 து மகள் நா
5 ச்சியார் ச
6 தா சேவை

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 17-18 ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 90

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், துவஜஸ்தம்பத்திற்கு வடக்குப்பக்கத்தில் உள்ள தூண் சிலையின் கீழ்.

குறிப்புரை : தேரூர் நாகமணி மகள் நாகம்மை செய்வித்த சேவையைக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 தேரூரில் ந
2 ாகமணி ம
3 கள் நாகம்
4 மை புண்[ணி]
5 யம் இந்த [ஒ]
6 ரு பத்தியு
7 ம் சதா சே
8 சர்வை

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் 861
கி. பி. 1685
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 91

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், உண்ணாழி மண்டபத்தின் வடக்குப் பக்கத் தூண் சிலைக்கு மேல்.

குறிப்புரை : திருவாழ்மார்[ப]ன் அணஞ்ச பெருமாள் புள்ளை என்ற பெயரைக் குறிக்கிறது. கல்வெட்டின் முதல் பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 ஆாகூயிக ஹ
2 ஆனி மீ்ம் [க]ாத்[தி]
3 கையில்க்கு தி
4 ருவாழ்மார்[ப]ன்
5 அணஞ்ச பெருமா
6 ள் புள்ளை . .
7 . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | . +8-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பாண்டியர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | சடையமாறன் | ஊர்க் கல்வெட்டு எண் | 92 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் ஆனைப் பாறையின் மேற்குப் பக்கம்.

குறிப்புரை : சுசீந்திரத்து எம்பெருமானுக்கு நுந்தாவிளக்கு எரிப்பதற்காகச் சாவா முவாப் பேராடு அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . [கோ]ச்சடைய மாறர்க்கு யா
2 . . இதனெதிர் எட்டு
3 . . சிங்க நாயிற்று
4 . . ந்திரத்து எம்
5 . . உழக்கு நெ
6 . . தாக ஒடை நா
7 . . ண்டங்கு.
8 . . தா விளக்கு
9 . . வா மூவா பே
10 . . பரடை
11 . . டிக்கு[1]

---

1. கல்வெட்டின் ஒரு பகுதி கட்டடம் ஒன்றினால் மறைக்கப்பட்டும், முடிவுறாமலும் உள்ளது.

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : சமஸ்கிருதம்
எழுத்து : கிரந்தம்
அரசு : திருவிதாங்கூர்
மன்னன் : மார்த்தாண்டவர்மர்

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் 586, கி. பி. 1410
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : தி. தொல். வெ. தொ. VIII, பக்கம் 33
ஊர்க் கல்வெட்டு எண் : 93

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், ஜகந்தீஸ்வரத்து ராமேஸ்வரர் சன்னதி முன் உள்ள வடக்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : திருவிதாங்கூர் மார்த்தாண்டவர்மர் சுசீந்திரமுடைய நயினர் கோயிலில் ஈச்சுரர்க்கு சபா மண்டபம் கட்டியதைக் குறிக்கிறது. கல்வெட்டு, சமஸ்கிருத செய்யுளாக அமைந்துள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ப௩
2 ஹஉஷ்௩ கொ
3 ல்லம் ந்ரா
4 அம௱ மா
5 ண்டு ஈாமா
6 ஞோகெ பலகா
7 ஜெ ஸ௱வதி
8 ஸவி
9 வெ
10 ஸிஂஹ
11 யாதெ
12 துஞா
13 யாஉா
14 ரூஜெ
15 வதீநீஸெ

(திருப்பவும்)

16 வ்ருஷிதஷிநயு

17 தெ ஹாநுவாமெ

18 வ ஸம்ஹோ ః

19 கா௦[க்ஷநு]ஶாத்ர

20 ாஜ்ஞ[வஜ்ரா] ஸி
ஶ்ரு

21 யஜ[வி வி]வ்

22 ஶ்ரா௦[கீர்த்தி]ஶாய்

23 ஷ்டு[ஜீவர௦]ஷ்டா

24 நெ[ஶாநீ] ஸ்வீ

25 ஒ்ரு [ஸஜக்]ர்

26 த [வஹாஃ] கே

27 ர[ணக்ஷா] வ

28 திரு ః [ஸ்]ஹஜ

29 ஷ்த்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | 2+3-ஆம் ஆண்டு |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 10-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV, பகுதி II, பக்கம் 118 |
| அரசு : | பாண்டியர் | | |
| மன்னன் : | மாறஞ்சடையன் | ஊர்க் கல்வெட்டு எண் | 94 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், ஆனைப்பாறை

குறிப்புரை : கொழுவூர்க் கூற்றத்து கீழ்குண்டாற்று வெளியாற்றூரைச் சேர்ந்த தென்னவன் ஸ்ரீ தொங்கப் பல்லவரையன் என்பவர், சுசிந்திரத்து எம்பெருமானுக்கு நிலமும் பொன்னும் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோமாறஞ்சடையர்க்கு யாண்டு இரண்டு இதனெதிர் மூன்று இவ்

2 வாண்டு மிதுன ஞாயிற்றுத் திருச்சிவிந்திரத்து எம்பெருமான்

3 ஸ்ரீ காரியமாராய்கின்ற மூல[பர]டைச் சபையோம் கொழுவூர்க் கூற்ற

4 த்துக் கீழ்குண்டாற்று வெளியாற்றூர் தென்னவன் ஸ்ரீ தொங்க பல்லவரைய

5 ஞயின அரையன் விழுப்பேரரையனல் பொன் கொண்டு இத் திருச்சி

6 விந்திரத்து ஸ்ரீ கோயிலில் ப்ராஹ்மணர் உண்பதாக இவன் வைச்

7 ச திருவக்கிரத்துக்கு விற்றுக் குடுத்த பூமியாவது எம்பெருமான்

8 தேவதானம் நிருபசேகரவளநல்லூர் வடக்குச் சமைந் நில

9 ம் இதனுக்கு கீழெல்லை ஆற்றுக்கு மேக்கு தென்னெல்லைக்கும்

10 மணலுக்கும் வடக்கு நந்தவனவிருத்திக்கும் இதன் வடதலைத் து

11 டவலுக்கும் கிழக்கு இத்துடவலுக்கும் யாலைக்காலுக்கும் ம

12 ருதகுண வாய்க்காலுக்கும் வடக்கு தைச்சருங் கொல்லருங் குடி

( திருப்பவும் )

13 இருக்கின்ற கொட்டில்களுக்கும் திருவேங்கட வாய்க்காலுக்கும் கிழ

14 க்கு ஆற்றுக்கு தெற்கு இவ்வெல்லை நடுவு கிடந்தமைந் நி

15 லமும் திடலும் தக்கிசும் 'இறையவுக்களும் நீர்க்கக்குத்தி வ

16 யக்கி மண்டு நீர் பாயப் பண்ணினமையில் இவ்வரையன் விழுப்பே

17 ரரையன் வைத்த திருவக்கிரம் பத்துக் கலமும் முட்டாதே உண்
பதா

18 க இப்பூமி யிற்றுக் குடுத்தோம் பரடைச்சவையோம் தென்னவன்
சி

19 ரி தொங்கப் பல்லவரையனுயின அரையன் விழுப்பேரரையனுக்கு
இ

20 ப்பரிசே இவன் அடி உறை தந்த பொன் கொண்டு அமரபுசங்

21 கப் பெருமாளுக்குத் திருமுடியும் திருவாபரணமும் பண்ணுவி

22 ச்சு அபிஷேகஞ் செய்விச்சோம் மூலர் பரடைச் சவையோம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 95 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கருடாழ்வார் சன்னதியின் வடக்குப் பக்கத் தூணின் சிலே.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. சுசீந்திரமுடைய நாயனுர்க்குப் பிரதோஷம் செய்தல், திருவிழாவில் திருக்கண் சாற்றுதல் ஆகியவற்றுக்கு ஆகும் பணம் அறுபத்திரண்டுக்காக நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஷ . . ரு . . ட பிர
2 தோஷம் ஒன்றுக்கு
3 . . ழ . . . . . . . . . .
4 . . . . . . . வன்
5 ன் . நீர் . . . . ட்டி ய
6 ங்குடி . . . . சிவிந்திர
7 த்து . . . . . ஆக பிர
8 தோஷம் க க்கு ய உ
9 ஆக ஸ்ரீ க க்கு [மீ] மஉ
10 க்கு பிரதோஷம் [உ]மரு
11 க்கு ய ருமை திருவுளா
12 வுக்கு திருக்கண் சா
13 ற்றுக்கு ய மஉ ஆக
14 ய சுமஉ க்கு நாம் இ
15 வர் சுயாப்பிய
16 மாகத் திரிச்சுக் குடு
17 த்த நிலமாவது மேற்படி
18 நாட்டு பறக்கை[1] . . . .

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | |
|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் |
| ஊர் : | சுசீந்திரம் |
| மொழி : | தமிழ் |
| எழுத்து : | வட்டெழுத்து |
| அரசு : | சோழர் |
| மன்னன் : | முதலாம் இராஜராஜன் |
| ஆட்சி ஆண்டு : | 14-ஆம் ஆண்டு |
| வரலாற்று ஆண்டு : | கி. பி. 999 |
| இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| முன் பதிப்பு : | தி. தொல். வெ. தொ. IV பகுதி II, பக்கம் 129 |
| ஊர்க் கல்வெட்டு எண் | 96 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், ஆனைப்பாறை. [கைலாசநாதர் சன்னதிக்கு வெளிப் பக்கம்].

குறிப்புரை : இராஜராஜ வளநாட்டுப் பிரமதேயம் சுசீந்திரத்து எம்பெருமானின் தேவதான நிலங்களில், மூவேந்த வேளான் சொற்படி வரியை உயர்த்தி அதனை கோயிலுக்குச் செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ காந்தளூர்சாலை கலம[று]த்து
2 கங்கபாடியும் நுளம்பபாடியும் தடி
3 கை வழியும் வேங்கை நாடும் கொ
4 ண்ட கோ ராஜராஜகேசரி பன்ம
5 ற்கு யாண்டு பதிநாலு இவ்வா
6 ண்டு விருச்சிக நாயறு இராஜராஜ
7 வளநாட்டு நாஞ்சி நாட்டு ப்ரஹ்ம தே
8 யமு ஸுசீந்திரத்து எம்பெருமான்
9 தேவதானம் நிருபசேகர வளநல்லூ
10 ர்ப் பால் தென் வளநல்லூர் முன்
11 கீழ்க்காராண்மை உடைய குடி
12 கள் தாயதி உடையார் உடைய
13 நிலங்கள் பெரியான் மூவேந்த வேளா[ன்] சொல்ல நாஞ்சி
14 நாட்டூர்கள் [நிலம் உடையன] மீயாட்சி உடையார்க்கு

( திருப்பவும் )

15 க்கடன் அட்டும் . . . [விளை]ஞ்ச நிலத்தால் மாத்தால் முக்க

16 லம் அட்டிவரும் நில[ங்]க[ளையு]ம் பின்னையும் பெரியான் மூவே

17 ந்த வேளாரேய் சொல்ல 'விளைஞ்ச நிலத்தால் மாத்தால் முக்க

18 லனே தூணி நெல்லு [கலம்] இச் சொத்தை முறைபடி நீக்கி தே

19 வர் பண்டாரக்காலா[ல்] அஞ்ஞாழி நாராயத்தால் கோயிலுக் கேய் கு

20 ணந்து இட்டு அளந்து குடுப்பார் பூவழி முக்கலனேய் தூணியும்

21 கடன் பற்றுத நிலத்துத் தேவர்கர்ம்மிகள் கண்காணித்து வருவார்

22 களாவார் இப்பரிசு இது அன்றென்று விலக்குவார் திருவாணை மறுத்தா

23 ர் படுத்தண்டம் பட்டு [சை]வ தர்ம்மத்தைச் சிவ தர்ம்மத்[தை] இ

மாவட்டம் : கன்னியாகுமரி

வட்டம் : அகத்தீஸ்வரம்

ஊர் : சுசீந்திரம்

மொழி : சமஸ்கிருதம்

எழுத்து : கிரந்தம்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 15-16-ஆம் நூற்றாண்டு

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 97

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், நந்தி சன்னதியின் வெளியில் உள்ள வடக்குப் பக்கத் தூணின் சிலை.

குறிப்புரை : கல்வெட்டின் கடைசிப் பகுதியே உள்ளது. ஹேஸதீக்ஷிதர் என்பவர் சுசீந்திரத்து அரங்கநாதப் பெருமானுக்கு ஆற்றிய சேவையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 யழவாவெ்யூஜ[ணு]
2 ஹெரபவெழகுஹ்ழ
3 ஹெஸதீக்ஷிதழ
4 ரமஙநாயொ ஹெ
5 ஜ்ஞூஹ்ராணழகுஹ்ழ
6 ஹெஸதீக்ஷிதழ
7 சிவிந்திரத்து சிற்ருச்
8 சுரன் . . . . தீக்ஷிதர்

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1968 / 228

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 710<br>கி. பி. 1534 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | திருவிதாங்கூர் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 89/1096 |
| மன்னன் : | வீர உதைய மார்த்தாண்ட வர்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 98 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கைலாசநாதர் சன்னதியின் உள் பாறை.

குறிப்புரை : செயதுங்க நாட்டு சங்கரநாராயணன் வென்று மண் கொண்ட பூதலவீர உதைய மார்த்தாண்டவர்மன் திருப்பாப்பூர் மூத்தவர், உட்கோயிலில் எழுந்தருளியிருந்தபோது சுசீந்திரமுடைய நாயனாருக்குத் தாழைக் குடியிலிருந்து சில நிலங்களைத் தேவதானமாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 அருளிச் செயல் நயினர் சிவிந்திரமுடைய நயினர் கோயில் சபையார் தா

2 னத்தாற்கு எழுநூற்று ஒருபதாமாண்டு மாசி மாத [அ]ஞ்சாந் தெயதி அமர பக்கத்து

3 திறையோதெசியும் நாயறுட்சையும் பெற்ற உத்திராடத்திளெள் செயதுங்க நாட்டு சங்கர

4 நாராயணன் வென்று மண்கொண்ட பூதல வீர சிறி வீர உதைய மார்த்தாண்டவன்மர் திருப்பா

5 ப்பூர் மூத்தவராய நாம் உடையார் சுசீந்திரமுடைய நயினாற்கு தேவதானமாக [வி]ட்ட தாழைக்குடி

6 ப் பற்றில் மீனமங்கலம் உள்ளிட்ட பற்றும் குளமும் புரவும் இ நான்கெல்லைக்கு உட்பட்ட

7 கரையு[ங்] கரைக்காடும் இதன் . . . டு திருவரு . கி ஒன்று உள் ளிட்ட

8 பற்றும் குளமும் புரவும் நான்கெல்லைக்கு உட்பட்ட கரையும் கரைக்காடும் ஆக

9 குளம் இரண்டிநுல் உள்ள நிலத்துக்கு மேல் வாரம் உவாதி இன போகம் மற்றும் நாம்

( திருப்பவும் )

10 கொள்ளும் முறைபாடு எற்பேற்ப்பட்டாய . . . ப் பிறாத்திக்கும் நாள் ஒன்றுக்கு அமுது

11 படி இரு நாழியாக சிலவு வைப்பித்து போதும்படியும் ஆண்டு ஒன்றுக்கு சந்தனம் பல

12 ம் அஞ்சும் மார்கழி மாதத்தில் திருச்சுவிந்திரத்து நயினர் கோயிலில்

13 ஒருத்திக் குறி வாங்கிக் கொள்ளும்படியும் விட்டுக் குடு

14 த்தமைக்கு அப்பற்றில் குடிமகன் ஆய்யத்தில் அய்யப்பன்

15 ஆதிச்சன் கைக்கொண்டு சிலவும் வைப்பித்தது ஆண்டு ஒன்றுக்கு

16 சந்தனம் பலம் அஞ்சும் மார்கழி மாதத்தில் திருநாளுக்கு

17 கோயிலில் மேற்படி ஒருத்திக் குறியும் குடுக்கும்படி எழுநூற்று ஒருபதாம்

18 ஆண்டு மாசி மாதம் அஞ்சாந்தெயதி உட்கோயிலில் நாம் வீடாய் இருக்க குடு

19 த்த அளவுக்கு இவ்வகைப்படியே ஆசந்திரதாரவர் செல்வதாக கல்லிலும்

20 செம்பிலும் வெட்டி இத்தரகு பிடிபாடாக [சில]வும் வைப்பித்து சந்தனம்

21 பலம் அஞ்சும் திருநாளுக்கு ஒடுக்குவித்து கொண்டு குறியும் குடு

22 த்து போதும்படியும் பாற்க இப்படிக்கு இராமன் இராமன் எழுத்து இந்த எழுத்து

23 வெட்டினனேன் சிற்ப்பி அய்யன் தெண்டி ஈச்சுரம்முடையன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 99 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், அலுவலக மண்டபத்தின் கிழக்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : சுசீந்திரத்திலுள்ள கோயில் பழம் பெருமையுடைய நகரத்தின் திருக்கோயில் என்று குறிக்கிறது.

கல்வெட்டு :

1 தொன்னகர்
2 திருக்கோவில்

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 100

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், அலுவலக மண்டபத் தூண்.

குறிப்புரை : சுசீந்திரமுடைய நாயனுர் கோயிலில் உள்ள தெய்வ கன்னிகளில் சிறப்புக் குடியைச் சார்ந்த நாலாங்குடி நல்ல உமையின் மகள் பாப்பகுட்டி என்பவள் கொடை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 சிவிந்தரமு
2 டைய நயினு
3 ர் கோயிலில்
4 தெய்வ கன்னி
5 களில் சிறப்பு
6 க்குடி நாலா
7 ங்குடி நல்ல
8 உமை மகள்
9 பாப்ப குட்டி
10 சதா சேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 101 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் அலுவலக மண்டபத் தூண்.

குறிப்புரை : ஈரங் கொல்லி பிச்சன் என்பவர் கொடை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஈரங் கொ
2 ல்லி பிச்ச
3 ன் மாலை
4 சதா சேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 102 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கோபுரவாயிலின் தெற்குப் பக்கத் தூண். (உண்டியல் அருகில்)

குறிப்புரை : நாகர் என்பாரின் மகள் உமை நாச்சியார் கொடை அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 நாகர் ம
2 கள் உமை
3 ய் நாச்சி
4 யார் சத
5 ர சேவ[வ]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 103 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கோபுர வாயில் வடக்குப் பக்கத் தூண். (தேவார பாடசாலை அருகில்)

குறிப்புரை : இடத்தறையைச் சேர்ந்த தேவன் தேவன் என்பான் அளித்த கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 இடத்தறை
2 த் தேவன் தே
3 வன் சதா சே
4 வை[வ]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 104 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கொன்றையடி சன்னதியில் வடக்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : நல்லசிவன் என்பவர் செய்த திருப்பணியைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொலாவிறத் தி
2 ருக்கோவில்
3 பண்டாரப் பி
4 [ற]தாமன் விக்கி
5 ருமன் அடிக்களுக்
6 கணக்கு தானத்தி
7 நல்லசிவன் செ
8 வித்தத் . . . .
9 . . சேவை . . .
10 துணை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 795<br>கி. பி. 1619 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொல். அ. 103/1096, 60/1092 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 105 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கோபுர வாயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : கோயில் ஸ்ரீ காரியம் செய்பவர்கள் சுசீந்திரமுடைய நயினுர்க்குக் கார்த்திகை மாதத்தில் கார்த்திகைத் திருவிழா நடத்துவதற்கும், சொக்கப்பனே எரிப்பதற்கும் அளித்த கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொல்லம் எாகூ௯ரு ஹூ காத்திகை ட ம் ௮ ௨ உடையார் சிவிந்திரமுடை
2 ய நயினுர் கோவிற் சீபண்டாரக் காரியஞ் செய்வார்களோம் ஆ
3 ளுரான விக்கிறம சோழ பாண்டியபுரத்து முடிவிளங்கும் பெருமாள் சங்[கர]
4 நாச்சியாருக்கு கல்வெட்டிக் கொடுத்தபடி மேற்படியாள் சிவிந்திரமுடை
5 ய நயினுருக்குக் காத்திகை மாதத்தில் திருக்காத்தியலுக்குச் சிறப்பஞ் சொற்
6 கப்பனேத் திருநாளும் நடக்கும் வகைக்கு ஷெயாள் கணக்கர் கப்பிற்க்
7 கையில் மதுசூதனன் கிட்டிணனேடு சே . . . . . . இடலாய்க்குடிப்ப
8 ற்றில் நயினுர் சிபண்டாரத்துக்கு மேல் வாரம் ஆறும் உ௰ தடிவிலேக் கணக்கிலக்கை
9 ஆண்டொன்றுக்கு ௬ ௯ இதுக்கு மேற்படியாள் ௯ா பணங் குடுத்து எழுதிவி
10 த்த ஓலேயும் நயினுர் சிபண்டாரத்தில் தந்து காத்திகையில் காத்தியல்

(திருப்பவும்)

11 ச் சிறப்பம் சொற்க்கப்பனைத் திருநாளும் ஆடி காத்திகையை நடத்துவிச்சு

12 ஷி [மாதம் க க்கு]ச் சுவிந்திரியம் நயினார் சீபண்டாரத்தில் நின்றும் ஒரு பருவ

13 ட்டமும் ஒரு மாக்கலஞ் சோறும் ஒரு கிண்ணி சந்தனமும் ஷியாள் வ

14 கையாக வந்த பேர்கள் கையிற் கொடுத்துத் திருநாளும் நடத்திவரு

15 வோம் ஆகவும் இந்தப்படியே ஆசந்திரதாரவற் சந்ததிப் பிறவேசமே

16 இந்தச் சுவாந்திரியங்களுங் கொடுத்து இந்தத் திருநாளும் நடத்துவோம்

17 ஆகவும் இதுக்கு முடக்கம் வருகில் வடக்கு வாசலில் இருந்து நடை முடக்கி

18 நடத்திவிச்சுக் கொள்வாராகவும் இந்தப்படிக்குக் கல்வெட்டிவிச்சுக் கொ

19 டுத்தோம் உடையார்

20 சிவிந்திரமுடைய நயி

21 னார் கோயிலில்ச் சீபண்

22 டாரகாரியம் செய்வா

23 ர்களோம் முடி விளங்கு

24 ம் பெருமாள் சங்கரநாச்சியாருக்கு

25 இப்படிக்குச் சீபண்டார

26 க் காரியஞ் செய்வார்

27 களில்ச் சீகாரியம் கோ

28 குன்றத்துத் தேவன் . . தன்

29 எழுத்து சீ காரிய கணக்கு மண்டி

30 யூர்ட் டன்டிவன்மர் எழுத்து

31 சீபண்டார கணக்குப் புல்லந்தோ

32 ட்டத்து [கரு]ணந்தன் எழுத்து

33 தவைக் கணக்குப் பெ[ரிய]

34 பெருமாள் அருதகுடி

35 பெருமாள் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | நாயக்கர் | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 106 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கோபுர வாயிலின் தெற்குச் சுவர்.

குறிப்புரை : பெரிய இராமப்ப நாயக்கர், சிறிய இராமப்ப நாயக்கர் ஆகியோர் தங்களது குலம் அபிவிருத்தி அடையவேண்டும் என்பதற்காகவும், தங்களது முன்னோர், தங்கள் மக்கள், பெயரப் பிள்ளைகள் ஆகியோர் உடல் நலத்துடன் விளங்க வேண்டும் என்பதற்காகவும், தாங்கள் செய்த பாவங்களுக்கெல்லாம் பரிகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், சுசிந்திரமுடைய திருவேங்கட விண்ணவர் எம்பெருமானுக்கும், தாணுமாலயப் பெருமாளுக்கும் செய்வித்த திருப்பணியைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ப ஹஃஸ்து சாதாரண வருஷம் ஆவணி ய ம் எ உ ஸ்ரீ மது அண்ணநேந்தல்
2 கொள்ள[வ்]வும் பெருமாள்[1] நாயக்கர் மகன் திப்பைய நாயக்கர் திப்பைய நாயக்கர்
3 மகன் வசவண நாயக்கர் வசவண நாயக்கர் மக்கள் பெரிய இராமப்ப நாயக்கர்
4 சி[றி]ய இராமப்ப நாயக்கர் அவர்கள் கோத்திறம் அபிவிறுத்தி ஆகவேணும்
5 என்றும் பண்ணின பாவங்கள் எல்லாம் மோசநம் ஆகவேணும் என்றும்
6 புத்திற பவுத்திற பாரம்பரை ஆக சுகத்திலே இருக்க வேணும் என்றும்
7 சுவாமி சுசெந்திரம் தென் திருவேங்கட விண்ணவர் எம்பெருமான் சன்ன
8 தியிலும் தாணுவாலயப் பெருமாள் சன்னதியிலும் பண்ணின சதா சேர்வை உ

---

1. இச்சொல் குறி ஒன்றினால் காட்டப் பெற்றுள்ளது.

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசிந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் 950 கி. பி. 1774
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 107

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கோபுர வாயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : நிலம் விற்பனை செய்யப்பெற்றதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 திருவனந்தபுரம் புத்தன்
2 சந்ந[தி]யில் கொட்டயடி வி
3 ளாகத்து விலைக் கணக்கு பல்ப்ப
4 னுபன் பல்ப்பனுபன் பூ
5 விற்ப விலைக்கு [தடி] . சா [illegible]வறு[1]
6 . . கா(ந)ந்ம் ௯௱ அப்பசி
7 மாதம் ௰சு உ

---

1. ஆறு அரையே அரைக்கால்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 766<br>கி. பி. 1590 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொ. அ. 59/1092 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 108 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கோபுர வாயிலின் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : சுசீந்திரத்தைச் சார்ந்த திருவழுதி உண்மை நம்பி என்பான், தர்மகர்த்தர் அருளானந்த பண்டாரத்திடமிருந்து நாற்பது பணம் பெற்றுக்கொண்டு, அதற்கு ஈடாகச் சுசீந்திரமுடைய நாயனார் கோயிலின் கோபுர வாசலில் வலது பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் நந்தீச்சுரருக்குத் திருவிளக்கு ஒவ்வொரு நாளும் எரிப்பதாக ஒப்புதல் அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கொல்லம் ௭௱௬௰௬ (ஞ) மார்கழி மீ ௰௩ உ
2 நாஞ்சிநாட்டு சூழ் சிவிந்திரத்து (சி)வதீயரில்
3 திருவழுதி உண்மைநம்பியாரென் தன்மக
4 த்தர் அருளானந்த பண்டாரத்துக்கு முறியி
5 ட்டுக் குடுத்த பரிசாவது மேற்படியார் வழி
6 (யா)யாக தந்த ௪௰ பணம் இப்பணம் நாற்பதுக்கு
7 ம் உடையார் சூழ் சிவிந்திரமுடைய நயினா
8 ர் கோயிலில் கோபுர வாசலில் வலது பிறத்
9 தில் எழுந்தருளியிருக்கும் நந்தீச்சுரர் த
10 ம்பிரானுற்கு தினஞ் சந்தி . காலந் திருவிள
11 க்கிட்டுப் போதுவேனாகவும் இதுக்கு முட
12 க்கம் வருகிற கோயிமை சோதிச்சுத் திரு
13 விளக்கிடுவிச்சுக் கொள்ளுமாறும் இவ்வ
14 கைப்படியே ஆசந்திரதாரவற் சந்ததிப்பிற
15 வேசமே திருவிளக்கு நடத்திப் போதும் வகை
16 க்கு குறியிட்டுக் குடுத்தமைக்கு இப்படிக்கு திரு
17 வழுதி உண்மை நம்பியார் எழுத்து இப்படி இ
18 வர் சொற்படிக்கு கண்டியர் ஈச்சுர நா[ரா]யணன்
19 பெருமாள் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 796<br>கி. பி. 1620 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொ. அ. 101/1906 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 109 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கோபுர வாயிலின் வடக்குச் சுவர்.

குறிப்புரை : நாஞ்சி நாட்டுத் தேரூர் நாகமணி மகள் நாகம்மை, கல்லிலான பாவை விளக்கு ஒன்று அமைத்து அதனை எரிப்பதற்கு நாள் ஒன்றுக்கு ஆழாக்கு எண்ணை என்ற விகிதத்தில், ஐம்பது பணம் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ௱௱௰௬ ஆடு மார்கழி மீ [௩] ஓ நாஞ்சி நாட்டில் தேரூரில்
2 நாகமணி மகள் நாகம்மை கணக்காக தெந்தேயத்தில்
3 இடது பிறத்து கல் உரு விளக்கும் வைப்பிச்சு நாள் ஒ
4 ன்றுக்கு எண்ணை உழு[1] ஆக விளக்கு எண்ணைக்கு சி பண்
5 டாரத்தில் குடுத்த ய ௫௰ இந்த உவையத்தில் விள
6 க்கு முட்டாமல் நடத்தவும்

1. ஆழாக்கு

மாவட்டம் : கன்னியாகுமரி

வட்டம் : அகத்தீஸ்வரம்

ஊர் : சுசீந்திரம்

மொழி : தமிழும் சமஸ்கிருதமும்

எழுத்து : தமிழும் கிரந்தமும்

அரசு : விஜயநகர்

மன்னன் : விட்டலேசர்

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கொல்லம் 720
கி. பி 1544

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : தி. தொ. அ. 100/1096, 5/1111

ஊர்க் கல்வெட்டு எண் : 110

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில் கோபுரவாயிலின் வடக்குச் சுவர்.

குறிப்புரை : கொல்லம் 720-ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் கிருஷ்ண ஜயந்தியன்று விட்டலேசரும், அவருடைய தம்பியும் சுசீந்திரம் கோயிலில் இக்கோபுரம் எடுப்பித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . ரே: ஸ்ரீ . . . . . . . . . .

2 யவ ஸ்ஸெகத . . . . . . [ரூதெய]மொத்ரு ஸ்ழஹூந்த ஸெலாஉ வ

3 லா ஒதீஃவக: | ஙாஉஙாய திஉஉ. . ஸ்ரீ விடலெவெதி:
வாணக்கநாராயணஷூவராஹ வெளஶதிஷ்ய வதி

4 . . . கோ[லா]ஙழ . . திவெரஸிசொ . . ஸஜேத ஸ்ரீ விடலெய ஸ்ஹிதோநுஜேந ஸ்ரீ பாவிநெஹரே:

5 . . . தெஷ்ய காஙயாஉரஸ மொலாபழ உ பகாஷ்ழ தேராயி வஷழ ஷெஷ்டி ஸ்ரீ கொல்லம் எாஉம ஙூ ஆவணி உாஸழ

6 ஸ்ரீ கரஷ்ண ஜயந்தி பு[ண்]ணி[ய] காலத்தில் ரூதெர[ய] மோதருத்தில் வொஉவாரா ஒதீஃவகநாய் வாணக்கனாராயண

7 யரணீ வராஹ வெளராஶி தி . . . ஹோக: [ஸ்ரீ]வணுவியூாபக வாஷ்ணாரா ஒதிஷ்டாவக வெஙவணாயீரா

8 ஞந உண்ணிக்கத்திருவிண் . . . க இப்படியே . . . . . களோடும் கூடி இருப்பாராய் ஆரவீடி வா்க . .

9 . ராஜராஜராஜ திஉ . . . . . [வி]டலே . . . . . ங[ஷி]த .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 722<br>கி. பி. 1546 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | திருவிதாங்கூர் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 65/1092, 7/1111 |
| மன்னன் : | பூதல வீர இராமவர்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 111 |

இடம் : தாணுமாலயப் பெருமாள் கோயில், கோபுர வாயிலின் வடக்குச் சுவர்.

குறிப்புரை : செயதுங்க நாட்டு சங்கரநாராயணமூர்த்தி வேளைக்காரன் என்ற பெயருடைய வென்றுமண்கொண்ட பூதல வீர இராமவன்மர், பெருமாள் தென் திருவேங்கட விண்ணவர் எம்பெருமானுக்கு அமுதுபடிக்கும், திருவாராதனைக்குமாக பணமும், நெல்லும் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் ௭௱௨௰௨ ௵ துலாஞாயற்று பூறுவபக்கத்து துதிகையும் மங்கல
2 வாரமும் பெற்ற அனுழத்தினாள் செ[ய]துங்க நாட்டு சங்கரநாராய ணமூற்த்தி வே[ளை]க்காறன் வென்றும
3 ண்கொண்ட பூதலவீர இராமவன்மர் என்று பேருடைய செ[ய] துங்க நாட்டு மூத்தவராய நாம் நயி
4 னார் சிவிந்திரமுடைய நயினார் கோயிலுக்கு சீகாரியமும் சீகாரிய கணக்கும்மொழிய நயினார் [தேசமாய்]
5 உள்ளதுக்கெல்லாம் கேழ்வியும் ஆக்கினையும் நாளது முதலுக்கு தவிர்த்து இதிலுண்டான கேழ்வி வுடை
6 மையு[ம்] ஆக்கினை உடைமையும் ஆண்டு ஒன்றுக்குக் கோட்டை இருபது இக்கோட்டை இருபதுக்கும் திரு
7 நாள் படிக்கு பணமும் நெல்லும் உள்ளபடியும் விட்டலேச்சுர மகாராசாவின் திருநற்செத்திரமான உரோ
8 கணி நற்ச்செத்திரத்தில் பெருமாள் தெந்திருவேங்கட விண்ணவர் எம்பெருமான் அமுது செய்ய சிற
9 ப்புக்கும் பாயிசத்துக்கும் திரு ஆராதனை கூடினால் பிறத்தே சிவ லிப்பிறகாரத்திலே எழுந்தருளுகிற
10 வகைக்கும் விட்டுக் குடுத்தோம் நயினார் தேசமாய் உள்ளதுக்கு எல்லாம் வயிராவியையும் மு

( திருப்பவும் )

11 றையம்பிள்ளையையும் நயினார் சுசீந்திரமுடைய நயினார் ஆண் வாளாகப் பரித்துக் கொள்ளும்

12 படி எழுநூற்று இருபத்திரண்டா மாண்டு அற்பசி மாதம் இருபத் தாருந் தெயதி மலைமண்டலத்து

13 தலைக்குளத்தில் வீடாய் இருக்க கற்பித்த அளவுக்கு ஆசந்தி[ர] தாரவற் செம்பிலும் சிலையிலும் வெ

14 ட்டிப் பரிப்பித்துக் கொள்ளவும் இப்படிக்கு கணக்கு வேங்கடத் தப்பன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சக ஆண்டு 1611<br>கொல்லம் 865<br>கி. பி. 1689 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | சுசீ.கோ.பிற்.எண். 87 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 112 |

இடம் : ரெட்டித் தெருவிலிருக்கும் குலசேகரப் பெருமாள் கோயிலின் முகமண்டப நுழை வாயிலுக்கு மேல்.

குறிப்புரை : கல்வெட்டின் முதற் பகுதியே உள்ளது. சுசீந்திரத்துக்கு வீரகேரளச்சதுர் வேதி மங்கலம் என்ற மற்றொரு பெயரும் வழங்கி வந்தமை இதன் மூலம் தெரிகிறது.

கல்வெட்டு :

1 ஶுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் ௲௬௱௰௧ இதன் மேல் செல்லா நின்ற கும்ப வியாழம் துலாச் சநி சு

2 க்கில வெருஷம் கொல்லம் ௮௱௬௰௫ ஆண்டு மாசி மீ ௨௰௮ உ அபர பட்ச்சத்து ஏகாதெசியும் சோம வாரமும் சுபயோகமும்

3 ஸிம்ஹ கரணமும் பெத்த உத்திராடத்து நாள் செய்த கல்வெட் டாவது நாஞ்சிநாட்டு சுசீந்திரமாந வீரகேரளச்சதுர்வேதி . . .[1]

1. கல்வெட்டின் மற்றப் பகுதி கிடைக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் 17-18 ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 113 |

இடம் : ரெட்டித்தெரு குலசேகரப்பெருமாள் கோயில் முகமண்டபத்தின் மேல்பகுதி.

குறிப்புரை : உமையம்மை, இராமலிங்கன், சிவசாமி ஆகியவர்கள் இம்முக மண்டபத்தை எடுப்பித்ததைக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 உமை அம்மை ஸஹா ஸேவை
யிராமலிங்கன் ஸதா ஸேவை
சிவகாமி ஸதா ஸேவை ஸாஹஸ்த்து

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 17-18 ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 114

இடம் : ரெட்டித் தெருவிலிருக்கும் குலசேகரப் பெருமாள் கோயிலின் முகமண்டபத்தின் மேல்.

குறிப்புரை : தாணுவன், சுப்பிரமணியன் ஆகியவர்கள் முகமண்டபம் எடுப்பித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 தாணுவன் ஸஹா ஸேவை சுப்பிரமணியன் ஸஹாஸேவையில் முக
மண்டபம் செய்வித்து முகிப்பித்தான் தெய்வங்களடி[யான்]

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 115

இடம் : ரெட்டித் தெருவிலிருக்கும் குலசேகரப் பெருமாள் கோயில் முகமண்டபத்திலுள்ள தெற்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : புத்தில்லத்திலுள்ள பாரத்வாஜ கோத்திரம், ஆபஸ்தம்ப சூத்திரத்தைச் சேர்ந்த தெய்வங்களடியான் தாணுவன் என்பான் இத்தூணைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 புத்திலத்து ஸாரத்[வாஜ ேகா]
2 த்ரத்து ஆவஸ்த்ஂபஸ ஸூ
3 த்ரத்து பசும்யாமத்து தெ
4 ய்வங்களடியான் தா
5 ணுவன்
6 சேவை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டு. |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 116 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : ரெட்டித்தெரு குலசேகரப்பெருமாள் கோயில் முகமண்டபத்தின் வடக்குப் பக்கத் தூண்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒருபகுதியே உள்ளது. விண்ணவரெம்பெருமானின் சன்னதியைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . மண்டபம் . . .
2 ஷெி அகரத்து கேரள
3 விண்ணவரெம்பெ
4 ருமானுர் சந்னதி

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கொல்லம் 404
கி. பி. 1228
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : தி. தொல். வெ. தொ. VIII, பக்கம் 35-36
ஊர்க் கல்வெட்டு எண் : 117

இடம் : துவாரகை கிருஷ்ணன் கோயில், உண்ணாழியின் தெற்குப் பக்கச் சுவர் முதல் பட்டி (மேல்).

குறிப்புரை : குளம் ஒன்றைக் கொடையாக அளித்து அதிலிருந்து நீர் கொண்டு விளைகின்ற நிலங்களிலிருந்து கடமை வரி வசூலிக்கப் பெற்றதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்ல[ம்] ௪௱௪ மாண்டைத் துலா ஞாயிறு [க]
சென்ற நாள் பூர்வபக்ஷத்து ஸபையோம் ஸ்ரீமத்வாரகை [எம்]
பெருமானுர்க்குத் திருவிளை[ட]யாட்டமாக ஸ்ரீ கோவிந்த

2 ஜீரஹிடாரர் இருந்தருளி யெட[த்து] நாங்கள் யுதகாநம் பண்ணிக்
கொ[க]ாடுத்த குளமாவது கீழ்கரை ஸூஹஸோம் கண்ணன் குள
[முஞ் சிற்]றுலங் குளமும் இதில் கண்ணன் குளத்தில் செ

3 ல் கால்க[ய்] திருத்தி விளை[கின்]ற நிலத்துக்கும் சாவிபாழ் நீக்கி
விளைஞ்ஞ நிலத்துக்கு மாத்தால் இரு கல நெ[ல்] கடமை
கொள்வாராகவும் இனித் திருத்திவிளை .

4 யு நிலத்துக்கு ஒட்டின இளவடை காலங்[கூ]டினுல் சாவி பாழ்
நீக்கி மாத்தால் இருகல ௳ [1] கடமை கொள்வராகவும் சிற்றுலங்
குளத்துக்கு ஸபையார் உதகாநம்பண்ணிக் கொ

---

1. நெல்.

(திருப்பவும்)

5 டுத்த ஒ மாத்தால் இருகலமுங் கேசவன் சீராமனுக்கும் நாராயணன் சீராமனு ஞாங்ஙள் ஸ்ரீஜாரகை தேவர்க்கு மாத் தால் கல்பிச்சு ஒ கூப[1] ங் கூட ஒ ௨ா[2] கூப ம் செல்

6 கால் நிலத்தில் சாவி பாழ் நீக்கிக் கடமை கொள்வாராகவும் [।] இனித் திருத்திவிளையு நிலத்துக்கு இளவடைகா[ல]ங் கூடினால் மாத்தால் ௨ா னே கூப ஒ கடமை கொ

7 ள்வாராகவும் இக்குளமிரண்டும் இக்கால முதல் ஸ்ரீ மொவிஷ்ணுஆாஸிடாரர் பவிஷ்டர் கைய்யால் தரவு கொண்டு . . மைக் குடு[ப்பா]ராகவும் இம் முதல் கொண்டு எம்பெ

8 ருமானுர்க்குப் புலரியெத்திருமொரது செல்விதாகவும் இச்சோறு வடக்கினை திருநந்தாவனமிறை ச . . . [பு]ங்கெட்டன்றவன் பவிஷ்டை[ரை]க் கொண்டு இச்சோறு

9 எடுப்பி . . . . கவும் ஸ்ரீமொவிஷ்ணுஆாஸிடாரர் இருந்நருளா தொழிகில் இக்கோயிலிலிருந்நருளும் ஸ்ரீ பொதங்ஙள் பவிஷ்டன் கையால் தரவு கொண்டு கடமை குடுப்பாராகவும்

10 இப்படி அநுஷ்டா[ித்தவல்] செல்விதாக ஸபையெம் பெருமக்கள் அருளிச் செய்ய கல்வெட்டினென் இவூர் தச்சாசாரியன் பதிநெட்டு நா[ட்டா]ன் குலமாணிக்கமான ஸ்ரீ பற்பனுப ஆசாரி எழுத்து [॥].

---

1. ஒன்பது மரக்கால்.
2. இரண்டு கலம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 406<br>கி. பி. 1230 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 70/1086 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 118 |

இடம் : துவாரகை கிருஷ்ணன் கோயில், உண்ணாழியின் வடக்குப் பக்கச் சுவரில் முதல் பத்தி.

குறிப்புரை : சுசீந்திரத்து மஹாசபையும், சபையும் கோவிந்த ப்ரஞ்ஞ படாரர் அவர்கள் முன்னிலையில் கூடி, துவாரகை கோயிலுக்குத் தாங்கள் வைத்த பெருஞ்சாந்தி ஸ்வாதந்தர்யம் கோவிந்த ப்ரஞ்ஞ படாரர் ஆளுகையின் கீழ் விட்டுக் கொடுத்தது பற்றியும், பின்னர் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பெரிய திருவடிக்கு வேண்டியோரைக் கொண்டு நடத்திப் போதும்படி கூறியது பற்றியும் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்ல[ம்] [சா]சு மாண்டுக் கன்னி ஞாயிறு ௰௧ சென்ற ஞாயிறு முத்

2 தரமிந்நாளால் ஸுசீந்த்ரத்து ஸபையும் மஹாஸபையுங் கூடி கோவிந்தப்ரஜ்ஞபடாரர் திரு

3 வடி இருந்தருளியெடத்திருந்து ஸ்ரீத்வாரகை நாம்வச்ச பெருஞ் சாந்தி ஸ்வாதந்த்ர்யம் ஸ்ரீ பாதங்

4 ங்கள்க்கே சாந்திவச்சுக் கொள்ளுமாறு ஆசந்த்ரதாரவற் விட்டுக் கொடுத்தோம் கோ[வி]

5 ந்தப்ரஜ்ஞபடார திருவடிக்கு ஸ்ரீபாதங்களில் பின்பு திருவனந்தபுரத்து ஸ்ரீகாரியஞ் செய்தருளும் பெ

6 ரிய படார திருவடிக்குத் திருவுள்ளமாயோரைக் கொண்டு சாந்தி செய்வ்விச்சுக் கொள்ளுமாறு

7 கற்பித்தோ முன்பு சாந்திக்கு ஸுசீந்த்ரமுடையார் ஸ்ரீ பண்டாரத்தில் கொடுத்து வருநெல் அ ௱[1]

---

1. எட்டு கலம்.

( திருப்பவும் )

8 மும் ஸ்ரீ பாதங்ஙள் பரிக்ஷூர் கைய் வசங் கொடுத்து வருவிதாகவும் இப்படி ஆசந்த்ரதாரவற் விட்

9 டுக் குடுத்தோம் ஸபையோம் ஸோமிதேவஜூஹடார் திருவடிக்கு இப்

10 படி ஸபையோம் பெரு மக்கள் அருளிச் செய்யக் கல்வெட்டி னேன் இவ்வூர்

11 த் தச்சாசாரியன் பதினெட்டு நாட்டான் குலமாணிக்கமான ஸ்ரீபற் பஞப ஆசாரியெ[ன் எ]

12 ழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 1229 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொ. அ. 82/1091 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 119 |

இடம் : துவாரகை கிருஷ்ணன் கோயில் உண்ணாழியின் தென் மேற்கு மூலையில் உள்ள பாறை.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியில் கட்டடம் எழுப்பப்பெற்றுள்ளது. கோயிலுக்கு நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. ஸ்ரீ கோவிந்தப்ரஞ்ஞ படாரரும் ஸ்ரீசாளகிராம பகவானும் குறிக்கப்படுகின்றனர்.

கல்வெட்டு :

1 [வியா]ழ நின்ற மிதுன ஞாயிறு இரண்டு சென்று
2 [தி]கழும் இந்நாளால் ஸுசீந்த்ரத்து ஸ்ரீ த்வாரகை திருவாதி
3 ரையிற் கூடி இருந்து ஸுசீந்த்ரத்து ஸபையோம் ஸ்ரீ . .
4 . இருந்தருளியெடத்து செய்த [அவிரோத] . . சத்திமுக
5 ஸஹஸ்ரோத்தில் ஸ்ரீ த்வாரகை ஸ்ரீ கோவிந்தப்ரஜ்ஞ[படாரர்] திருவ
6 டி ஸ்ரீ ஸாளக்ராம பகவானுக்கு மடத்தில் . . . .
7 காராண்மையுட்பட தானமாகக் கொடுத்த ஸ்ரீ
8 . ன . க்கு கிழெல்லை பனைக்குளம் தென்னெல்லை
9 க்க . லெல்லை கண்ணூற்றுப் பொற்றை வட[வெ]
10 ல்[லை] நின்று கிழக்கு நோக்கி போகின்ற பெரு
11 குளத்தில் நீர் நக்கலும் இவ்வெல்லையுட்பட்ட
12 நிலத்திலுங் கரையிலும் நாங்கள் கொள்ளு
13 மிடத்தும் ஸ்ரீ ஸாளக்ராம பகவானுக்கு நி .
14 க்கின்னும் க்ஷேமமாக தானம் பண்ணிகு .
15 . யோம் இக்குளத்தில் நான்கெல்லையிலு .
16 த்தான பூமியைத்தான் இக்ராமத்திலுள்ளோரு
17 . கில் ஸ்ரீ த்வாரகை பகவானுக்கும் வேண்டட . .

(திருப்பவும்)

18 முஞ்சே அஞ்சு காணம் பொன்உஜும் வைப்பார .

19 புரத்தில் ஸ்ரீ காரியஞ் செய்தருளின்ற ஸடாரர் திரு . .

20 ச்சுக் கொள்விது இக்குளத்தில் கராண்மை . .

21 லவித்த இட்டுவாருளராகில் இவ்வண்ணம் . .

22 . . கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிச் . .

23 . . ஶிக்ஷுன்னு இப்ப . .

மாவட்டம் : கன்னியாகுமரி
வட்டம் : அகத்தீஸ்வரம்
ஊர் : சுசீந்திரம்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : தி. தொ. அ. 71/1086
ஊர்க் கல்வெட்டு எண் : 120

இடம் : துவாரகை கிருஷ்ணன் கோயில் உண்ணாழியின் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : இரணசிங்க நல்லூரைச் சேர்ந்த சங்கரநாராயணன் என்பவர், ஸ்ரீமத்துவாரகை மடத்தில் எழுந்தருளியிருக்கும் கோவிந்தப்ரஜ்ஞுபிடாரர் மாணுக்கர்க்கு நாள் தோறும் திருவமிர்து அளிப்பதற்காகச் சுசீந்திரமுடைய நாயனர் ஸ்ரீ பண்டாரத்தில் சனிதோறும் குறுணி இரு நாழி நெல் எடுத்துக்கொள்வதற்காக அதற்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு அளித்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மீனத்தில் வியாழ நின்ற கன்னி ஞாயிற்று இரணசிங்க நல்லூர்வாசிய[ா]ன சங்கரநாராயண[ன்] திருவிக்கிரமபுரத் தாழ்வார் திருவாசல் மாட[த்]தில் இ ஸ்ராஜத்தில்

2 ஸபையுங்கூடி மோவிந்தப்ரஜ்ஞுபிடாரர் திருவடி ஶிஷ்யர்க்கு முன்பு ஸுசீந்த்ரத்து ஸபையார் ஸ்ரீ மத்வாரகை எம்பெருமான் திருமுக் கால் வட்டத்து [ஏா]க்கு அ[னுபோக] கா[ரா]ண்மை

3 மயாக எழுதிச்சு கொண்ட சத்திமுகமும் ஶிஷ்யர் கையில் கொடுத்து இதின்னு வேண்டும் விலைமாவு[ங்] கையியிலே வீட றக்கொண்டு நீரோடு மட்டிகொடுத்தான் [இ]வ்

4 வூர் சங்கரநாராயணன் ஶிஷ்யர்க்கு இம்மார்க்கமே . . ஸ்ரீமத்வாரகை மடத்தில் இருந்தருளும் பிடாரர் திருவடி ஶிஷ்யர்க்கு புத்திவந் [தேசத்திஞ]ர் கொ

5 ண்டு அடிச்சு தளிப்பிச்சுங் கொண்டு என் . . . மு[டை]ய காராண்மை யோலையிலும் ஸுசீந்த்ரமுடைய நாயனர் கோயிலில் வடக்கினைச் சுற்று மண்டபத்தில் புறவாய்க்கா

(திருப்பவும்)

6 ல் வெட்டினபடி அதிகரிச்சுக் கொள்ளுமாறும் ஸபாவிஷ்ணுமுடைய நாயனர் ஸ்ரீ பண்டாரத்தில் திருவமிர்தின்னு நாளொன்றுக்கு டெ[1] குறுணி இரு நாழியாகச் சனிதோறும் அளப்பி

7 ச்சுக் கொண்டு செலவு செலுத்துவாராகவும் [இந்தப்]படியே ஸபாவிஷ்ணுத்து ஸபையார் எழுதிய காராண்மையோலையிற் பட்டபடியுங் கல்வெட்டிற் பட்டபடியும் இதின்னு வேண்டு

8 ம் விலைமாவுங் கையியிலே அறக்கொண்டு நீரோடு அட்டிக்குடுத்தேன் சங்கரநாராயணனென் மொவிஷ்வஜ்ஜீவிடார திருவடி ஸிஷ்ஷூர்க்கு

1. நெல்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 402<br>கி. பி. 1226 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | முன் பதிப்பு : | தி. தொ. அ. 69/1086 |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 121 |

இடம் : துவாரகை கிருஷ்ணன் கோயில், உண்ணாழியின் வடக்குப் பக்கச் சுவரில் முதல் பட்டி.

குறிப்புரை : சுசீந்திரத்துப் புதுமாடத்தைச் சேர்ந்தவனை சங்கரன் உருத்திரன் என்பான் சுசீந்திரத்துத் துவாரகை எம்பெருமானுக்கு நாள் ஒன்றுக்கு இரு நாழி உரி அரிசி செலவு செய்வதற்காக சுசீந்திரமுடைய மகாதேவர் தேவதானமான வடவளநல்லூரிலிருந்து ஒன்றரை மா நிலத்தைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ கொல்ல[ம்] ௪௱௨ மாண்டு கும்ப[த்து] [௬] சென்ற வியாழ வாட்சையுந் திருவோணமும் இ

2 ந்நாளால் ஸுசீந்த்ரத்துப் புதுமாடத்துச் சங்கரன் உருத்திரனேன் இவ்வூர் ஸ்ரீ மத்வாரகை எம்

3 பெருமானர்க்கு இருநாழி உரி செது அரி செலவு செல்விதாக தாநமாக கொடுத்த பூமியாவ

4 து ஸுசீந்த்ரமுடைய மஹாதேவர் தேவதாநம் வடவளநல்லூர் என்ன . . சந் நிலம் பழ[1]

5 க்கு கீழெல்லை மாடத்தின் வயல் தென்னெல்லை தென்கொடுங் கால் [மே]லெல்லை மடமுங் கரு .

6 ம்பனை வானவயல் வடவெல்லையுமாடம் இவிசைந்த பெருநான் கெல்[லை]யி னடுவு கிடந்த நி

7 ல தானமாக கொடுத்தேன் இ நிலம் மனுபவிக்குமிடத்து ஸுசீந்த்ரமுடையமஹ[ாதே]வர்க்கு மாத்தால் எண்

8 ணாழிக் காலால் ஸபையெழுதிய சத்திமுகத்தின்படி கடமை கொடுப்பாராகவு[ம்] . . . ர்க்கும் இப்படி கொடு

1. ஒரு மா அரை.

(திருப்பவும்)

9 ப்பர[ா]கவும் இந்நிலம் ஒரு மா வரையுங் காராண்மையுட்பட நீரே[ா]டு மட்டிக் கெ[ா]

10 டுத்தேன் சங்கரன் உருத்திரனென் மோவிஜவ்ருஜ்ஜிடார ஸிஷூன் கைய்யில்

11 இந்நிலம் ஸிஷூன் வஸம் கொடுத்து மேல்வாரங் கண்காணிச்சு கடமை நீக்கி

12 மிகிதி உண்டான டை[1] . . . . [2]

1. தெல்.

2. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 13 ஆம் நூற்றுண்டு. |
| ஊர் : | சுசீந்திரம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 122 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : துவாரகை கிருஷ்ணன் கோயில் உண்ணாழியின் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் நடுப்பகுதியே உள்ளது. பூமி சாத்தன் என்பானைப் பற்றிக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . காணி[யு]டைப் பூமி சாத்தன் பே[ப]

2 . . ப்பானுகவும் இப்படி செய்யும் வ .

3 . . வைப்பிச்சுக் கொண்டு இவனைக் . .

4 . . விப்பாராகவும் இப்படி இந்நிலம் .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | கன்னியாகுமரி | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | அகத்தீஸ்வரம் | வரலாற்று ஆண்டு : | கொல்லம் 400<br>கி. பி. 1224 |
| ஊர் : | சுசீந்திரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | தி. தொ. அ. 72/1086 |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 123 |
| மன்னன் : | — | | |

இடம் : துவாரகை கிருஷ்ணன் கோயில் உண்ணாழியின் வடக்குப் பக்கச் சுவர்.

குறிப்புரை : அரங்கன் கணபதி என்பான் ஸ்ரீமத்துவாரகை எம்பெருமானுக்கு ஒரு திருநந்தா விளக்கு எரிப்பதற்காக முன்னர் தந்த பிடிபாடு ஸ்ரீ பண்டாரத்தில் காணமல் போய்விடவே, ஸபையும், மஹாலோகரும், ஸ்ரீ காரியஞ் செய்கின்ற பள்ளிக்கல் நாயரும், பிடார திருவடியும் வேணாட்டு நாராயணன் திருவடியும் சுசீந்திர முடைய நாயனர் ஸ்ரீகோயில் கீழைத்திருவாசல் மாடத்தே கூடி கணபதி அரங்கன் அடிகளே திரும்பவும் அவ்விளக்குக்கான பத்துப் புதுக்காசுகள் தரவேண்டுமென்றும், அதைப் பெற்றுக்கொண்டு நந்தாவிளக்கு ஒன்று எரிக்கவும் சுசீந்திரமுடைய நாயனர்க்குத் திருப்பட்டம் ஒன்று சார்த்தவும் செலவு செய்ய வேண்டுமென்று தீர்மானித்ததையும், அவ்வச்சுக்காக நிலம் இறையிலியாக அளிக்கப்பட்டதையும் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் சா மாண்டை மகர ஞாயிறு உ௰உ சென்ற
புதன் உத்திரட்டாதி இந்நாளினுல் அரங்கன் மணபதி முன்பு
ஸ்ரீமத்வாரகை எம்பெருமான் ஸ்ரீகோயிலில் செலுத்திப் போரும்
திருநந்தாவிளக்கொன்றின்னும் உள்ள பிடிபா

2 டு ஸ்ரீபண்டாரத்தில் காணமையால் மணபதி திருவரங்க அடி[கள்]
இத்திருநந்தா விளக்கின்னெள்ள அச்சுப் பத்துந் தரவேணு
மென்று ஸஹையும் மஹாலோகரும் ஸ்ரீகாரியஞ் செய்யின்ற
பள்ளிக்கல் நாயரும் உடையார் ஸுசீந்த்ரமுடை

3 ய நாயனர் ஸ்ரீகோயிலில் கீழைத் திருவாசல் மாடத்தே [கூடி]
செறுமுக்கில் பிடாரதிருவடியும் வெண்ஙாட்டு நாராயணந் திரு
விக்கிரமநுங் கூடியிருந்த சன்னதியிலிருந்து ஸஹையும் மஹா
லோகரும் ஸ்ரீ காரியஞ் செய்யின்றவர்களு

( திருப்பவும் )

4 ம் இவ்வச்சுப் பத்துங் கைக்கொண்டு சுசீந்திரமுடைய நாயனுற்குச் சாற்தியருளுவான் திருப்பட்டஞ் சாற்த்துவித்து இவ்வச்சுப் பத்துக்கும் ஸ்ரீமத்வாரகை எம்பெருமானுக்குத் திருநந்தாவிளக் குச் செல்லுமாறு கற்பிச்சு விட்ட நிலம் இவ்வூர் வேட்கைக்

5 குளத்தின் கீழ் அமரபுயங்க வாய்க்காலுக்கு வடக்கு நாலாங்கண் ணுற்றுக் கூத்தப்புறம் இறையிலி தடி இரண்டு நிலம் காணி அரைக்காணியும் ஸ்ரீமத்வாரகை [ந]ம்பி கண்காணிச்சு மேல்வாரங் கொண்டு ஸ்ரீமத்வாரகை எம்பெருமான் ஸ்ரீகோ[1]

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.